




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:144 | 09-12-2025 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


# வந்தே மாதரம் ஒரு மந்திரம்; சுதந்திர இயக்கத்துக்கு உத்வேகம் கொடுத்த முழக்கம்

## பிரதமர் மோடி புகழாரம்

**புதுடெல்லி, டிச.9:**

வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டை கொண்டாடும் விதமாக நாடாளுமன்றத்தில் சிறப்பு விவாதம் இன்று தொடங்கியது. விவாதத்தை மக்களவையில் தொடங்கிவைத்து பிரதமர் மோடி உரையாற்றினார். அவர் தனது உரையில், "வந்தே மாதரம் என்பது ஒரு மந்திரம், சுதந்திர இயக்கத்துக்கு சக்தி மற்றும் உத்வேகத்தைக் கொடுத்த ஒரு முழக்கம், தியாகம் மற்றும் தவத்துக்கான பாதையைக் காட்டிய ஒரு முழக்கம். வந்தே மாதரத்தின் 150வது ஆண்டைக்கொண்டாட்டத்தின் சாட்சிகளாக நாம் இருப்பது பெருமைக்குரிய விஷயம். இது ஒரு வரலாற்றுத் தருணம். பல வரலாற்று நிகழ்வுகள் மைல்கற்களாகக் கொண்டாடப்படும் ஒரு காலம் இது.

சமீபத்தில் நமது அரசியலமைப்பின் 75-வது ஆண்டை நாடு கொண்டாடியது. சர்தார் படேல் மற்றும் பிர்சா முண்டாவின் 150வது பிறந்த நாளை நாடு கொண்டாடுகிறது. குரு தேக் பகதூரின் 350வது தியாக தினத்தை கொண்டாடுகிறோம். இப்போது, நாம் வந்தே மாதரத்தின் 150-வது ஆண்டைக் கொண்டாடுகிறோம்.

வந்தேமாதரம் 50 ஆண்டுகளை நிறைவு செய்தபோது இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. 100 ஆண்டுகளை நிறைவு செய்தபோது இந்தியா அவசரநிலையின் பிடியின் கீழ் இருந்தது. அப்போது, தேசபக்தர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். நமது சுதந்திர இயக்கத்துக்கு உத்வேகம் அளித்த பாடலின் 100வது ஆண்டு நிறைவின்போது துரதிருஷ்டவசமாக நாடு ஒரு கருப்புக் காலகட்டத்தைக் கண்டது.

வந்தே மாதரத்தின் 150வது ஆண்டு என்பது, அதன் பெருமையையும் நமது கடந்த காலத்தில் அதற்கு இருந்த பங்கினையும் மீண்டும் நிலைநிறுத்த ஒரு வாய்ப்பாகும். 1947ம் ஆண்டு நமடு சுதந்திரம் பெற இந்த பாடல் உந்து சக்தியாக இருந்தது.

வந்தே மாதரம் பாடலின் ஆழத்தை நாம் அனைவருமாக சேர்ந்து ஏற்கவும், பாராட்டவும் நாம் இங்கே கூடி இருக்கிறோம். இந்த பாடலால்தான் நாம் அனைவரும் இங்கே ஒன்றாக இருக்கிறோம். இது ஒரு புனிதமான சந்தர்ப்பம். இது வடக்கில் இருந்து தெற்கு வரையும், கிழக்கில் இருந்து மேற்கு வரையும் நாட்டை ஒன்றிணைத்தது. மீண்டும் ஒன்றிணைந்து நாம் அனைவருடனும் இணைந்து பயணிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இந்த பாடல் நமது சுதந்திரப்



போராட்ட வீரர்களின் கனவுகளை நிறைவேற்ற நம்மை ஊக்குவிப்பதாகவும், உற்சாகப்படுத்துவதாகவும் இருக்கட்டும். 2047-க்குள் நமது தேசத்தை சுயசார்பு கொண்டதாகவும் வளர்ச்சி அடைந்ததாகவும் மாற்றுவதற்கான உறுதியை நாம் மீண்டும் வலியுறுத்துவோம்.

வந்தே மாதரம் என்பது அரசியல் ரீதியில் நாம் சுதந்திரம் அடைவதற்கான ஒரு மந்திரம் மட்டுமல்ல. அது நமது சுதந்திரத்துக்கானது மட்டுமல்ல. அதற்கும் அப்பாற்பட்டது. சுதந்திர இயக்கம் என்பது நமது தாய்நாட்டை அடிமைத்தனத்தின் பிடியில் இருந்து விடுவிப்பதற்கான ஒரு போர். நமது வேதங்களில், இந்த நிலம் எனது தாய்; நான் இந்த மண்ணின் மகன் என்று கூறப்பட்டுள்ளது. வந்தே மாதரம் பாடல் நமது சிறந்த கலாச்சார மரபின் நவீன அவதாரம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இந்தியாவை ஒரு பலவீனமான, பயனற்ற, சோம்பல் மிகுந்த, இழிவான ஒரு நாடாக காட்டுவது ஒரு ஃபேஷனாக மாறியது. நமது நாட்டிலும்கூட இதே போன்று பேசப்பட்டது. இந்நிலையில், நாட்டின் மனசாட்சியை உலுக்கி விழிப்புணர்வை ஏற்படுத்த பங்கிம் சாட்டர்ஜி இந்த பாடலை இயற்றினார். இந்த பாடல், நமது ஆயிரம் ஆண்டுகால வரலாற்றையும் மரபையும் மீட்டுப்பதற்காக இருந்தது.

ஆங்கிலேயர்கள் தங்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கான ஆய்வகமாக வங்களாத்தைப் பயன்படுத்தினர். வங்கத்தின் அறிவுசார் திறன் நாட்டுக்கு வழிகாட்டுவதாகவும், வலிமை மற்றும் உத்வேகத்தை அளிப்பதாகவும் இருப்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். வங்கத்தின் திறன், நாட்டின் மையப் புள்ளி என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அதனால்தான், அவர்கள் வங்கத்தைப் பிரித்தார்கள். வங்கத்தைப் பிரித்தால் நாடு பிளவுபடும் என்று அவர்கள் நம்பினார்கள். 1905-ல் அவர்கள் வங்கத்தை பிரித்தபோது வந்தே மாதரம் பாடல் ஒரு பாறை போல நின்றது" எனத் தெரிவித்தார்.

## என்டிஏ எம்.பி.க்களுக்கு டிச.11-ல் சிறப்பு இரவு விருந்து அளிக்கிறார் பிரதமர்!

ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும், நாடாளுமன்ற அவை வியூகத்தை நெறிப்படுத்தவும் வரும் 11-ம் தேதி தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பி.க்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்து அளிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது தொடர்பாக பேசிய பாஜக மூத்த தலைவர் ஒருவர், "கூட்டணி கட்சிகளிடையே வெளிப்படையான மற்றும் ஆக்கப்பூர்வமான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்காக இந்த கூட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

சட்ட முன்னுரிமைகள், இந்த கூட்டத் தொடருக்கான அரசாங்கத்தின் பரந்த நிகழ்ச்சி நிரல்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைந்த எதிர்கால திட்டங்கள் ஆகியவை குறித்து இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுவார்.

கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளின் மூத்த அமைச்சர்கள், கட்சியின் மக்களவை மற்றும் மாநிலங்களவைக் குழு தலைவர்கள், எம்பிக்கள் இந்த உரையாடலில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு வங்கம், தமிழ்நாடு, அசாம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் வர உள்ள நிலையில், அதற்கான உத்திகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும். தேர்தல்களுக்கு முன்னதாக கூட்டணி கட்சிகள் தங்கள் அணுகுமுறைகளை மேம்படுத்திக் கொள்ளும்.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்னதாக அங்கு கட்சி (பாஜக) தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. வரும் 20-ம் தேதி பிரதமர் மோடி மேற்கு வங்கம் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. நாடியா மாவட்டத்தில் ஒரு முக்கிய பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றுவார்.

அடுத்த ஆண்டு ஜனவரியில், மேற்கு வங்கம் முழுவதும் நான்கு முதல் ஆறு யாத்திரைகளை நடத்த கட்சி தயாராகி வருகிறது. இது குறித்தும் பிரதமர் மோடி என்டிஏ கூட்டத்தில் உரையாற்றுவார். சத்தீஸ்கர், குஜராத், கேரளா, மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் தற்போது நடத்தப்பட்டு வரும் இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்தும் மதிப்பீடு செய்யப்படும்" என தெரிவித்தார்.

## இன்றைய பஞ்சாங்கம்

09.12.2025 கார்த்திகை 23
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.18

திதி:
இன்று இரவு 8.41 வரை பஞ்சமி பின்பு சஷ்டி

நட்சத்திரம்:
இன்று காலை 8.55 வரை பூசம் பின்பு ஆயில்யம்.

யோகம் :
இன்று இரவு 8.23 வரை ஐந்திரம் பின்பு வைதிருதி.

கரணம் :
இன்று காலை 9.16 வரை கௌலவம் பின்பு இரவு 8.41 வரை தைதுலம் பின்பு கரசை

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 8.55 வரை மூலம் பின்பு பூராடம்.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45.
மாலை 4.45 – 5.45.

இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.

எமகண்டம்
காலை 9.00 – 10.30

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

இன்று சங்கடஹர சதுர்த்தி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

## நடிகைபாலியல் துன்புறுத்தல்வழக்கில் நடிகர்திலீப்விடுவிப்பு



**எர்ணாகுளம், டிச.9:**

பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய கேரள நடிகை பாலியல் துன்புறுத்தல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நடிகர் திலீப், அனைத்து குற்றவியல் குற்றச்சாட்டுகளிலிருந்தும் இன்று (டிச.8) விடுவிக்கப்பட்டார்.

8 ஆண்டுகள் நீடித்த விசாரணைக்குப் பிறகு நேற்று (டிசம்பர் 8) எர்ணாகுளம் முதன்மை அமர்வு நீதிபதி ஹனி எம். வர்கீஸ், இந்த வழக்கில் நடிகர் திலீப்பை குற்றங்களில் இருந்து விடுவித்தார். ஒன்று முதல் ஆறு வரையிலான குற்றம்சாட்டப்பட்டவர்களை குற்றவாளிகள் என அறிவித்த நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட 8-வது நபரான நடிகர் திலீப்பை விடுவித்தார்.

இந்த வழக்கில் முதல் குற்றவாளி என்.எஸ். சுனில் எனும் 'புல்சர் சுனில்'. இரண்டாவது குற்றவாளி மார்ட்டின் ஆண்டனி, மூன்றாவது குற்றவாளி பி. மணிகண்டன், நான்காவது குற்றவாளி வி.பி. விஜீஷ், ஐந்தாவது குற்றவாளி எச்.சலீம் என்கிற வடிவால் சலீம், 6-வது குற்றவாளி பிரதீப், 7-வது குற்றவாளி சார்லி தாமஸ், ஒன்பதாவது குற்றவாளி சனில் குமார் என்கிற மேஸ்திரி சனில், மற்றும் பதினைந்தாவது குற்றவாளி சரத் நாயர் ஆவர்.

## கடந்த தேர்தலைவிட அதிக வாக்குகளைப் பெறுவது உறுதி

### முதல்வர் மு.க. ஸ்டாலின்



**சென்னை**, டிச.9:

திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று (8.12.2025) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக 'என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி' என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஸ்டாலின் பேசியதாவது:

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கும் உயரிய நோக்குடன், பசி, உறக்கம், குடும்பம் ஆகியவற்றைத் துறந்து எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள்... வாழ்த்துகள்.

நாம் இவ்வளவு கடினப்பட்டு இருந்தாலும் பாதி கிணறுதான் கடந்துள்ளோம். வெரிஃபிகேஷன் பணிகள் நிறைவடைந்து, நமது மக்களின் பெயர்கள் விடுபடாமல் வாக்காளர் பட்டியல் வந்தால்தான் முழு கிணற்றையும் கடந்ததாக கருத முடியும்.

எஸ்ஐஆர் பணிகள் வாக்குரிமையைப் பாதுகாக்கும் அடிப்படைப் பணியாக இருந்தால், 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்பது நமது வெற்றியை உறுதிப்படுத்தும் தேர்தல் பணியாகும்.

எனவே, நாம் அனைவரும் களத்தில் மிகுந்த தீவிரத்துடன் பணியாற்ற வேண்டும். உங்கள் ஆற்றலுக்கும் உழைப்புக்கும் முன் எவராலும் நிற்க முடியாது. எத்தனை எதிரிகள் வந்தாலும், எத்தனை அணிகள் செயல்பட்டாலும், தமிழ்நாட்டை மீண்டும் ஆளப்போவது உதயசூரியன்தான். உங்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் இதை கூறவில்லை. இது தான் உண்மை.

நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களின் மூலம், தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 86 லட்சம் மக்கள் நேரடியாக பயனடைந்து வருகின்றனர். இதில் பயனாளிகளுடன் சேர்த்து, கழகத்தினரையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முந்தைய ஆட்சிக்காலங்களில் மழை பெய்தாலே உதவிக்காக காத்திருந்த நிலையும், நிவாரணப் பொருள்கள் மற்றும் உணவு வழங்கும் முறையும் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதை மக்களுக்கு களத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும். நமது சிறப்பான பணிகளைப் பார்த்து நடுநிலை வாக்காளர்களும் இன்று நமக்கு ஆதரவாக நிற்கின்றனர்.

இவற்றை எதிர்கொள்ள, நமது பலத்தை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். கொள்கை தான் நமது பலம். நிர்வாகிகள் தான் நமது பலம். தியாக உழைக்கும் கழக உடன்பிறப்புகள் தான் நமது பலம். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள கழக கட்டமைப்பு தான் நமது பலம்.

இந்த பலங்களை மிகத் துல்லியமாகப் பயன்படுத்துவதே நமது முக்கியமான வியூகம் ஆக இருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது வாக்குகளை உறுதி செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது கழகத்தினர் உற்சாகத்துடன் செயல்பட வைக்க வேண்டும்.

அதற்காகத்தான், "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற இந்தப் பரப்புரை, அந்தந்த வாக்குச்சாவடிக்குட்பட்ட மாநில நிர்வாகி முதல், வார்டு மற்றும் கிளைச் செயலாளர்கள் வரை அனைவரையும் இந்தக் கூட்டங்களில் பங்கேற்க அழைக்க வேண்டும்.

அந்த வாக்குச்சாவடியில் மூத்த கழக முன்னோடிகள் அல்லது ஏதேனும் அதிருப்தியாளர்கள் இருந்தால், அவர்களையும் தவறவிடாமல் அழைக்க வேண்டும். தேனாம்பேட்டையில், என் வாக்குச்சாவடியில் பகுதிச் செயலாளர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் நானும் நேரடியாகப் பங்கேற்பேன்.

வீடு வீடாகச் செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் மகளிர் கட்டாயம் இடம்பெற வேண்டும். ஒவ்வொரு பூத் கமிட்டி உறுப்பினரும் வீடு வீடாகச் செல்லுவதை உறுதி செய்யுங்கள். வீடுவீடாக சென்று விடுபட்ட வாக்காளர்களின் விவரங்களை முறையாக சரிபார்க்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும், திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடங்கிய துண்டறிக்கைகள் வழங்கப்பட வேண்டும்.

கடுமையாக உழைக்க வேண்டும். நான் இரவிலும் உறங்காமல் உழைத்து வருகிறேன் என்பது உங்களுக்கே தெரியும். அதே அளவிலான உழைப்பை, உங்களின் ஒவ்வொருவரிடமிருந்தும் நான் எதிர்பார்க்கிறேன்.

ஒரு வாக்குச்சாவடியை வென்றால், ஒரு தொகுதியை வெல்லலாம். எனவே, இந்தத் தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடியும் மிக முக்கியமானது. உங்கள் வாக்குச்சாவடியில் வெற்றி பெற வேண்டிய பொறுப்பை உங்களிடமே ஒப்படைக்கிறேன்.

ஒவ்வொருவரும் தங்களது வாக்குச்சாவடிகளில் வென்று வருவீர்கள் என்ற முழு நம்பிக்கையுடன் இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்துள்ளேன். என் நம்பிக்கையை காப்பாற்றுங்கள்" என்று பேசினார்.

## தமிழகத்தில் 99.27% எஸ்ஐஆர் படிவங்கள் பதிவேற்றம்!

**சென்னை, டிச.9:**

தமிழகத்தில் 99.27% எஸ்ஐஆர் படிவங்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் எஸ்ஐஆர் நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 6.41 கோடி (6,41,14,587) வாக்காளர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.







# திருக்குறள் குறள்-464

**தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர்**



இழிவு தருவதாகியக் குற்றத்திற்கு அஞ்சுகின்றவர் (இன்ன ஊதியம் பயிக்கும் என்னும்) தெளிவு இல்லாத செயலைத் தொடங்கமாட்டார்.

## சிந்திக்க ஒரு நொடி



மன காயத்திற்கு
ஆறுதல் என்பது
தற்காலிக தீர்வு,
மாறுதல் என்பது
நிரந்தர தீர்வு, ஆறுதல்
தேடாதே
மாறுதல் தேடு
வாழ்க்கை வசந்தமாகும்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## தமிழ்நாடு இபேப்பர் தெய்வம் இதழ் தமிழாடிவி சார்பில் சங்ஹட ஹர சதுர்த்தி





**நாகப்பட்டினம், டிச.09:**
நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் IO B அருகில் உள்ள அருள்மிகு ரெத்ன விநாயகர் கோவிலில் தமிழ்நாடு இபேப்பர் பண்பலை தெய்வம் இதழ் சார்பில் சங்ஹட ஹர சதுர்த்தி அபிஷேகம் ஆராதனை விழா சிறப்பாக நடைபெற்றது முதலில் விநாயகருக்கு திரவியம் பொடி மஞ்சள் இளநீர் தயிர் பால் பஞ்சாமிர்தம் தேன் அபிஷேகம் நடைபெறுகிறது.. அனைத்து வாசகர்கள் சார்பில் சங்கல்பம் செய்யப் பட்டது குடும்ப ஷேமம் ஆயுள் விருத்தி கடன் பிரச்சினை நிவர்த்தி போன்றவை விலக அர்ச்சனை நடைபெற்றது அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது டிரஸ்ட் திரு சிங்கார வேலு மற்றும் சம்பத் ராகவ் பட்டர் ஆலய அர்ச்சகர் திரு ராஜேஷ் மற்றும் பட்டதாரி ஆசிரியர் திரு ஆர் மணிவண்ணன் ஆகியோர் விழா ஏற்பாடுகளை செய்து இருந்தார்கள்!!

## கார்த்திகை மாதம் சங்கடஹர சதுர்த்தி விழா



**திருவண்ணாமலை, டிச.09:**
திருவண்ணாமலை சன்னதி தெருவில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ வல்லப விநாயகருக்கு கார்த்திகை மாதம் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சுவாமிநாதன் குருக்கள் அவர்களால் அபிஷேகங்கள் பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், தேன், பஞ்சாமிர்தம் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், அருகம்புல் மாலைகளுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் சங்கடஹர சதுர்த்தி விழாவில் கலந்துகொண்டு வல்லப விநாயகரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் குடமுழுக்கு



காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் திருப்பணிகள் ரூ.29 கோடியில் நிறைவுபெற்ற நிலையில் நேற்று நடந்த குடமுழுக்கு விழாவில், சங்கர மடத்தின் பீடாதிபதிகள் முன்னிலையில் கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டது.

## மதுரை முக்தீஸ்வரர் கோயில் குடமுழுக்கு



மதுரை முக்தீஸ்வரர் கோயில் குடமுழுக்கு விழாவில் பங்கேற்ற அமைச்சர் மூர்த்தி,பூமிநாதன் எம்எல்ஏ மற்றும் பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது.

## துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளில் நலத்திட்ட உதவி



குடியாத்தத்தில் துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளில் நலத்திட்ட உதவிகளை நந்தகுமார் எம்எல்ஏ வழங்கினார்.

## வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்



திருநெல்வேலியில் மாவட்ட நீதிமன்றம் முன் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## புனர்பூசம் நட்சத்திரத்தை முன்னிட்டு அன்னதானம்








திருவண்ணாமலை மாவட்டம் போளூர் தமிழ்நாடு ஆர்ய வைஸ்ய மகா சபா சார்பில் அன்னதானம் நடைபெற்றது. நமது குலதெய்வம் ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி அம்மனின் ஜென்ம நட்சத்திரமான புனர்பூச நட்சத்திரத்தை முன்னிட்டு போளூர் நகர ஆர்ய வைஸ்ய சபாவின் சார்பில் பகல் 12 மணி அளவில் அன்னதானம் செய்யப்பட்டது. சுமார் 200க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றது . **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 2,484 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை



நாமக்கல் கலெக்டர் துர்கா மூர்த்தி தலைமையில் நடந்த நிகழ்வில் 2,484 பயனாளிகளுக்கு ரூ.7.14 கோடி மதிப்பீட்டில், நலத்திட்ட உதவிகளை அமைச்சர் மதிவேந்தன், ராஜேஷ்குமார் எம்.பி., வழங்கினர். உடன் ராமலிங்கம் எம்எல்ஏ, மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி உள்ளனர்.

## முருகப் பெருமானை தரிசித்தார் நயினார் நாகேந்திரன்



ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் முருகப் பெருமானை பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தரிசித்தார்.

## கொடி நாள் விழிப்புணர்வு பேரணி





திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு படைவீரர்கள் கொடிநாள் தினத்தை முன்னிட்டு மாணவ மாணவியர் பங்கேற்ற பேரணியை உயர்திரு . மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து பேரணியில் கலந்து கொண்டார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள குடில்கள் பொம்மைகள்



கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, சென்னை பெரம்பூர் ரயில்வே மைதானம் அருகே விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள குடில்கள் மற்றும் பொம்மைகள்

## ஆக்கி விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க வந்துள்ள பன்னாட்டு வீரர்கள்



உலக கோப்பை ஜூனியர் ஆக்கி விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க வந்துள்ள பன்னாட்டு வீரர்கள், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சங்கமித்தனர். அவர்களுடன் துணை முதல்வர் உதயநிதி புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

## மக்கள் தீர்வு நாள் கூட்டம்



**திருவண்ணாமலை, டிச.09:**
மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைக்காக குழந்தைகள் திருமணத்திற்கு எதிரான தேசிய அளவிலான 100 -நாள் பிரச்சார விழிப்புணர்வு பதாகைகளை பள்ளி மாணவ, மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி தலைமையாசிரியர்களிடம் உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ ப. அவர்கள் பதாகைகளை வழங்கினார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 70 வயது பூர்த்தி அடைந்த 49 தம்பதியருக்கு சிறப்பு



நெல்லையில் 70 வயது பூர்த்தி அடைந்த 49 தம்பதியருக்கு திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் நேற்று சிறப்பு செய்யப்பட்டது.

## வால்பாறையில் மனித-வனவிலங்கு மோதல் தடுப்பு குழு அமைப்பு

**சென்னை, டிச.9:**

வால்பாறையில் மனித-வனவிலங்கு மோதலை தடுக்க சிறப்பு குழு அமைத்து தமிழக அரசு உத்தர விட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு ஐயர்பாடி தேயிலைத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த 5 வயது சிறுவன் சைபுல் ஆலம் சிறுத்தை தாக்குதலில் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கூடுதல் தலைமை முதன்மை வனக்காப்பாளர் ராம சுப்பிரமணியன் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதில் ஆனைமலை புலிகள் காப்பக துணை இயக்குநர், பொள்ளாச்சி சார்-ஆட்சியர், இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளை பிரதிநிதி, வால்பாறை நகராட்சி ஆணையர், தொழிலாளர் துறை உதவி ஆணை யர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். தேயிலை எஸ்டேட் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் திறம்பட செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகளைச் சுற்றி புதர்களை அகற்றுதல், போதிய விளக்கு வசதி செய்தல், மாலை நேரங்க ளில் அதிக எச்சரிக்கையுடன் இருத்தல் போன்ற வழிமுறை களை பின்பற்ற தோட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. இக்குழு இரண்டு வாரங்களுக்குள் தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கோவை, நாமக்கல் மருத்துவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை

**கரூர், டிச.9:**

கரூரில் கடந்த செப்.27 ஆம் தேதி, தவெக பிரச்சாரக் கூட்ட நெரி சலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவம் தொடர்பாக சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சி யாக உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட சிபிஐ கண் காணிப்புக் குழுத் தலைவர் அஜய் ரஸ்தோகி உள்ளிட்ட அதிகாரிகள் அண்மையில் கரூர் வந்து சம்பவம் குறித்து விசாரணை நடத்தினர். இதையடுத்து, சிபிஐ அதிகாரி பிரவீன்குமார் தலைமையிலான குழுவினர் கடந்த டிச.4 ஆம் தேதி கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்க வேல் மற்றும் சம்பவத்தில் உயிரி ழந்தவர்களின் சடலங்களை உடற் கூராய்வு செய்த தூத்துக்குடி, நாகை மாவட்ட அரசு மருத்துவர்களிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து, வெள்ளிக்கிழமை கரூர் நெரிசல் சம்பவத்தின் போது உயிரிழந்தவர்களின் உடல்களை உடற்கூராய்வு செய்த நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவர்கள் 3 பேரிடம் விசா ரணை மேற்கொண்ட நிலையில், சனிக்கிழமை கோவை, நாமக்கல், திருச்செங்கோடு பகுதிகளைச் சேர்ந்த 5 மருத்துவர்கள் சிபிஐ அதி காரிகள் முன் ஆஜராகினர். அவர் களிடம் சுமார் 2 மணி நேரம் விசா ரணை நடத்தப்பட்டது. தொடர்ந்து க.பரமத்தி காவல் நிலைய ஆய்வாளர் தங்கராஜ் மற்றும் கரூர் அனைத்து வணிகர் சங்கங்களைச் சேர்ந்தவர்களிட மும் சிபிஐ அதிகாரிகள் விசா ரணை நடத்தினர்.

## மேட்டூரில் நீர் திறப்பு அதிகரிப்பு



**சேலம், டிச.9:**

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப் படும் நீரின் அளவு 1,000 கன அடியில் இருந்து 3,000 கனஅடியாக அதி கரிக்கப்பட்டுள்ளது. செங்கோட்டையன் மனு ஈரோடு: தவெக தலைவர் விஜய் ஈரோடு மாவட்டத்தில் டிச.16 ஆம் தேதி சுற்றுப்பயணம் மேற் கொள்கிறார். அன்று அவரது தலைமை யில் ஈரோடு பெருந் துறை சாலை பவளத் தாம்பாளையம் பகுதி யில் பொதுக்கூட்டம் நடக்கிறது. இதற்கு அனுமதி கேட்டு ஈரோடு ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் ஆட்சி யர் கந்தசாமியிடம், மாவட்ட எஸ்.பி. அலு வலகத்தில் தவெக தலைமை ஒருங்கிணைப் பாளர் முன்னாள் அமைச்சர் கே.ஏ. செங் கோட்டையன் ஞாயி றன்று மனு கொடுத் தார்.

# காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் குடமுழுக்கு: கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டது



**காஞ்சிபுரம், டிச.9:**

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்கான திருப்பணிகள் ரூ.29 கோடியில் நிறைவுபெற்ற நிலையில் இன்று (டிசம்பர் 8-ம் தேதி) குடமுழுக்கு விழா நடைபெற்றது. இந்த குடமுழுக்கு விழாவையொட்டி காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மடாதிபதிகள் முன்னிலையில் கோயில் கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டது.

பஞ்சபூத தலங்களில் ‘மண்’ (பிரித்வி) தலமாகப் போற்றப்படும் கோயில் காஞ்சிபுரம் அருள்மிகு ஏலவார்குழலி சமேத ஏகாம்பரநாதர் திருக்கோயிலில். வரலாற்றுப் பெருமையும், புராணச் சிறப்பும் வாய்ந்த இந்தக் கோயிலில் கடந்த 2023-ம் ஆண்டு ஜூன் மாதம் பாலாலயம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தக் கோயிலுக்கு சுமார் ரூ.29 கோடி மதிப்பில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, குடமுழுக்கு விழாவுக்காகன பிரம்மாண்டமான நவகுண்ட யாகசாலை அமைக்கப்பட்டது. இதில் 170 சிவாச்சாரியார்கள் மற்றும் 170 வேத விற்பன்னர்கள் பங்கேற்க, கடந்த 4-ம் தேதி விக்னேசுவர பூஜையுடன் யாகசாலை பூஜைகள் தொடங்கின. தொடர்ந்து 30-க்கும் மேற்பட்ட ஓதுவார்கள் பங்கேற்ற திருமுறைப் பாராயணம் மற்றும் விசேஷ யாகபூஜைகள் நடைபெற்றன.

குடமுழுக்கு விழா இன்று (டிசம்பர் 8-ம் தேதி) நடைபெற்றது. இந்த குடமுழுக்கு விழாவையொட்டி அதிகாலை 5 மணியளவில் யாகசாலையிலிருந்து மேள தாளங்கள், சிவ வாத்தியங்கள் முழங்க புனித நீர் அடங்கிய கலசங்கள் கோபுரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மடாதிபதி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் இளைய பீடாதிபதி ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில், மூலவர் கோபுரம் மற்றும் ராஜகோபுர கலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றது.

அப்போது கூடியிருந்த பக்தர்கள் பக்திப் பரவசத்தில் ‘ஓம் நமச்சிவாய’ என்ற கோஷங்களை எழுப்பினர். ‘அரோகரா’ எனவும் எழுப்பிய பக்தி முழக்கம் விண்ணை எட்டியது. தொடர்ந்து மூலவருக்கும், பரிவார தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகங்களும், மகா தீபாராதனைகளும் நடைபெற்றன.

இந்த விழாவில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீ சிதம்பரநாத சுவாமிகள், தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டு ஆசியளித்தனர். மேலும், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வேல்முருகன், காஞ்சிபுரம் மாவட்ட முதன்மை நீதிபதி தீப்தி அறிவுமதி, காஞ்சிபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் எழிலரசன் மற்றும் நீதித்துறை நடுவர்கள் உள்பட முக்கியப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எம்.வி.எம். வேல்மோகன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் சி.குமரதுரை, செயல் அலுவலர் ப.முத்துலட்சுமி மற்றும் விழாக்குழுவினரும் செய்திருந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.சண்முகம் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். விழாவை முன்னிட்டு ஆலயம் முழுவதும் வண்ண மின்விளக்குகளாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நகரின் பல்வேறு இடங்களில் தன்னார்வ அமைப்புகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

ஏகாம்பரநாதர் கோயிலைச் சுற்றி அனைத்து தெருக்களிலும் மக்கள் வெள்ளம்போல் காட்சி அளித்தனர்.

இதனால் அந்தப் பகுதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. வெளியூர்களில் இருந்து வந்த பேருந்துகள் உள்ளிட்ட கனரக வாகனங்கள் நகரின் வெளியிலேயே நிறுத்தப்பட்டன.

# சென்னை விமான நிலையத்தில் 96 விமானங்கள் ரத்து

**சென்னை, டிச.9:**

இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானங்களின் சேவையில் ஏற் பட்டுள்ள பிரச்சினை காரண மாக, சென்னை விமான நிலை யத்தில் 6-வது நாளாக விமான சேவை பாதிக்கப்பட்டது. நேற்று மட்டும் வருகை, புறப்பாடு என 96 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால் பயணிகள் பெரும் அவதிக் குள்ளாகினர்.

இண்டிகோ ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்தின் சேவை சீராக இன்னும் சில தினங்கள் ஆகும் என்பதால், சென்னை விமான நிலையத்திலிருந்து இண் டிகோ ஏர்லைன்ஸ் விமானத் தில் பயணம் செய்வதற்காக முன்பதிவு செய்திருந்த பயணி கள் பெரும்பாலானோர், தங் கள் டிக்கெட்களை ரத்து செய் து, வேறு விமானங்களில் டிக் கெட்டுகளை முன்பதிவு செய் யத் தொடங்கியுள்ளனர்.

பயணிகளின் டிக்கெட் களை ரத்து செய்யும்போது, அந்த பணம் அவர்களுடைய வங்கிக் கணக்குக்கு வந்துவிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், வங்கிக் கணக்கில் பணம் வர தாமதம் ஆவதாக பயணிகள் தரப்பில் கூறப் படுகிறது.

கட்டண உச்சவரம்பு: மத் திய விமான போக்குவரத் துத் துறை அமைச்சகம், உள் நாட்டு விமானங்களில் டிக் கெட்டுகளுக்கு, உச்சவரம்பாக ஒரு டிக்கெட்டுக்கு 500 கி.மீ. வரையிலான பயண தூரத் துக்கு அதிகபட்சம் ரூ.7,500, ஆயிரம் கி.மீ. ரூ.12 ஆயிரம், 1500 கி.மீ. பயண தூரத்துக்கு ரூ.15 ஆயிரம், 1500 கி.மீட் டருக்கு மேல் ரூ.18 ஆயிரம் என உச்சவரம்பை நிர்ணயித் துள்ளது.

மத்திய விமான போக்கு வரத்துத் துறை அமைச்சகம் விதித்துள்ள உத்தரவை தனி யார் விமான நிறுவனங்கள் முறையாக அமல்படுத்துவதும் இல்லை.

அந்த நிறுவனங்கள் வழக்கம் போல் கூடுதல் கட்டணங்களை பல்வேறு காரணங்களைக் கூறி வசூலிப்பதாக பயணி கள் குற் றஞ்சாட்டுகின் றனர்.

# அண்ணா நகர் ஜிஎஸ்டி ஆணையரகத்தில் தீ விபத்து: இரண்டரை மணி நேரம் போராடி தீ அணைப்பு

**சென்னை, டிச.9:**

அண்ணா நகர் ஜிஎஸ்டி ஆணை யரகத்தில் நேற்று திடீர் தீ விபத்து ஏற் பட்டது. இரண்டரை மணி நேரம் போராடி தீ அணைக்கப்பட்டது. சென்னை அண்ணாநகர் மேற்கு, 2-வது அவென்யூவில் ஜிஎஸ்டி ஆணையரகம் செயல்பட்டு வருகிறது.

நேற்று காலை 8.30 மணியள வில், இந்த அலுவலகத்தின் தரைத் தளத்தில் உள்ள கேன்டீனில் இருந்து திடீரென புகை கிளம்பியது. அது சிறிது நேரத்தில் தீயாக மாறி மளமளவென பெண் அதிகாரிகள் ஓய்வறை மற்றும் இதர அறைகளுக்கு பரவியது.

இதனால் ஜிஎஸ்டி அலுவலக வளாகத்தில் இருந்தவர்கள் உடனடியாக வெளியேறினர். இதுகுறித்து



தீயணைப்பு கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து தீயணைப்புத் துறை இணை இயக்குநர் சத்யநாராயணா தலைமையில் 10 தீயணைப்பு வாகனங்களில் வந்த 60 தீயணைப்பு வீரர்கள் 2.30 மணி நேரம் போராடி, தண்ணீரை பீய்ச்சியடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த விபத்தில் முக்கிய ஆவணங் கள், கேன்டினில் இருந்த பாத்திரங் கள், மின்னணு உபகரணங்கள் உட்பட பல்வேறு வகையான பொருட்கள் சேதமடைந்தன.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா அல்லது சதிச் செயலா என திருமங்கலம் போலீஸார் விசா ரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக தடயவியல் துறை அதி காரிகளும் தீ விபத்து நடந்த இடத் தைப் பார்வையிட்டு தடயங்களை சேகரித்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### 20 வயது எனர்ஜியில் இயங்க... காலையில் இதை சாப்பிடுங்கள்!

நமக்கு வயதாகும்போது, தசைகளின் ஆரோக்கியத்திற்கும், இதயம் மற்றும் மூளையின் சிறப்பான செயல்பாட்டிற்கும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் தேவைப்படுகிறது. இதற்கு நாம் காலை உணவாக எடுத்துக்கொள்ள வேண்டிய ஐந்து வகை உணவுகள் (BREAKFAST FOR SENIOR CITIZENS) என்னென்ன என்பதை இப்பதிவில் பார்க்கலாம்.

1. ஓட் மீல்: சீனியர் சிட்டிசன்களுக்கு எந்தக் காலத்திற்கும் பொருந்தக் கூடிய உணவு ஓட் மீல். இதிலுள்ள கரையக்கூடிய நார்ச் சத்துக்கள் உடலில் கொழுப்பின் அளவைக் குறைக்கவும், இரத்த சர்க்கரை அளவை சமநிலைப்படுத்தவும் உதவும். இதனால் இதய நோய் மற்றும் டைப் 2 வகை நீரிழிவு நோய் வராமல்

உடலைப் பாதுகாக்க முடியும். ஸ்டீல்-கட் அல்லது நசுக்கிய ஓட்ஸ் வகை பாதுகாப்பானவை. ஓட் மீல் மீது பெரி வகைப் பழங்கள், உலர் கொட்டைகள் மற்றும் சிறிது பட்டை (CINNAMON) பவுடர் தூவி உண்பது உடலில் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள், வைட்டமின்கள் மற்றும் மினரல்களின் அளவை அதிகரிக்க உதவும்.

2. க்ரீக் யோகர்ட்: இதிலுள்ள அதிகளவு ப்ரோட்டீன் சத்துக்கள் தசைகளின் அளவையும் சக்தியையும் மேம்படுத்த உதவுகின்றன. கால்சியம் எலும்புகளை பலப்படுத்தவும், ப்ரோபயோட்டிக்குகள் இரைப்பை குடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து செரிமானம் சிறப்பாக நடைபெறவும் உதவி புரிகின்றன. கலோரி அளவு குறைவாக எடுத்துக்கொள்ள விரும்புவோர் குறைந்த அளவு கொழுப்பு உள்ள அல்லது கொழுப்பு சத்து இல்லாத யோகர்ட்டை தேர்ந்தெடுக்கலாம். முழுமையான கொழுப்பு நிறைந்த யோகர்ட் எடுத்துக்கொண்டால், கூடுதல் சர்க்கரை சேர்க்காமலே, சுவையும், நல்ல திருப்தியும் கிடைக்கும். ப்ரோட்டீன், கொழுப்பு மற்றும் கார்போஹைட்ரேட் நிறைந்த க்ரீக் யோகர்ட்டை காலையில் உட்கொள்வது நீடித்த சக்தி, சீரான செரிமானம் மற்றும் வலுவான தசைக் கட்டமைப்பு பெற உதவும். சீட்ஸ் அல்லது முழு தானிய க்ரனோலா சேர்த்து உண்பது கூடுதல் நார்ச்சத்தும் ஊட்டச்சத்தும் தரும்.

3. முட்டை: உயர்தர புரதச் சத்து, அமினோ ஆசிட்ஸ், வைட்டமின் D, வைட்டமின் B12 மற்றும் ச்சோலைன் சத்துக்கள் நிறைந்தது முட்டை. இவை முதியோர்களுக்குத் தேவையான மூளை ஆரோக்கியம், தசைகளின் சிறப்பான செயல்பாடுகள் மற்றும் சுறு சுறுப்பு ஆகியவை கிடைக்க பெரிதும் உதவி புரியும்.

முழு தானிய பிரட்டை டோஸ்ட் செய்து முட்டை ஆம்லெட்டுடன் சாப்பிட்டால் காலைப் பொழுது முழுவதிற்குமான சக்தி கிடைக்கும்.

4. முழு தானிய பிரட்: இதிலுள்ள பல வகையான கார்போ ஹைட்ரேட்கள் சக்தியின் அளவை குறைவாக எரியச் செய்து, இரத்தத்தில் சர்க்கரை மெதுவாக கலக்க உதவுகிறது. முழு தானிய பிரட்டில் உள்ள நார்ச் சத்துக்கள், B வைட்டமின்கள் மற்றும் கனிமச் சத்துக்கள் செரிமானம் சிறப்பாக நடைபெறவும், இதய இரத்த நாளங்கள் ஆரோக்கியமாக செயல்படவும் உதவி புரிகின்றன. இந்த பிரட்டுடன் அவகாடோ பழம், நட் பட்டர், தக்காளிப் பழம் சேர்த்து உண்பது கூடுதலாக நல்ல கொழுப்பு, ப்ரோட்டீன் மற்றும் வைட்டமின் சத்துக்கள் பெற உதவும்.

5. ஃப்ரெஷ் ஃப்ரூட்ஸ்: ஃப்ரெஷ் ஆப்பிள், பெரி வகைப் பழங்கள், வாழைப்பழம் ஆகியவை ஆன்டி ஆக்ஸிடன்ட்கள், வைட்டமின்கள் மற்றும் மினரல்கள் நிறைந்தவை. இவை உடலின் வீக்கங்களைக் குறைக்கவும், இதயம் மற்றும் மூளை ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாக்கவும் சிறந்த முறையில் உதவி புரிபவை. இவற்றில் உள்ள இயற்கை முறை சர்க்கரை சத்து மெதுவாக இரத்தத்தில் கலப்பதால், இரத்த சர்க்கரை அளவு சமநிலையற்றுப் போகும் வாய்ப்பு உண்டாகாது. இப்பழங்களை யோகர்ட், காட்டேஜ் சீஸ் மற்றும் நட்ஸ் உடன் சேர்த்து உண்பது கூடுதல் ஆரோக்கியம் பெற உதவும்.

மூத்த குடி மக்கள் மேற் கூறிய உணவுகளை காலை வேளைகளில் உட்கொண்டு ஆரோக்கியம் பெறுவீர்.

# ஈரோட்டில் விஜய் பிரச்சாரத்துக்கு காவல்துறை அனுமதி மறுப்பு: மாற்று இடம் தேர்வு செய்ய அறிவுறுத்தல்

**சென்னை, டிச.9:**

ஈரோட்டில் தவெக தலைவர் விஜய்யின் பொதுக்கூட்டத்துக்கு அனுமதி கோரி, ஆட்சியர் கந்தசாமி மற்றும் எஸ்பி அலுவலகத்தில் அக்கட்சியின் நிர்வாகக்குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தலைமையிலான நிர்வாகிகள், மனு அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் செங்கோட்டையன் கூறியது: தவெக தலைவர் விஜய் ஈரோடு மாவட்டத்தில் வரும் 16-ம் தேதி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். ஈரோடு பெருந்துறை சாலையில் பவளத்தாம்பாளையம் வாரி மகால் அருகே தனியார் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெற்றவுடன் பணிகள் விரைந்து நடத்தப்படும். ரோடு ஷோ தவிர்க்கப்பட்டுள்ளது.





தவெக-வுடன் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்துகிறதா? என்றால், இதைப்பற்றி அவர்களிடம் தான் கேட்க வேண்டும். மற்றொரு கட்சியை பற்றி நாங்கள் சொல்ல முடியாது. தவெக தலைவரின் பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் தவெக-வில் இணைய வாய்ப்புள்ளதா என்பதை 16-ம் தேதி வரை பொறுத்திருந்து பாருங்கள்.

தவெக கூட்டணியில் அமமுக இணையுமா என்றால், ஒவ்வொரு இயக்கங்களும் தன் கொள்கை ரீதியாக பயணம் மேற்கொள்கிறது. அவரவர் நல்ல இயக்கத்தோடு புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்ற நல்ல மனதோடு தமிழக கட்சி தலைவர் வரும்போது ஒரு மாற்றம் ஏற்படும் என்ற எண்ணம் எல்லோருக்கும் உள்ளது. அந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பு உள்ளன.

தவெக-வில் நான் இணையும்போது எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. என்னை யாரும் நிர்பந்திக்கவில்லை. நிபந்தனை விதித்து யாரும் சேர முடியாது மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இவ்வாறு அவர் கூறினார். இதனிடையே, வரும் 16-ம் தேதி தவெக தலைவர் விஜய் பிரச்சார கூட்டத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பவளத்தாம் பாளையத்தில் இடம் பற்றாக்குறையாக இருப்பதால் எஸ்.பி. அலுவலக அதிகாரிகள் அனுமதிமறுத்தனர். பவளத்தாம்பாளையத்தில் சுமார் 7 ஏக்கர் இடத்தில் 75 ஆயிரம் நபர்கள் வந்து செல்வர் என மனுவில் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து மாவட்ட எஸ்பி சுஜாதா பவளத்தாம்பாளையத்தில் நேரில் ஆய்வு செய்தார். அப்போது, கூட்டம் வரும் அளவுக்கு இடம் போதுமானதாக இல்லாததும், பார்க்கிங் வசதி இல்லாததும் தெரியவந்தது. இதனால் இங்கு கூட்டம் நடத்த அனுமதி மறுத்து, மாற்று இடத்தை தேர்வு செய்ய தவெக நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினர். இதையடுத்து, செங்கோட்டையன் தலைமையிலான தவெக-வினர் பெருந்துறை அருகே சேலம்-கொச்சின் தேசிய நெடுஞ்சாலை அருகே சரளை என்ற பகுதியில் விஜய் பிரச்சாரத்துக்கு இடம் பார்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# "அதிமுகவை ஒருங்கிணைக்க பாஜக மத்தியஸ்தம் தேவை" - தினகரன்

**திருப்பூர், டிச.9:**

திருப்பூரில் அமமுக சார்பில் மாரத்தான் போட்டி நடைபெற்றது. இதில், பங்கேற்றவர்களுக்கு கட்சியின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பரிசுகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: செங்கோட்டையன் போன்ற நீண்ட அனுபவம் கொண்ட அரசியல்வாதிகள், தவெகவில் சேர்கிறார்கள் என்றால் அந்தந்த கட்சிகள் தங்களை சீர்படுத்திக் கொள்ள வேண்டும். சில கூட்டணிக்கு தலைமை வகிக்கும் கட்சிகள் எங்களுடன் பேசி வருகின்றனர். உறுதியான முடிவு எடுத்த பின்னர் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும்.

அதிமுக ஒன்றாக இருந்தால்தான் அடுத்த நூற்றாண்டுக்கும் கட்சியை கொண்டு செல்ல முடியும். தேர்தல் முடிவுக்கு பிறகாவது, அதிமுகவில் மீண்டும் இணைப்பு ஏற்படும் என எதிர்பார்க்கிறேன். பதவி ஆசைக்காகவும், சுய லாபத்திற்காகவும் பிளவு ஏற்படுத்தியவர்கள் அவர்களாகவே திருந்த வேண்டும். அனைவரும் ஓரணியில் இணைய வேண்டும் என்றுதான் பாஜக தலைவர்கள் முயற்சி செய்தார்கள். இப்போதும் செய்கிறார்கள். ஒரு கட்சியில் நிலவும் பிரச்சனையை சரி செய்ய மத்தியஸ்தர் தேவை.

பாஜக மத்தியஸ்தம் செய்வதை நாங்கள் தவறாகப் பார்க்கவில்லை. திமுக, அதிமுகவை அடுத்து விஜய் தலைமையில் வலுவான கூட்டணி அமைய உள்ளதாக எனக்கு செய்திகள் வருகிறது.

நான் யாருடன் செல்கிறேன் என இதுவரை முடிவு எடுக்கவில்லை. இறுதி வடிவம் அடைந்த பிறகு உறுதியாக தெரிவிக்கிறேன். எங்களுக்கு எந்த நிபந்தனையும் இல்லை. நட்பு ரீதியாக பேசி உடன்பாடு எட்டப்படும் என்றார்.

# "நீங்கள் அங்காளி, பங்காளி என்றால் நாங்கள் மாமன், மச்சான்" - முதல்வருக்கு நயினார் பதில்

**சென்னை, டிச.9:**

இஸ்லாமியர்களுடன் அங்காளிகள், பங்காளிகளாக பழகுகிறோம் என முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார். நாங்கள் இஸ்லாமியர்களுடன் மாமன், மச்சானாக பழகி வருகிறோம் என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

அம்பேத்கர் நினைவு நாளையொட்டி தமிழக பாஜக சார்பில் சமபந்தி போஜனம் விழா நேற்று நடைபெற்றது. இதில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தி.நகர் சட்டப்பேரவை தொகுதி பாஜக பொறுப்பாளர் வினோஜ் பி.செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: நான் முதல்வரை பல கோணங்களில் பார்த்திருக்கிறேன். என்னை பொருத்தவரை அவர் நல்ல மனிதர்.



ஆனால், அவரது ஆட்சியை என்னால் அப்படி சொல்ல முடியவில்லை. இஸ்லாமியர்களுடன் அங்காளிகள், பங்காளி களாக பழகுகிறோம் என முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார். நாங்கள் இஸ்லாமியர்களுடன் மாமன் மச்சானாக பழகி வருகிறோம்.

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதால், இஸ்லாமியர்களுக்கு எந்தவித வருத்தமோ, பிரச்சினையோ இல்லை. 2026 தேர்தலை மனதில் வைத்து தான் இஸ்லாமியர்களுடனான உறவை அங்காளி, பங்காளி என முதல்வர் ஸ்டாலின் உறவுமுறை கொண்டாடுகிறார். இது சண்டை சச்சரவுக்கும், வாக்கு வங்கிக்காகவும் பயன்டுத்தக்கூடிய வார்த்தையாக தான் இருக்கிறது.

தமிழகம் அயோத்தி போல மாறும் என கூறியது, பகல் கனவாக போய்விடும் என கனிமொழி, சேகர்பாபு ஆகியோர் தெரிவித்துள்ளனர். உண்மையில், அவர்களுக்கு தான் பகல் கனவாக அமைய போகிறது.

திமுகவினர் கொடுத்திருந்த 525 வாக்குறுதிகளில், வெறும் 30 வாக்குறுதிகளை மட்டும் தான் நிறைவேற்றியிருப்பார்கள். எனவே, பிஹாரை போல, தமிழகத்தில் 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என கூறினார்.

# பங்குச்சந்தை: 300 புள்ளிகள் குறைந்த சென்செக்ஸ்! ஐடி பங்குகள் உயர்வு!

**புதுடெல்லி, டிச.9:**

தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 122.25 புள்ளிகள் குறைந்து 26,064.20 புள்ளிகளில் வர்த்தகமாகி வருகிறது.

பஜாஜ் ஃபைனான்ஸ், பாரத் எலக்ட்ரானிக்ஸ், என்டிபிசி, ஏசியன் பெயிண்ட்ஸ், பவர் கிரிட், டிரெண்ட், சன் பார்மா, ஐசிஐசிஐ வங்கி ஆகியவை இன்று சென்செக்ஸில் அதிக இழப்பைச் சந்தித்தன.

மறுபுறம் எடர்னல், டெக் மஹிந்திரா, டிசிஎஸ், டாடா மோட்டார்ஸ் பிவி, இன்ஃபோசிஸ், எச்சிஎல் டெக், டாடா ஸ்டீல், ஆர்ஐஎல் ஆகியவை அதிக லாபம் ஈட்டி வருகின்றன.

நிஃப்டி மிட்கேப் குறியீடு 0.39 சதவீதமும் ஸ்மால் கேப் குறியீடு 0.77 சதவீதமும் சரிந்தன.

துறைகளில், நிஃப்டி ரியல் எஸ்டேட் ,பொதுத்துறை வங்கி, பார்மா குறியீடுகள் 0.3 சதவீதம் முதல் 0.5 சதவீதம் வரை சரிந்தன. அதேநேரத்தில் நிஃப்டி ஐடி 0.5 சதவீதமும் நிஃப்டி உலோகம் 0.2 சதவீதமும் உயர்ந்தன.

# ஃபெட் முடிவுக்கு முன்னதாக உச்சத்தை தொடும் தங்கம்!



புதுதில்லி: அமெரிக்க ரிசர்வ் கொள்கை முடிவுக்காக காத்திருக்கும் முதலீட்டாளர்கள் கவனமும், அதே வேளையில் ரூபாயின் பலவீனம் அதிகரிப்பதாலும், வரும் வாரத்தில் தங்கத்தின் விலை உறுதியாகவே இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வட்டி விகிதக் குறைப்பு மற்றும் மத்திய வங்கி கொள்முதல்கள் தொடர்ந்து நிகழும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தங்கம் உச்சத்தை நோக்கி பயணித்து வருகிறது.

வர்த்தகர்கள் அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் கூட்ட முடிவு குறித்தும் அதே வேளையில் ஃபெட் தலைவர் ஜெரோம் பவல் கருத்து குறித்து கவனம் செலுத்தி வருவதால் தங்கம் தற்போதைய சூழ்நிலையில் நேர்மறையாக இருக்கும். மல்டி கமாடிட்டி எக்ஸ்சேஞ்சில், இந்த வாரம் தங்கம் ரூ.958ஆக உயர்ந்துள்ளது.

டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு காரணமாக இந்திய சந்தைகளில் தங்கத்தின் விலை காமெக்ஸ் சந்தையில் உயர்ந்துள்ளன. அதே வேளையில், சர்வதேச சந்தைகளில், காமெக்ஸ் தங்கம் வணிகம் இந்த வாரத்தில் 11.9 அமெரிக்க டாலர்கள் சரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

# கள்ளக்குறிச்சியில் பெற்றோரை இழந்து தவித்த குழந்தைகளுக்கு முதல்வர் ஸ்டாலின் உதவி



**சென்னை, டிச.9:**

முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில், இன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், பூட்டை கிராமத்தைச் சேர்ந்த பெற்றோர்களை இழந்த நான்கு குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு வீட்டுமனைப் பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு, பணிநியமன ஆணை, அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் நிதியுதவி, திறன் பயிற்சிக்கான உதவித்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பூட்டை கிராமத்தைச் சேர்ந்த கமலக்கண்ணன் கடந்த மாதம் 14ஆம் தேதி உடல்நலக் குறைவால் காலமானார். அவரது மனைவி வசந்தி அவர்களும் 2017-ஆம் ஆண்டே உடல்நலக் குறைவால் காலமானார். இத்தம்பதியருக்கு 3 பெண் மற்றும் 1 ஆண் குழந்தைள் உள்ளனர்.

பெற்றோரை இழந்து தவிக்கும் நான்கு குழந்தைகளை முதல்வர் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியதோடு, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதியளித்தார். இந்த நான்கு குழந்தைகளும் இனி நம் அரசின் குழந்தைகள்! அவர்களது எதிர்காலத்தை அரசு பாதுகாக்கும் என்று முதல்வர் தனது சமூகவலைதளப் பதிவில் தெரிவித்திருந்தார்.

அதன்படி, இன்றையதினம் முதல்வர், மறைந்த கமலக்கண்ணன் அவர்களின் மகள் செல்வி லாவண்யாவிற்கு ரூ.2,50,000/- மதிப்பிலான வீட்டுமனைப் பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3,55,600/- மதிப்பீட்டில் வீடு கட்டுதவற்கு ஒதுக்கீடு ஆணை, சங்கராபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கணினி உதவியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணையினையும், மகள் செல்வி ரிஷிகா மற்றும் மகன் செல்வன் அப்னேஷ் ஆகியோருக்கு அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் மாதம் தலா ரூ.2000/- நிதி உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், மகள் செல்வி ரீணாவிற்கு திறன் அழகு கலை பயிற்சி பெறுவதற்காக ரூ.6,000/- உதவித்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

# ஆண்களுக்கும் வரப்போகுது இலவச பேருந்து பயணம்..! விரைவில் அறிவிப்பு

பெண்களுக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில் பெண்களுக்கான விடியல் பயணம் எனும் இலவச பேருந்து பயணத் திட்டம், பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இத்திட்டத்தின்படி சாதாரண பேருந்துகளில் பெண்கள் இலவசபயணத்தை மேற்கொள்ளலாம். இந்நிலையில் ஆண்களுக்கும் விடியல் பயணத் திட்டம் போலவே இலவச பேருந்து பயணத் திட்டத்தை கொண்டு வர தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது.



தமிழ்நாட்டில் அடுத்த வருடம் சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதால், ஓரிரு மாதங்களுக்குள் தமிழக அரசு, பொதுமக்களுக்கு மேலும் சில திட்டங்களை கொண்டு வர ஆயத்தமாகி வருகிறது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாகவே ஆண்களுக்கும் இலவச பேருந்து பயணம் வேண்டும் என கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. இந்நிலையில் 60 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் இலவச பேருந்துபயணத்தை உறுதி செய்ய தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டு, பெண்கள் சாதாரண பேருந்துகளில் இலவசமாக பயணிக்க விடியல் பயணத் திட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்தது. இதன்படி வெள்ளை நிற பலகை கொண்ட பேருந்துகளில் இலவச டிக்கெட்டைப் பெற்று பெண்கள் பயணித்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் பெண்களின் பயண செலவுகள் குறைவதோடு பள்ளி, கல்லூரி மற்றும் வேலைக்குச் செல்லும் மாணவிகளுக்கும் உதவியாக இருக்கிறது.

பெண்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்ற இத்திட்டத்தை ஆண்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என ஏற்கனவே கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வந்தன.

இந்நிலையில் தற்போது சட்டமன்றத் தேர்தல் வரவுள்ள நிலையில் 60 வயதுக்கும் மேற்பட்ட ஆண்களுக்கு இலவச பேருந்து பயணத்தை வழங்கிட மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இன்னும் ஓரிரு மாதங்களில் இதற்கான அறிவிப்பு வெளியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே மூத்த குடிமக்களுக்கான சிறப்பு கட்டண சலுகைகள் மற்றும் இலவச மாதாந்திர பேருந்து அட்டை திட்டம் அமலில் இருக்கும் நிலையில், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவச பேருந்து பயணம் என்பது மூத்த குடிமக்களுக்கு உதவியாக இருக்கும்.

விடியல் பயணம் திட்டத்தின் மூலம் தினந்தோறும் சராசரியாக தமிழ்நாட்டில் 57.81 லட்சம் பெண்கள் பயனடைந்து வருகிறார்கள். மேலும் ஒவவொரு மகளிரும் மாதந்தோறும் ரூ.800 முதல் ரூ.1,000 வரை சேமிக்கின்றனர் எனவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை சீராகும் போது, அனைத்து ஆண்களுக்கும் விடியல் பயணம் வழங்க பரிசீலிக்கப்படும் என ஏற்கனவே அமைச்சர் சிவசங்கர் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறுகையில், "தமிழ்நாட்டில் அனைத்து ஆண்களுக்கும் சாதாரண பேருந்துகளில் இலவச பயணம் என்பது சாத்தியமாகாத ஒன்று. ஏனெனில் அனைத்து ஆண்களுக்கும் இலவச பேருந்து பயணத்தை வழங்கினால் போக்குவரத்து துறையில் மிகப்பெரிய வருவாய் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

இந்நிலையில் தான் 60 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் இலவச பேருந்து பயணத் திட்டத்தை கொண்டு வர தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது. வெகு விரைவில் இதற்கான அறிவிப்பு வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது" என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அன்பு மனம்



" ரமேஷ் - ராணி இருவரும் அண்ணன் தங்கை . ராணிக்கு திருமணம் ஆகிவிட்டது . ரமேஷ் திருமணம் செய்து ஒரு குழந்தைக்கு தகப்பன் ஆனான் .

ரமேஷ் - ராணி இவர்களின் தாய் தந்தை இருவரும் இறந்து விட்டனர் .

ரமேஷ் மனைவி பூஜா. ரமேஷ் மகன் விஷால் பள்ளியில் படிக்கிறான் .

ராணிக்கு திருமணமாகி ஆறு ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை.

இதற்கிடையில் ராணியின் கணவர் கல்லீரல் பாதிப்பால் பாதிக்கப்பட்டு ஒரு மாத தீவிர சிகிச்சைக்கு பிறகு உயிரிழந்தார் . கையில் இருந்த பணம் எல்லாம் செலவாகி விட அன்னக்காவடி போல் ரமேஷ் வீட்டில் வந்து தஞ்சம் புகுந்தாள் .

பூஜாவின் கொடுங்கோல் ஆட்சி நடக்க தொடங்கியது . ராணி மனம் தளராமல் பூஜா வீட்டில் இருந்தாள் .

அருகாமையில் உள்ள ஒரு அங்கன்வாடியில் வேலையில் சேர்ந்தாள் . தன் கை செலவிற்கு பார்த்துக் கொண்டாள் ராணி .

சில ஆண்டுகள் கழித்து ரமேஷ் மனச்சுமையால் நோய்வாய் பட்டு இறந்து போனார் . பூஜா இன்னும் கோபம் அடைந்து ராணியை ஆட்டி வைத்தாள் .

விதவையான பிறகும் ஒரு விதவையின் வலியை உணர வில்லையே என்று மிகவும் வருந்தினாள் ராணி .

பூஜாவின் மகன் கல்லூரி செல்ல தொடங்கி விட்டான் . அங்கன்வாடி அமைப்பாளர் ராணியோடு வேலை செய்த ஆறுமுகம் ராணியை விரும்பினார் . தன் விருப்பத்தை ராணியிடம் நேரம் வரும் போது வெளிப்படுத்தினார் .

ராணி நன்கு யோசித்து பூஜாவின் நடவடிக்கை மாறாததால் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாள் .

ஆறுமுகம் ராணி திருமணம் நடந்து ஒரு குழந்தை பிறந்தது . வசதி வாய்ப்பு கையிருப்பு கூடிப் போனது .

பூஜா கையில் பணம் இல்லாமல் விஷால் படிப்புக்கு பணம் கட்ட முடியாமல் தவித்தாள் .
ராணிக்கு செய்த துரோகம் தான் வாழ்வின் கஷ்டத்துக்கு காரணம் என்பதை உணர்ந்தாள் . விதவையின் வலி என்ன என்பதையும் உணர்ந்தாள் .

உடன் தன் மகன் விஷாலை ராணியை சந்தித்து பேச அடிக்கடி அனுப்பி வைத்தாள் பூஜா.

விஷால் படிப்பை ராணி ஏற்றுக் கொண்டாள் .
விஷால் அழைக்க ராணி பூஜா வீட்டிற்கு சென்றாள் .

பூஜா மனப்பூர்வமாக ராணியிடம் மன்னிப்பு கேட்டாள் . உறவு மீண்டும் மலர்ந்தது .

பூஜாவையும் விஷாலையும் தன் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டாள் ராணி .


தன் அண்ணன் ரமேஷ் தன் மீது காட்டிய அக்கறையை ஆதரவாக எண்ணிய ராணி இப்போது அதே அக்கறையை தன் அண்ணன் மனைவி பூஜா மற்றும் அண்ணன் மகன் விஷால் மீது காட்டினாள்.

அன்பும் ஆதரவும் மட்டும் தான் மனித உலகின் வாழ்க்கை ரகசியங்கள் என்பது இப்போது பூஜாவிற்கு நன்றாக புரிய தொடங்கியது ..."

**- சீர்காழி.**
**ஆர். சீதாராமன்.**

# "ஓடமும் ஒரு நாள்"





"டேய் பாலு... இந்த சைக்கிள்... வாங்கினதா... இல்லை... பூமிக்கு அடில இருந்து தோண்டி எடுத்ததா?" பணக்கார வீட்டுப் பையனான குண்டு வினோத், ஏழைப் பையன் குமாரைப் பார்த்து நக்கலடிக்க,

"ஹோ..." வென்று சிரித்தனர் அவன் நண்பர்கள்.

இன்னொருவன், "டேய் இது ஹைதர் அலி காலத்து சைக்கிள்டா" என்றான். மீண்டும் சிரிப்பொலி.

செயின் கழன்று போன காரணத்தால் தன் பழைய சைக்கிளைத் தள்ளியபடி நடந்து கொண்டிருந்த குமாருக்கு கண்களில் நீர் முட்டியது.
வீட்டிற்கு வந்ததும் அப்பாவிடம் நடந்ததைச் சொல்லி அழ, அவனைச் சமாதானப்படுத்திய தந்தை உடனே சைக்கிளை ரிப்பேருக்குக் கொண்டு சென்றார்.

மறுநாள் சரி செய்யப்பட்ட சைக்கிளை ஓட்டி வந்த குமாரை, குண்டு வினோத்தின் பணக்காரக் கும்பல் மறுபடியும் கிண்டல் செய்து தீர்த்தது.

ஒரு மாதத்திற்குப் பிறகு, பள்ளி இறுதியாண்டுத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் கடைசிப் பரிட்சையன்று வேகவேகமாக தன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த குமார், சாலையோரம் நின்று அழுது கொண்டிருந்த வினோத்தையும், அவனருகில் முன் சக்கரம் வளைந்த நிலையில் கிடந்த அவனது காஸ்ட்லி சைக்கிளையும் பார்த்து நின்றான்.

"டேய் குமார் ஹெல்ப் பண்ணுடா என்னோட சைக்கிளை ஒரு திமிர் பிடிச்ச பணக்காரன் கார்ல இடிச்சுத் தள்ளிட்டுப் போயிட்டான்" வினோத் கெஞ்ச,

"ஏன் உன்னோட பணக்கார தோஸ்துக எவனாச்சு கூட டபிள்ஸ் ஏறி போக வேண்டியதுதானே?"
"அவனுக தங்களோட காஸ்ட்லி சைக்கிள்ல என்னை மாதிரி குண்டனை ஏத்தினா டயர் வெடிச்சிடும்னு சொல்லிட்டுப் போயிட்டானுக.."

"சரி... இப்ப வேணும்கறே!" குமார் கேட்டான்.
"உன் சைக்கிள்ல... என்னை?"
"அய்யய்ய... இது ஹைதர் காலத்து..."
குமார் சொல்லி முடிக்கும் முன், "ஸாரி... அன்னிக்குத் தெரியாம.. "

"சரி.. சரி... வந்து ஏறு... இன்னிக்கு எக்ஸாம்... நான் மறுத்தா நீ ஃபெயிலாயிடுவே... அப்படி ஆகக் கூடாதுன்னு கூட்டிட்டிப் போறேன்"

அடுத்த நாளிலிருந்து அந்தப் பணக்கார கும்பல் குமாரின் சைக்கிளை கிண்டல் செய்வதில்லை.



**-முகில் தினகரன்**
கோயம்புத்தூர்.

# மன்னித்து அருளும் மன்னீஸ்வரர்





கொங்கு மண்டலம் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள அன்னூர் மன்னீஸ்வரர் என்ற சிவன் கோவில். சுமார்1500 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவிலாக கருதப்படுகிறது
முன்பு காடாக இருந்த இந்த பகுதி வள்ளி வனம் என அழைக்கப்படுகிறது அன்னி என்ற வேடன் காட்டிலுள்ள மிருகங்கள் பறவைகள் இவற்றை வேட்டையாடி சாப்பிடுவது பாவம் என கருதினான்
எனவே அவன் காட்டில் உள்ள பழங்கள் காய்கறிகள் கிழங்குகள் சாப்பிட்டு வந்தான்

ஒரு சமயம் காட்டுப்பகுதியில் அவன் கிழங்கு தோண்டி எடுக்கும் போது அந்த இடத்தில் மிகப்பெரிய ஓசை கேட்டது அருகில் ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் ஓடி வந்து பார்த்தார்கள் தோண்டிப் பார்க்க உள்ளே சிவபெருமான் சுயம்பு வடிவில் இருந்தார் மண்ணிலிருந்து எடுக்க எவ்வளவோ முயன்றார்கள் முடியவில்லை அருகில் இருந்த சேர மன்னனை அழைத்து வந்து மன்னரிடம் விஷயத்தை கூறினான் மன்னர் தனது ஆட்களை அனுப்பி அந்த இடத்தில் பள்ளம் தோண்டி பார்க்கச் சொன்னார் அங்கே மிகவும் ஆழமான பகுதியில் ஒரு சிவலிங்கம் தென்பட்டது அதை எவ்வளவோ எடுக்க முயன்றும் அவர்களால் எடுக்க முடியவில்லை. உடனே மன்னன் அந்த சிவலிங்கத்தை சங்கிலியால் பிணைத்து யானைகளை கொண்டு இழுக்க செய்தான் அப்படி இருந்தும் சிவலிங்கம் வெளியே வரவில்லை

பின்னர் ராஜ குருவின் யோசனைப்படி அந்த இடத்தில் பூஜை பரிகாரங்கள் செய்தவுடன் சிவலிங்கம் வெளிப்பட்டது. தன்னை சங்கிலியால் பிணைத்து எடுத்த காரணத்தால் மன்னனை தண்டிக்காமல் மன்னித்து விட்டதால் இந்த சிவன் மன்னீஸ்வரர் என அழைக்கப்பட்டார். அன்னி என்ற வேடன் மூலம் சிவலிங்க வெளி பட்டதால் இந்த ஊருக்கு அன்னூர் என பெயர் ஏற்பட்டது. இங்குள்ள சிவபெருமான் சுயம்பு வடிவமாக மன்னனை மன்னித்ததால் மன்னீஸ்வரர் என பெயர் பெற்றார். மன்னன் பாவங்களை போக்கியதால் இந்த கோவில் பாவங்களைப் போக்கும் பரிகார ஸ்தலமாக போற்றப்படுகிறது



மக்கள் பாவங்களைப் போக்குவதற்காக இந்த கோவிலுக்கு வருகை தருகிறார்கள். இந்த கோவிலுக்கு வந்தால் அவர்கள் செய்த பாவங்கள் நிவர்த்தி அடையும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் உள்ளது.
மூலவர் மன்னீஸ்வரர் உடன் அருந்தவச்செல்வி அம்மன் என அழைக்கப்படுகிறார்கள். சுமார் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோவிலாக உள்ளது. கருடன் உயரத்திலிருந்து பறந்து கீழே உள்ள பொருட்களை துல்லியமாக பார்க்கும் திறன் உடையது.



அதேபோன்று மனிதர்கள் செய்யும் பாவங்களை மன்னீஸ்வரர் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.
இந்தக் கோவிலில் மன்னர்கள் பற்றிய 51 கல்வெட்டுகள் உள்ளது.

மன்னீஸ்வரர் கைலையில் உள்ளது போல் சுயம்புவாக காட்சி தருகிறார் இதுபோல் தமிழ்நாட்டில் வேறு எந்த கோவிலிலும் இல்லை அம்மன் அருந்தவ செல்விக்கு தனி சன்னதி உள்ளது
இவை தவிர சுற்று பிரகாரங்களில் பைரவர் குரு பகவான் நடராஜர் வள்ளி தெய்வானை சமேத முருகன் நால்வர் 63 நாயன்மார்கள் ஆகியோர் வீற்றிருக்கிறார்கள். சனி பகவானுக்கும் காலபைரவருக்கும் தனி சன்னதிகள் உள்ளது.

மூலவராக எம்பெருமான் மேற்கு நோக்கி காட்சி தருகிறார். இங்குள்ள சிவனை தரிசித்தால் ஆயிரம் லிங்கங்களை தரிசித்த பலன் கிடைக்கும். கருவறையில் உள்ள சுவாமி மணல் நிறத்தில் காணப்படுகிறார். லிங்கத்தின் இருபுறமும் கருடன் இறக்கை போன்று காணப்படுகிறது

இன்றும் சிவலிங்கத்தின் மேல் பகுதியில் மன்னன் சங்கிலியால் பிணைத்த தடமும் வேடன் கோடாலியால் வெட்டிய தழும்பும் காணப்படுகிறது தொழில் வியாபாரம் செழிக்கவும் தங்களது பாவங்கள் போக்கவும் ஏழரை சனி அஷ்டமி சனியலிருந்து விடுபடவும் இந்த கோவிலுக்கு உள்ளூர் மக்கள் தவிர வெளியூரில் இருந்தும் நிறைய பக்தர்கள் வருகிறார்கள் அன்னூர் பேருந்து நிலையம் அருகிலேயே கோவில் அமைந்துள்ளது அனைத்து ஊர்களில் இருந்தும் கோவிலுக்கு வர பேருந்து வசதி உள்ளது மார்கழி பிரமோற்சவம் சித்திரை வருடப்பிறப்பு வைகாசி பூஜை மகா சிவராத்திரி திருக்கார்த்திகை அம்மாவாசை பௌர்ணமி போன்ற நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது இந்த கோவிலுக்கு வருபவர்களுக்கு அவர்கள் செய்த உன் ஜென்ம பாவ தோஷங்கள் நீங்க 21 தீபம் ஏற்றி 21 முறை கோவிலை சுற்றிவர தோஷங்கள் நிவர்த்தியாகும். முருகப்பெருமானுக்கு கார்த்திகை தோறும் தனியாக கோவில் உட்புறத்தில் தேர் ஓடும் தேரில் முருகர் பவனிப்பார் முருகனுக்காக தற்போது தங்கத்தேர் செய்யும் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் சிவபெருமானுக்கு விநாயகருக்கும் இரண்டு தேர் உள்ளது சிறப்பாக தேர் திருவிழா நடைபெறும் இந்த மார்கழி மாதம்16 டிசம்பர் 31 2025 அன்று மிகச் சிறப்பாக தேர் திருவிழா நடைபெற உள்ளது அனைத்து பக்தர்களும் வந்து மன்னீஸ்வரர் தேரை வடம் பிடித்து இழுத்து இறையருள் பெறுக



**பொன்விழி**
அன்னூர்

# ஏன் விநாயகர் சிலையை கரைக்கின்றோம் தெரியுமா?

ஆடிப்பெருக்கில் வெள்ளம் வந்து ஆற்றில் உள்ள மணல் யானையும் அள்ளி அடித்துச் சென்று விடும். அதனால் அவ்விடத்தில் உள்ள நீர், நிலத்தில் தங்காமல் ஓடிக் கடலை சென்றடைந்து விடும். இதனால் அந்த இடங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விடும். இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்த நம் முன்னோர்கள் நீர் ஆற்றில் தங்குவதற்கு கெட்டியான களிமண்ணை ஆற்றில் கரைத்தால் அந்த மண் ஆற்றில் கரைந்து ஆற்று நீரை தடுத்து நிலத்தடி நீரை உயர்த்திவிடும் என்பது அவர்களின் அன்றைய கணிப்பானது. அதனால் தான் குறிப்பிட்ட ஆடி மாதம் முடிந்து அதற்கு அடுத்த மாதமான ஆவணி மாத சதுர்த்தியை "விநாயகர் சதுர்த்தியாக" கொண்டாடி வந்துள்ளனர். அன்று களி மண்ணால் ஆன பிள்ளையார் சிலைகளை செய்து அவற்றை வணங்கி வழிபாடு செய்து விட்டு ஆற்றில் கரைத்தும் வந்துள்ளார்கள். இப்படி ஒவ்வொரு வீட்டிலும் இருந்து களி மண்ணால்



உருவாக்கப்பட்ட விநாயகர் சிலைகளை ஆற்றில் கரைக்கும் பொழுது அந்த இடத்தில் நீர் கீழே பூமியுள் உறிஞ்சப்பட்டு நிலத்தடி நீர் அதிகரிக்கும்.

விநாயகர் சதுர்த்தி அன்று உருவாக்கப்படும் களி மண்ணால் ஆன விநாயகர் சிலைகள் ஆரம்பத்தில் ஈரப்பதமாக இருப்பதால் அதை அன்றே கரைத்தால் ஈரமான மண்ணும் ஆற்று நீரில் அடித்து செல்லப்படும் வாய்ப்புள்ளதால் சதுர்த்தி முடிந்து மூன்றாவது நாளில் சிலையின் மண் நன்றாக கெட்டியாகியிருக்கும்.

அதனால் அப்பொழுது கரைக்கும்போது மண் ஆற்றில் கரைந்து அப்படியே நீரில் அடியில் படிந்து விடும். அதனால் நீர் அந்த இடத்தில் தடுக்கப்பட்டு களிமண்ணால் உறிஞ்சப்பட்டு நிலத்தடியில் தங்கிவிடும். அதனால் தான் விநாயகர் சதுர்த்தியின் போது விநாயகர் சிலைகளை களிமண்ணால் செய்து ஆற்றில் கரைத்து வந்திருக்கின்றனர் நமது முன்னோர்கள். இதனால் ஆற்றில் வரும் நீரானது பூமியில் நிலத்தடி நீராக மாறி நமக்கான குடிநீர் பிரச்னையை தீர்க்கும். இதனால் தான் நமது முன்னோர்கள் விநாயகர் சிலைகளை ஆற்றில் மட்டும் கரைத்து வந்துள்ளனர்.

இன்று ஆற்று நீர் நிலைகளில் நீர் இல்லாததால் ஏதாவது ஒரு நீர் நிலையில் கரைத்தாக வேண்டும் என்ற சடங்கிற்காக காலத்திற்கேற்ப மாறிவிட்ட கலர் கலரான ரசாயனம் பூசப்பட்ட விநாயகர் நிலைகளை சம்பிரதயாத்திற்காக வாங்க ஆரம்பித்து விட்டார்கள்.

*இப்போது சாயம் மற்றும் பல வண்ணங்கள் சேர்த்து உருவாக்கப்படும் விநாயகர் சிலைகளை ஆற்றில் கரைப்பதால் நீர் தான் மாசுபடுகிறது. மக்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் காரியம், இன்று அந்த மக்களுக்கே தீங்காக அமைகிறது என்பது வருத்தத்திற்குரியதாகவும் உள்ளது இந்த நவீன காலத்தில்.

ஓம் விக்னேஸ்வராய நமஹ!



ப.கோபிபச்சமுத்து
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# அருணா ஆசப் அலி வரலாறு

அருணா ஆசஃப் அலி ( நீ கங்குலி ) ( வங்காள உச்சரிப்பு: 16 ஜூலை 1909 - 29 ஜூலை 1996) ஒரு இந்திய கல்வியாளர், அரசியல் ஆர்வலர் மற்றும் வெளியீட்டாளர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்ற இவர் , 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயின் கோவாலியா டேங்க் மைதானத்தில் இந்திய தேசியக் கொடியை ஏற்றியதற்காக பரவலாக நினைவுகூரப்படுகிறார் . சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் அரசியலில் தீவிரமாக இருந்தார், டெல்லியின் முதல் மேயரானார்.

### ஆரம்ப கால வாழ்க்கை

அருணா அசாஃப் அலி ஜூலை 16, 1909 அன்று பிரிட்டிஷ் இந்தியாவின் பஞ்சாபில் உள்ள கல்காவில் (இப்போது ஹரியானா , இந்தியா) ஒரு வங்காள பிராமண குடும்பத்தில் பிறந்தார் . அவரது தந்தை உபேந்திரநாத் கங்குலி கிழக்கு வங்காளத்தின் (இப்போது வங்காளதேசம் பரிசால் மாவட்டத்தைச் சேர்ந்தவர், ஆனால் ஐக்கிய மாகாணத்தில் குடியேறினார். அவர் ஒரு உணவக உரிமையாளராக இருந்தார். அவரது தாயார் அம்பலிகா தேவி, பல பிரம்மோ பாடல்களை எழுதிய புகழ்பெற்ற பிரம்மோத் தலைவர் த்ரைலோக்யநாத் சன்யாலின் மகள் . உபேந்திரநாத் கங்குலியின் தம்பி தீரேந்திரநாத் கங்குலி (டிஜி) ஆரம்பகால திரைப்பட இயக்குனர்களில் ஒருவர். [ 4 ] மற்றொரு சகோதரர் நாகேந்திரநாத், நோபல் பரிசு வென்ற ரவீந்திரநாத் தாகூரின் ஒரே மகள் மீரா தேவியை மணந்த பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தார் . [ 5 ] அருணாவின் சகோதரி பூர்ணிமா பானர்ஜி இந்திய அரசியலமைப்பு சபையின் உறுப்பினராக இருந்தார் . அருணா லாகூரில் உள்ள சேக்ரட் ஹார்ட் கான்வென்ட்டிலும் , பின்னர் நைனிடாலில் உள்ள ஆல் செயின்ட்ஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார் . பட்டம் பெற்ற பிறகு, கல்கத்தாவில் உள்ள கோகலே நினைவுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார் . காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஆசஃப் அலியை அலகாபாத்தில் சந்தித்தார் . மதம் மற்றும் வயது அடிப்படையில் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி (அவர் ஒரு முஸ்லிம் மற்றும் அவரை விட 20 வயது மூத்தவர்) அவர்கள் 1928 இல் திருமணம் செய்து கொண்டனர்.

1928 செப்டம்பரில் ஆசாஃப்பும் நானும் திருமணம் செய்துகொண்டபோது என் தந்தை இல்லை. என் தந்தைவழி மாமா நாகேந்திரநாத் கங்குலி, ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர், தன்னை என் பாதுகாவலராகக் கருதினார், அவர் உறவினர்களிடமும் நண்பர்களிடமும், அவரைப் பொறுத்தவரை நான் இறந்துவிட்டேன் என்றும், அவர் என் ஷ்ரத்தாவைச் செய்துவிட்டார் என்றும் கூறினார்.

### வாழ்க்கை மற்றும் தொழில் இந்திய சுதந்திர இயக்கத்திற்கு பங்களிப்பு

இந்திய சுதந்திர இயக்கத்தில் அருணா ஆசஃப் அலி முக்கிய பங்கு வகித்தார். ஆசஃப் அலியைத் திருமணம் செய்து கொண்ட பிறகு இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினரானார் , உப்பு சத்தியாக்கிரகத்தின் போது பொது ஊர்வலங்களில் பங்கேற்றார் . 21 வயதில் அவர் ஒரு நாடோடி என்று குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் , எனவே 1931 ஆம் ஆண்டு காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் கீழ் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். மற்ற பெண் சக கைதிகள் அவர் விடுவிக்கப்படும் வரை வளாகத்தை விட்டு வெளியேற மறுத்து, மகாத்மா காந்தி தலையிட்ட பின்னரே சரணடைந்தனர் . ஒரு பொதுப் போராட்டம் அவரை விடுதலை செய்தது.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது முக்கியத்துவம் பெறுதல் ஆகஸ்ட் 8, 1942 அன்று, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாய் அமர்வில் வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை நிறைவேற்றியது . அரசாங்கம் முக்கிய தலைவர்களையும் காங்கிரஸ் செயற்குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் கைது செய்து , இயக்கத்தை வெற்றியிலிருந்து தடுக்க முயன்றது. ஆகஸ்ட் 9 அன்று அமர்வின் மீதமுள்ள பகுதிக்கு இளம் அருணா ஆசஃப் அலி தலைமை தாங்கினார் மற்றும் கோவாலியா டேங்க் மைதானத்தில் காங்கிரஸ் கொடியை ஏற்றினார். இது இயக்கத்தின் தொடக்கத்தைக் குறித்தது. அமர்வில் காவல்துறையினர் சட்டமன்றத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆபத்தை எதிர்கொண்ட துணிச்சலுக்காக அருணா 1942 இயக்கத்தின் ராணி என்று அழைக்கப்பட்டார், மேலும் அவரது பிற்காலங்களில் சுதந்திர இயக்கத்தின் கிராண்ட் ஓல்ட் லேடி என்று அழைக்கப்பட்டார் . நேரடித் தலைமை இல்லாத போதிலும், இந்தியாவின் இளைஞர்கள் சுதந்திரம் அடைய வேண்டும் என்ற விருப்பத்தின் வெளிப்பாடாக, நாடு முழுவதும் தன்னிச்சையான போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. அவரது பெயரில் ஒரு கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது, ஆனால் கைது செய்வதைத் தவிர்க்க அவர் தலைமறைவாகி 1942 ஆம் ஆண்டு ஒரு தலைமறைவு இயக்கத்தைத் தொடங்கினார். அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு விற்கப்பட்டன. இதற்கிடையில், ராம் மனோகர் லோஹியாவுடன் சேர்ந்து காங்கிரஸ் கட்சியின் மாத இதழான இன்குலாப் பத்திரிகையையும் அவர் ஆசிரியராகக் கொண்டிருந்தார். 1944 ஆம் ஆண்டு இதழில், வன்முறை மற்றும் அகிம்சை பற்றிய வீண் விவாதங்களை மறந்து புரட்சியில் சேருமாறு இளைஞர்களை அவர் ஊக்குவித்தார் . ஜெயபிரகாஷ் நாராயண் மற்றும் அருணா ஆசஃப் அலி போன்ற தலைவர்கள் "காந்தியின் அரசியல் குழந்தைகள் ஆனால் கார்ல் மார்க்ஸின் சமீபத்திய மாணவர்கள்" என்று விவரிக்கப்பட்டனர். அவரைப் பிடித்ததற்காக அரசாங்கம் 5,000 ரூபாய் வெகுமதியை அறிவித்தது. அவர் நோய்வாய்ப்பட்டு டெல்லியில் உள்ள கரோல் பாக் நகரில் உள்ள டாக்டர் ஜோஷி மருத்துவமனையில் சிறிது காலம் மறைந்திருந்தார். மகாத்மா காந்தி, மறைவிலிருந்து வெளியே வந்து சரணடையுமாறு அவருக்கு கையால் எழுதப்பட்ட குறிப்பை அனுப்பினார் - அவரது பணி நிறைவேறியதாலும், வெகுமதித் தொகையை ஹரிஜன நலனுக்காகப் பயன்படுத்த முடியும் என்பதாலும் .



சுதந்திரத்திற்குப் பிந்தைய மற்றும் மேயர் பதவி காங்கிரஸ் கட்சிக்குள் சோசலிச சார்புகளைக் கொண்ட ஆர்வலர்களுக்கான ஒரு குழுவான காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தார் . சோசலிசத்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னேற்றத்தில் ஏமாற்றமடைந்த அவர் 1948 இல் சோசலிஸ்ட் கட்சி என்ற புதிய கட்சியில் சேர்ந்தார். இருப்பினும், அவர் எடததா நாராயணனுடன் அந்தக் கட்சியை விட்டு வெளியேறினார், மேலும் அவர்கள் ரஜனி பால்மே தத்துடன் மாஸ்கோவிற்குச் சென்றனர் . இருவரும் 1950 களின் முற்பகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். தனிப்பட்ட முறையில், 1953 இல் ஆசஃப் அலி இறந்தபோது அவர் துக்கமடைந்தார். 1954 ஆம் ஆண்டில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மகளிர் பிரிவான இந்திய மகளிர் தேசிய கூட்டமைப்பை உருவாக்க அவர் உதவினார் , ஆனால் 1956 ஆம் ஆண்டில் நிகிதா குருசேவ் ஸ்டாலினை கைவிட்டதைத் தொடர்ந்து கட்சியை விட்டு வெளியேறினார் . 1958 ஆம் ஆண்டில், அவர் டெல்லியின் முதல் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். டெல்லியில் சமூக நலன் மற்றும் மேம்பாட்டிற்காக கிருஷ்ண மேனன், விம்லா கபூர், குரு ராதா கிஷன் , பிரேம்சாகர் குப்தா, ரஜனி பால்மே ஜோதி, சர்லா சர்மா மற்றும் சுபத்ரா ஜோஷி போன்ற அவரது சகாப்தத்தின் சமூக ஆர்வலர்கள் மற்றும் மதச்சார்பற்றவர்களுடன் அவர் நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்தார்.



கோவா விடுதலை இயக்கம் டிசம்பர் 1960 இல், அவர் அப்போதைய இந்திய உள்துறை அமைச்சர் பண்டிட் பந்தை புது தில்லியில் சந்தித்து , கோவாவின் விடுதலைக்காக இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திய ஒரு குழுவில் ஒருவராக இருந்தார். அந்தக் குழுவில் எக்லிட்டோ டி'சோசா, ஐரீன் ஹெரேடியா , விஸ்வநாத் லாவண்டே , லம்பேர்ட் மஸ்கரென்ஹாஸ் , ஜார்ஜ் வாஸ் மற்றும் பெர்த்தா பிராகன்சா ஆகியோர் அடங்குவர் .

பதிப்பகத் துறையில் தொழில் அவரும் நாராயணனும் லிங்க் பதிப்பகத்தைத் தொடங்கி, அதே ஆண்டில் பேட்ரியாட் என்ற தினசரி செய்தித்தாளையும், லிங்க் என்ற வார இதழையும் வெளியிட்டனர். ஜவஹர்லால் நேரு , கிருஷ்ண மேனன் மற்றும் பிஜு பட்நாயக் போன்ற தலைவர்களின் ஆதரவின் காரணமாக இந்த வெளியீடுகள் மதிப்புமிக்கதாக மாறியது . பின்னர், தனது தோழர்களின் நம்பிக்கையை பேராசையால் கைப்பற்றியதால் அதிர்ச்சியடைந்த உள் அரசியல் காரணமாக, பதிப்பகத்தை விட்டு வெளியேறினார். அவசரநிலை குறித்த சந்தேகங்கள் இருந்தபோதிலும் , அவர் இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தியுடன் நெருக்கமாக இருந்தார் .

அவர் "ஐடியாஸ் ஆஃப் எ நேஷன்" என்ற புத்தகத்தை எழுதினார் , இது பின்னர் இந்தியாவின் அறுபதாம் ஆண்டு சுதந்திரத்தை நினைவுகூரும் வகையில் பெங்குயின் அவர்களின் வேர்ட்ஸ் ஆஃப் ஃப்ரீடம் தொடரிலும் வெளியிடப்பட்டது

### இறப்பு

அவர் ஜூலை 29, 1996 அன்று 87 வயதில் புது தில்லியில் இறந்தார்.

# சிரஞ்சீவியுடன் காதல் பாடலில் நயன்தாரா



கடந்த ஜனவரி மாதம் வெங்கடேஷ், மீனாட்சி சவுத்ரி மற்றும் ஐஷ்வர்யா ராஜேஷ் நடிப்பில் வெளியானது சங்கராந்திகி வஸ்துனம் திரைப்படம். இப்படத்தை அனில் ரவிபுடி இயக்கினார்.

இப்படம் வெளியாகி பிளாக்பஸ்டர் திரைப்படமாக அமைந்தது. இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து அனில் ரவிபுடி அடுத்ததாக சிரஞ்சீவி நடிக்கும் 157 திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

படத்திற்கு மன ஷங்கர வரபிரசாத் என தலைப்பு வைத்துள்ளனர். படத்தின் நாயகியாக நயன்தாரா நடிக்கிறார். கேத்ரீன் தெரேசா முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார். படத்தை சாகு கரபதி மற்றும் சுஷ்மிதா கொனிடேலா தயாரிக்கின்றனர்.

இந்த படத்தின் முதல் பாடல் "மீசால பில்லா" அண்மையில் வெளியாகி வைரலானது. இந்நிலையில் 2வது பாடலான "சசிரேகா" தற்போது வெளியாகி உள்ளது.

இப்பாடலை பீம்ஸ் செசிரோலியொ மற்றும் மது பிரியா ஆகியோர் பாடியுள்ளனர். இப்படம் அடுத்தாண்டு பொங்கலுக்கு ரிலீஸ் ஆகும் என்று கூறப்படுகிறது.



நடிகை ஷாலினி பாண்டே படுக்கவர்ச்சியான உடையில் கொடுத்த போஸ். வேற லெவல் ஹாட் போட்டோஷூட்.



நடிகை ராய் லட்சுமி தமிழ் சினிமாவில் நடித்தது மிக குறைவான படங்கள் தான் என்றாலும், அவரது கவர்ச்சி லுக் மற்றும் நடிப்பால் ரசிகர்களை அதிகம் கவர்ந்தவர். அவர் தற்போது வேற லெவல் தாராள கவர்ச்சி உடையில் போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

# ‘கேம் ஆஃப் லோன்ஸ்’ – திரைவிமர்சனம்




ஆன்லைன் சூதாட்டத்திற்கு அடிமையாகிறார் கதையின் நாயகன் நிவாஸ் ஆதித்தன். ஒரு கட்டத்தில் ஆன்லைன் ஆப் மூலம் கடன் வாங்குகிறார். இதனால், எதிர்பாராத விபரீதத்தை சந்திக்கிறார்.

இந்த கடனில் சூழல் என்ன ?, அதில் இருந்து அவர் தப்பித்தாரா? இல்லையா? என்பது படத்தின் மீதிக்கதை..

நடிகர்கள்

கதையின் நாயகன் நிவாஸ் ஆதித்தன், உணர்வுப்பூர்வமாக நடித்துள்ளார். அளவாக நடித்து தனது கதாபாத்திரத்திற்கும், திரைக்கதைக்கும் பலம் சேர்த்திருக்கிறார். மிக முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் அபிநய், நாயகனுக்கு இணையாக கவனம் ஈர்க்கிறார்.

ஆத்விக், எஸ்தர் ஆகியோரின் நடிப்பு படத்திற்கு கூடுதல் பலம்.

இயக்கம்

ஒரு சம்பவத்தின் மூலம் பல உண்மைகளை சொல்ல முயற்சித்திருக்கிறார் இயக்குநர் அபிஷேக் லெஸ்லி. உண்மை சம்பவத்தின் பின்னணியில், அதிர்ச்சிகரமான கற்பனை மூலம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்த முயற்சிக்கிறார். ஆங்காங்கே படத்தின் ஓட்டத்தில் வரும் தொய்வு படத்திற்கு பலவீனம். கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம்.

இசை

படத்தின் பின்னணி இசை பாராட்டக்கூடியது.

ஒளிப்பதிவு

ஒளிப்பதிவாளர் சபரி நேர்த்தியாக காட்சிப்படுத்தியிருக்கிறார்.

ரேட்டிங்- 1.5/5



இந்திய சினிமாவில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவராக ஸ்ரேயா சரண் இருக்கிறார். திருமணத்திற்கு பின் படங்களில் நடிப்பதை குறைத்துக்கொண்டார். இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை ஸ்ரேயா, தனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் எடுத்துக்கொள்ளும் புகைப்படங்களை அவ்வப்போது பதிவு செய்வார். அதே போல் தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களையும் இன்ஸ்டா பக்கத்தில் பதிவிடுவார். இந்த நிலையில், தற்போது இன்ஸ்டாவில் நடிகை ஸ்ரேயா வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் போட்டோஷூட் ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.

# எப்படி இருக்கிறது ‘சாரா’ திரை விமர்சனம்!



கட்டுமான நிறுவனம் ஒன்றில் முதன்மை பொறியாளராக பணியாற்றுகிறார் படத்தின் நாயகி சாக்ஷி அகர்வால் (சாரா). சாராவுக்கும், அங்கு பணியாற்றும் மற்றொரு பொறியாளர் விஜய் விஷ்வாவுக்கும் காதல் மலர்கிறது. காதலுக்கு சாராவின் பெற்றோரும் ஒப்புதல் அளித்தனர். இச்சூழலில் கட்டிடங்களுக்கு கலப்பட மணல் அனுப்பி ஏமாற்றும் வெட்டுக்கிளிக்கும் (மிரட்டல் செல்வா) சாராவுக்கும் பகை ஏற்படுகிறது.

இவர்களுக்கு மத்தியில் கட்டுமான நிறுவனத்தில் வாட்ச்மேனாக இருப்பவர் ரோபோ சங்கர். காசுக்காக எதையும் செய்பவர். அவருடைய நண்பன் யோகிபாபு.

இவர்களின் அனைவரின் கேலி, கிண்டல்களுக்கு உள்ளாகி, மதிக்கப்படாமல் அந்த இடத்தை சுற்றி கொண்டிருக்கும் ஒரு நபர் செல்லக்குட்டி. இவர்கள் அனைவரும் வெட்டுக்கிளிக்கு உதவியாக சாரவைக் கடத்த முயல்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு முன்னால் செல்லக்குட்டி சாராவையும், அவளது காதலரையும் கடத்துகிறார். செல்லக்குட்டி ஏன் சாராவை கடத்தவேண்டும்? கல்யாணம் நடந்ததா? என்பதே மீதிக்கதை.

நடிப்பு : தனக்கான ரோலில் கட்சிதமாக நடித்துள்ளார் சாக்ஷி அகர்வால். விஜய் விஷ்வா, சில காட்சிகளோடு காணாமல் போகிறார். படத்தின் இயக்குநர் செல்லக்குட்டி, வாட்டர்மெலன் ஸ்டார் திவாகரையே மிஞ்சுகிறார் என பார்வையாளர்கள் விமர்சனம் செய்வதற்கு ஏற்றார்போல ஓவர்டோஸ் நடிப்பு. அம்பிகா அனுபவ நடிப்பை வழங்கியுள்ளார். யோகி பாபு, ரோபோ சங்கர், பழைய ஜோக் தங்கதுரை ஆகியோரின் காமெடி பரவாயில்லை. ஆனால் ஆபாச வசனங்களை தவிர்த்திருக்கலாம். இறுதியாக நாடக வடிவில் நகர்கிறது படம்.

இயக்கம் : இயக்குநர் செல்லகுட்டி, தான் சொல்ல நினைத்த கதையில் எப்படியோ பாதியை சொல்லிவிட்டார். பவர் ஸ்டார், நடிப்பு அரக்கன் என அனைத்து கோமாளிகளையும் தூக்கி சாப்பிடும் அளவுக்கு அதிரடியான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கும் செல்லகுட்டி, இயக்குநராக வெற்றி பெறவில்லை என்றாலும், ஒரு நடிகராக நிச்சயம் டிரெண்டாக வாய்ப்புள்ளது.

இசை: இசையமைப்பாளர் கார்த்திக் ராஜா இசையில் பாடல்களும், பின்னணி இசையும் பரவாயில்லை.

ஒளிப்பதிவு : ஒளிப்பதிவாளர் ஜெ.லக்ஷ்மன் குமார் கதைக்கு ஏற்ப காட்சிகளை படமாக்கியுள்ளார். படத்தொகுப்பாளர் ஜான் ஆபிரகாம் இயக்குநரின் கதையை சிதைக்காத வகையில் காட்சிகளை தொகுத்திருக்கிறார்.

# “ஹாப்பி ராஜ்”..! பர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்ட துல்கர் சல்மான்




இசையமைப்பாளரும் நடிகருமான ஜிவி பிரகாஷ்-ன் அடுத்த படத்தை அறிமுக இயக்குனரான மரியா ராஜா இளஞ்செழியன் இயக்குகிறார். அவர் பிரதீப் ரங்கநாதனின் 'லவ் டுடே' படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றியவர்.

இந்தப் படத்தில் ஜிவி பிரகாஷ்-க்கு ஜோடியாக ஸ்ரீ கௌரி பிரியா நடிக்கிறார். மேலும் இந்த படத்தின் மூலம் 11 வருடங்களுக்குப் பிறகு தமிழ் சினிமாவிற்கு அப்பாஸ் கம்பேக் கொடுக்கிறார். இந்த படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார்.

மேலும் இப்படத்தை பியாண்ட் பிக்சர்ஸ் (Beyond Pictures) நிறுவனம் தயாரிக்கிறது.


இந்த படத்தின் டைட்டில் போஸ்டரை படக்குழு இன்று வெளியிட்டது. படத்திற்கு ஹேப்பி ராஜ் என பெயரிடப்பட்டுள்ளது. இப்படம் ஒரு ரொமாண்டிக் காமெடி படமாக இருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

இன்று மாலை 'ஹாப்பி ராஜ்' படத்தின் First Look போஸ்டர் வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. இந்நிலையில், நடிகர் துல்கர் சல்மான் ஹாப்பி ராஜ் படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PADMA MEDIA HOUSE
Best Newspaper Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


WANTED
NEWS COORDINATOR
NEWS
Salary Rs. 25000 Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


MLM Software/Website
Rs. 9999/- only/-
Contact :
+91 9853719337
+91 7436914247
Whatsapp
+91 7684053514
• Binary MLM Software
• Matrix MLM Software
• Single Leg MLM Software
• UniLevel Plan MLM Software
• Re-purchase Plan MLM Software
• Board Plan MLM Software
• Cryptocurrency MLM Software
• Investment Plan MLM Software
• Helping/ Gift Plan MLM Software


அருள்தரும்
தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call:7871617005


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909
+91 96770 88843
info@sevenstarslogistics.com
www.sevenstarslogistics.com






காதலர் தினத்துக்காக
கவிதையொன்றை கேட்டாள்
அழகான இராட்சசி ஒருத்தி
நேரம் தவறி அவள் விடுத்த
குறுந்தகவலை காண
நேரிட்டது கொடுக்காத
கவிதைக்காக கொஞ்சம்
கோபம் தான்
கொண்டிருப்பாள்
அவளிடம் எப்படி சொல்ல?
வருடத்தில் ஒரு நாளா
காதலர் தினம்.
அவளை காதலியாய்
வரமாய் பெற்ற
அவன் காதலனிடம்
சொல்லி விடுங்கள்
தமிழின் இலக்கண,
இலக்கியங்கள்
நிறைந்திருக்கும்
அகராதிகளுக்கெல்லாம்
கவிதைகள் எதற்கு?
இவ்வளவு சொல்லியும்
கவிதை
தான்வேண்டுமென்றால்
ஒரு கண்ணாடி
அவளிடம் கொடுங்கள்
பிரதிபலிக்கும்
நிலவின் கவிதையாய்
அவள் முகம் கொஞ்சம்
வயிற்றெரிச்சலோடு
சொல்கிறேன்
தேவதைகளை வரமாய்
பெற்றவர்களுக்கு
கவிதைகளெல்லாம்
தேவைப் படாது!



**லி .நௌஷாத் கான்**

## வதை

நிகழும் சம்பவங்கள் எதிலும்
ஒட்டுவதாயில்லை மனம்..

நினைவெங்கும்
நிறைந்திருக்கிறாய் நீ..

நகரும் இரவெதிலும்
உறக்கம்
ஒட்டுவதாயில்லை
தினம்..

கனவெங்கும்
கலந்திருக்கிறாய்
நீ..!



**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்

## மலை தேவதை

" பிரம்மாண்ட மலை
பாறை என பிரமிக்க
வைக்க அதன்
உச்சி காண
என்றும் ஆசை .... "

மலையைக் கூட
அசைத்து பார்க்கும்
நெருப்பு காற்று
வேகமான நீரோட்டம்..."

அருவியின் பெரு
முயற்சியால் பாறைகள்
உடைந்து பாகமாகி
அதுவும் சிதைந்து
தூண்கள் போலாகி.... "

நீரோட்டம் வெகுவாய்
தாக்கி கூழாங்கல்
போன்று சுருங்கி
கூழாங்கல்கள் நீரில்...."

உருண்டு புரண்டு
முட்டி மோதி
உடைந்து தேய்ந்து
உராய்ந்து அழுத்தி ...."

பெரு மணலாய்
மீண்டும் போராடி
சிறுமணலாகி
ஆறு எனும்
படுகையில் ...."

தஞ்சம் புகுந்து
நீரை சுத்தம் செய்து
குடிநீராய்
மாற்றித் தருகிறது ..."

மணல் வீடு
காண அழகு
ஈரமணல் நடக்க
சுகம், நீரோட்டம்
காண சுகம் ..."

மணலைத் தோண்ட
ஆற்றிலே நீர்
சுரக்கும் மணல்
பரப்பு பாயை
விரித்தது போல்
அழகு தரும் ..."

மணல் தரும்
மலைகள் தான்
மூலவிதை
மலைகள் தான்
அழகு
தேவதை...."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## மாற்றம்


" சுடுகாட்டு பிணங்களுக்கு
கூட பாதுகாப்பு
இல்லை நிரம்பி
வழியும் நடமாடும்
நடைபிணமாக மனிதக்
கூட்டம் காசுக்கும்
காமத்திற்கும் அலையும்
போறாத வேளையில்...."

--------------------

## வெறுப்பு

" குருவிகளும் அணில்களும்
காக்கை பறவைகளும்
குரங்குகளும் வவ்வால்
ஆந்தைகளும் புறாக்களும்
நெடுந்தூரம் பயணிக்கிறது
மரத்தை தேடி நிழலைத் தேடி
சுகத்தை தேடி தங்கும் இடம்
தேடி சுயநல மனிதர்கள்
வெறுப்பை சுமந்தபடியே ...."

**ஆர் .சீதாராமன்** சீர்காழி



## தாயும் சேயும்

அன்னை வதனத்தில்
சந்தோஷ வெளிச்சம்,
பிள்ளையின் உள்ளத்தில்
மகிழ்ச்சி. ஈன்ற மகவினை
பார்த்தவுடன் தாய் உலகமே
தன் கையில் என மகிழ்ந்தாள்
பிஞ்சு விரல்களை கையில்
பிடித்து நெஞ்சத்தில்
தழுவினாள் அம்மா
பாசத்திற்கு ஈடு ஏது
மழலையின் நேசத்திற்கும்
ஈடு இல்லையே
அம்மா அழைத்தாலே
அனைத்தும் இன்பமே
சேய்தாய் இணையும் போது
இன்பமே தாய்க்கு சேயே
பிரபஞ்சம்
சேய்க்கு
தாயே
பிரபஞ்சம்
என்பதே
நிதர்சனமான
உண்மை.



**உஷா முத்துராமன்**

## கேளிகை விடுதிகள்..

நாளிதழ் படித்தேன்..
தொலைக்காட்சி பார்த்தேன்..
கேளிகை விடுதியில் தீ
பிடித்ததாம்..! காலிகள்
நடனம் ஆடியபடியே..
போதையில் தீயில்
பொசுங்கினராம்.!

மாலையில் இரவில்.. மங்கிய
ஒளியில்.. இரவினில் ஆட்டம்
நடக்கிறது..! நாகரீகம் என்ற
பெயரில்.. இது நகரங்களில்
தொடர்ந்து நடக்கிறதே.!

உழைக்கிற கூலியை
உடம்பைக் கெடுக்க குடித்தே
வீதியில் கிடக்கும் ஏழையர்
ஒருபுறத்தே..

இருக்கிற பணத்தை..
பதுக்கிய பணத்தை..
கேளிகை விடுதியில்
இறைக்கும் மாந்தர்கள்
ஒருபுறத்தே..

கோவா பெங்களூர்
சென்னை.. மும்பாய்.. எங்கும்
கூத்துகள் நடக்கிறதே..

இருப்பவன் குடிக்க..
கேளிகை நடத்த..
இச்சமுதாயம்
அனுமதிக்கிறதே..!

கேளிகை ஆட்டம் மது மாது
சூது.. யாவும் இரவினில்
நடக்கிறதே..

இதனைபதாங்க இயலா
பூமி.. இதோ பார் நெருப்பாய்
வெடிக்கிறதே.!

**வே.கல்யாண்குமார்**

## வாழ்ந்துக்காட்டு

உழைப்பும் ஒரு
ஆயுதம்தான்...
வாழ்வில் வெற்றி பெற...!

கல்வியும் ஒரு
ஆயுதம்தான்....
சமுகத்தை சீர் திருத்த...!

பொன்னும்,பொருளும், ஒரு
ஆயுதம்தான்..
பகையை வென்றுவிட....!

பெண்ணும் ஒரு
ஆயுதம்தான்....
வாழ்வை மாற்றிவிட....!

அறிவியலும், அரசியலும்,
ஒரு ஆயுதம்தான்...
நாட்டை நல்வழி நடத்திட...!

மொத்தத்தில் புரிதலும்,
செயலும் ஒரு
ஆயுதம்தான்...
நீ நல்லா
வாழ்ந்திட...!!



**பொன். கருணா**
நவி மும்பை

## பாவம், பாராட்டிவிடுங்கள்!

எழுத்தாளர் ஏகாம்பரம்
ஏகத்துக்கும் குதித்தார்
அவரது படைப்புகள்
அனைத்தையும் பாராட்டும்
அவரது வாசகரொருவர்
ஒரு கதையை கொஞ்சம்
குறைவாக சொல்லிவிட்டாராம்
பாராட்டை மட்டுமே விரும்பும்
இந்த பொய் உலகில்
பாவம் எழுத்தாளனும்
ஒரு
மனிதன்தானே
அதனால்
படித்தால்
அது
எப்படியிருந்தாலும்
பாராட்டி
விடுங்கள்!



**சின்னஞ்சிறுகோபு,**
சென்னை.



பட்டாடை உடுத்தி
பச்சைக்கிளி போல்
இச்சையோடு காத்திருக்கும்
இளம்பெண்ணே!
உன்னைக் கண்ணாற
கண்ணுற்று கைத்தளம்
பற்ற வந்திடுவான் உன்
மயக்கத்தைப் போக்கும்
நீ தேர்ந்தெடுத்துக்
காத்திருக்கும் மணாளன்!
கெட்டிமேளம் கொட்டி,
பெற்றவரும், உற்றார்,
உறவினரும், ஊராரும்
வாழ்த்தி
ஆசிர்வதிக்க
நாள் கூடிய
விரைவில்
வந்து சேரும் !



**உமா வெங்கடேசன்**

பள்ளங்களை
நிரப்பிய
மழை நீருக்கு
உன்
கன்னக்குழி
தெரியவில்லை
போலும் !



**ரிஷபன்**

1. கண்ணீர் விற்பனைக்கு
என்று வந்தால் ஏழைகள் தான்
முதலாளிகள்
2. மகன் குடை பிடித்தும்
நனைந்து கொண்டே
இருந்தாள் அம்மா
அவனது அன்பில்
3. ஆண்களின் பாதி
வாழ்க்கை சம்பாதிப்பதிலும்
பெண்களின் பாதி வாழ்க்கை
சமைப்பதிலும் கழிந்து
விடுகிறது
4. பள்ளியில்
சேர்வதற்கு
ஜாதி சான்றிதழ்
கட்டாயம்
சேர்த்த பின்பு முதல்
நாள் பாடம் ஜாதிகள்
இல்லையடி பாப்பா
5. எருமையிடமிருந்து
பொறுமையை
கற்றுக் கொள்ளுங்கள்
ஆனால் அந்த எருமையே
காறி துப்பும் அளவுக்கு
பொறுமையாக இருக்கக்
கூடாது
6. விதையில் தொடங்கி
விறகில் முடிகிறது
மரத்தின் வாழ்க்கை
கருவில் தொடங்கி
கல்லறையில்
முடிகிறது மனிதன்
வாழ்க்கை



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## கனவுலகம்

இந்த உலகமே
குழந்தைகளுக்கு சிறுவர்
பூங்கா நந்தவனப்
பூக்கள் படபடக்கும்
பட்டாம்பூச்சிகள்
ஆடிவரும் யானை ஓடி
வரும் ரயில் மான்களில்
கூட்டம் பசுங்கிளிகள்
சப்தம் பூனைக்குட்டி
இதைத் தவிர என்ன
இருந்துவிடப் போகிறது
இந்தக் குழந்தைகளுலகில்
என என்னைப்போல்
நினைக்கிறதோ இந்த
நிலா குழந்தைகளில்லா
நேரத்தில்....



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிக்கோட்டை



## பேராவல்....

சந்திக்க நெடுநேரம்...
காத்திருப்பு..

அதீத விருப்பமும்...

சூழல் தான் நிலைமாற்றி
விடுகிறது....

வருத்தத்துடன் வலம்
வருகிறாய்... அன்றைய
தினம்...

தவிப்பு களுடன்
தொடர்கிறது...பரபர...
பணிச் சூழல்...

முகம் கண்டறிதல்
முடிவுக்கு வரும்...
கண்களின்... தேடல்....

தவறவிட்ட
சந்தர்ப்பங்களில்...
தேக்கி
வைத்துக்
கொள்கின்றன...
நேற்றைய
உன்னை...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## ஆத்திரம்

சினம் புயலாய் கிளம்பும்
தீப் பிழம்பைக் கக்கும்
அழிவின் ஆதார நாதம்
எனவே சீற்றம் தவிர்த்தனர்

புதிய கோணத்தில் யோசி..

கோபம் போதிய அளவில்
தக்க சமயம் கையாண்டால்
கோப மூட்டிய ஆசாமியின்

நடத்தையில் மாற்றம் நேரும்
குற்றங்குறை நிவர்த்தி
ஆகும்

ஆதலின்
கோபங்
கொள்ளுவீர்
எதிராளியின்
நடத்தை
மாறும்



**பி. பழனி,**
சென்னை



## எக்குடிப் பிறப்பினும்!

அறுசீர் மண்டிலம்.

எந்தக் குடியில்
பிறந்தாலும் யாவராக
இருந்தாலும்
அந்தக்குலத்தில்
கற்றாரை அழகாய் வருக
எனல்வேண்டும்!
விந்தைக் கல்வி
வீறுடைத்தே வீரம் ஒழுக்கம்
சீருடைத்தே!
சிந்தைக்கினிய
கல்வியன்றோ
சீரும் சிறப்பும் நல்கிடுமே!

குடியைப் பார்க்கக்கூடாதே
குலத்தைப்
பார்க்கக்கூடாதே!
துடிப்பாய்க் கல்வி
கற்றோரை தேர்ந்தே காண
வேண்டுமடா!
இடித்தே உரைக்கும்
கல்வியன்றோ ஈடே இல்லா
உடைமையன்றோ!
அடித்து வளர்த்துக்
கல்விதனை
அழகாய்
அளித்தல்
நலமன்றோ!



**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை.

# நூல் விமர்சனம்:

பட்டறிவுக் கொடியில் மொட்டுவிட்ட மலர்கள்!
கவித்திலகம் வெற்றிப்பேரொளி
தலைவர், தமிழ்த்தாய் இலக்கியப் பேரவை,
தஞ்சாவூர்

ஹரணி - எனக்குள் எப்போதும் மகிழ்வை ஊற்றெடுக்க வைக்கும் பெயர். க.அன்பழகன் என்ற இயற்பெயருடையவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக பணிநிறைவு கண்டவர். ஆனாலும் பேராசிரியத்தனத்தைத் தன் முகம், செயல், குரல்மொழி உடல்மொழி எதிலும் வெளிப்படுத்தாத மென்மையானவர்.; மேன்மையானவர். அன்பையும் அறத்தையும் மட்டுமே தன் வாழ்வியலாக்கிக் கொண்டவர். அந்த அன்புணர்வும், அறவியலும் இவருடைய படைப்புகள் அனைத்திலும் பரவியும் விரவியும் இருக்கும். ஆனால் அவை பிரச்சாரமாக துருத்திக் கொண்டிராமல், படைப்பினுள் கலந்து வெகுநுட்பமாக நமக்குள் கடத்தப்படும். அதேபோல வாய்மையும் நேர்மையும் என்றும் எங்கும் வெல்லும் என்ற கருத்தியலைத் தன் நெஞ்சமெல்லாம் நிரப்பி வைத்திருப்பவர் தோழர் ஹரணி. அவை வெல்லாத நேரங்கள் இரவுகளைப் போன்றவை. இரவு விடிந்துதான் ஆகவேண்டும் என்பதே இவரின் ஆழ்மனத்தின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

புதினம், சிறுகதை, இலக்கியக் கட்டுரைகள், ஆன்மிகப் படைப்புகள், சிறுவர் இலக்கியங்கள், வெண்பா முதலிய மரபு வகைகள், புதுக்கவிதை, ஹைக்கூ, தாமே உருவாக்கிய புதிய.................. என்ற தன் படைப்புப் பயணத்தின் தொடர்ச்சியாக புதிதாக அறிமுகமாகியுள்ள தன்முனைக் கவிதை வடிவில் "மலரும் மலர்கள் மனிதர்களுக்கல்ல....!" தொகுப்புடன் வந்திருக்கிறார் கவிஞர் ஹரணி.

பேராசிரியர் முனைவர் கோபி என்பவர் தெலுங்கில் உருவாக்கிய புதிய குறுங்கவிதை வடிவம் "நாநீலு" என்பது. நான், நீ, நம் கருத்து என்ற பொருண்மையில் உண்டாக்கப்பட்ட நாநீலு தெலுங்கு கவிதைகள் சிலவற்றை, ஹைதராபாத்தில் வசிக்கும் கவிஞர் சாந்தாதத் அவர்கள், கவிஞர் வதிலை பிரபா அவர்களை ஆசிரியராகக் கொண்டு, வத்தலக்குண்டிலிருந்து வெளிவரும் "மகாகவி" என்ற இதழில் வெளியிட்டார். அவற்றைப் படித்த கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்




என்பவர் நாநீலுவின் பால் ஈர்க்கப்பட்டு, தமிழில் சில கவிதைகளை எழுதினார். கடுமையான இலக்கண வரம்புகள் அற்ற, மிக எளிய நான்கு குறுஅடிகளால் ஆன இக்கவிதைகளின் தாக்கத்தில் மேலும் பலரும் எழுதத் தொடங்கினர். இந்த நிலையில் நாநீலு குறுங்கவிதைகளுக்கு தமிழில் தன்முனைக்கவிதைகள் என்ற பெயரைச் சூட்டினார் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம். ஆனால் இன்று நாநீலுவிலிருந்து பெரிதும் விலகியே தன்முனைக் கவிதைகள் எழுதப்பட்டு வருகின்றன. அந்த முறையைப் பின்பற்றி கவிஞர் ஹரணி தன் பட்டறிவுப்பட்டறையின் தெறிப்புகளை "மலரும் மலர்கள் மனிதருக்கல்ல!" நூலாக்கியுள்ளார்.

இந்தத் தொகுப்பு நெடுக கவிஞர் ஹரணி பருந்துப் பார்வையில் வாழ்க்கையைக் கவிதைக் காட்சிகளாகக் காட்டியுள்ளார். கூடவே தேவையான இடங்களில் தோளில் கையைப் போட்டுக்கொண்டு நடப்பதுபோல் நெருக்கக் காட்சிகளையும் தந்துள்ளார். இந்தத் தொகுப்பின் அணிந்துரையில் முகங்காட்ட கவிதை ஒவ்வொன்றும் முந்தி வருகின்றது. எடுத்துக்காட்டுகளை வடிகட்ட நான் மிகவுமே சிரமப்பட்டேன். அப்படி எடுத்துக்காட்ட அனைத்துக் கவிதைகளும் தகுதி பெற்றுள்ளன. இந்தச் சிறப்பு எல்லாத் தொகுப்புகளுக்கும் அமைந்துவிடுவதில்லை!

பிரமாண்டமான சூரியனைப் புல்லின் நுனியில் அமர்ந்திருக்கும் சின்னஞ்சிறு பனித்துளி பிரதிபலிப்பது போல மாபெரும் மாந்த வாழ்வை, மகத்தான இயற்கையை, பிரபஞ்சப் பெருவெளி ரகசியங்களைக் கொஞ்சம் சொற்களுக்குள் சுருக்கித் தருவதுதான் கவிதை. சொற்களை அடுக்கிவைத்துவிட்டுச் செல்பவர் அல்ல, அந்தச் சொல்லடுக்குக்கு உயிர்தரும் சூத்திரம் கற்றவரே கவிஞர். ஹரணி கவிஞர். நல்ல கவிஞர். அதனால் இத்தொகுப்பு கவிதைகளால் நிரம்பியுள்ளது.

கவிஞர் ஹரணி அவர்களின் பட்டறிவு இத்தொகுப்பில் பாட்டருவியாய்க் கொட்டியுள்ளது. "பழையனக் கழிதலல்லப் புதுப்பித்தல்/ புதியனப் புகுதலல்ல உருவாக்கல்/ புதுப்பித்தலும் உருவாக்கலும் என்றும்/ நிறைவும் நிம்மதியும் தரும். " - என்று வாழ்வில் நிறைவும் நிம்மதியும் புதுப்பித்தலிலும், உருவாக்கலிலும் தாம் உள்ளன என்ற உண்மையை உரத்துச் சொல்கிறார் ஹரணி. வாழ்வில் எதுவரினும் ஏற்றுக்கொள்ளும் துணிவு இருந்துவிட்டால் போதும் என்கிறார் கவிஞர். "எந்தத் துன்பத்தையும்/போக்கு என்று/ வேண்டுதல்கள் வேண்டாம்/ எதுவரினும் ஏற்றுக்கொள்ளும்/ துணிவே வேண்டுதல்." துணிவே வேண்டல் என்ற இந்தப் புரிதல் இருந்துவிட்டால் போதும் வாழ்க்கை என்பது புன்னகைப் பூந்தோட்டமாகிவிடும்.

"பயனற்றது என்று எதுவுமில்லை/ மரத்தில் உதிர்ந்து மண்ணேகும்/ சருகும் தருகிறது சிறுநிழல்/ எலும்புகளுக்கு." இந்தக் கவிதையில் சருகின் சிறுநிழலை எடுத்துக்கொண்டு கவிஞர் தீட்டிக் காட்டும் ஓவியம் வாழ்வின் நேர்மறைக் காவியம் ஆகிவிடுகிறது. இன்னொரு கவிதை "பிறப்பு வாழ்வு இறப்பு யாவும் அளந்தபடிதான்" என்று சொல்லி, "எத்தனைச் சடங்கும் அளந்து வெட்டிய ஆறடிக்குள்" புதைந்து விடும் இரகசியம் பேசுகிறது. இது வெற்றுத் தத்துவம் அன்று; கற்றுத் தெளிய வேண்டிய ஞானம். ஒரு கவிதை தனக்குள் ஓராயிரம் பொருண்மைகளைப் பொத்தி வைத்திருக்கக் கூடும் என உணர்த்தும் ஒரு கவிதை "குருவியின் அளவான அலகிற்குள் சின்ன இரைதான் சிக்குகிறது பெரிய பருந்தின் கால்களின் வலிமையை வரையாடு அறியும்!" மேலோட்டமாகப் பார்க்கும் போது குருவியின் அலகும், பருந்தின் கால்களும் தான் நம் கண்ணுக்கு, கருத்துக்குப் புலப்படும். ஆனால் உள்ளே புகுந்து பார்த்தால் இந்தக் கவிதைக்குள் அரசியல், ஆன்மிகம், காமம், தேடல், முயற்சி என வாழ்வியல் கூறுகள் விரிந்து கொண்டே போய் , ஒவ்வொன்றுடனும் தன்னைப் பொருத்திக் கொள்ளும் விந்தையைக் காணலாம்.






## தியானம்

ஆர்ப்பரிக்கும் மனதை
ஆழ்கடல் அமைதியாக்க
உணர்ந்தும், புரிந்தும்
தெரிந்தும், தெரியாத
வினாக்களுக்கு விடை
தேடும் முயற்சியே தியானம்

கண்மூடி அமர்ந்து
அமைதியாக...

தியானம் செய்,
மனதை வசப்படுத்து,
ஆன்மாவோடு பேசு,
உள்ளக் கழிவுகளைக் களை,
கவலைக் கொள்ளாதே,
ஆற்றலோடு உறுதி கொள்...

சொல்லுதல் யார்க்கும் எளிது.

ஆனால்... தியானிக்க
அமரும் நொடியில்... மனம்
கடிவாளமற்ற
குதிரையாக அலைந்து ...

ஏமாற்றங்கள், ஏற்றங்கள்
நடந்த் நிகழ்வுகள்,
இனிமை, இன்பம்
துன்பம், துரோகம் என
நினைவுகளின் குவியலாகப்
பொங்கும் அலையில்...

பழகிய, பழக்கமற்ற முகங்கள்
படித்த கவிதை வரிகள்
பார்த்து, ரசித்த இடங்கள்
வானம், நிலவு, கடல்,
அருவி, மலை, மழையென
எண்ணத்தில் பட்டம் கட்டி
காற்றாடியான மனதை
இழுத்து பிடிப்பதே தியானம்.

மனம் பறந்தாலும்
மெதுவாய் அழைத்து
அமைதிக்கு
திரும்பினால்
தியானம்
அனைவருக்கும்
சாத்தியமே.



**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## செய்ந்நன்றி

துன்பமேநீக்கினார்
தொல்லையும் தீர்ந்தது

இன்பமே உற்றது
ஏற்றிடும்
தன்மையில்

பொன்னையும்
விஞ்சிடும்
போற்றிடும்
நட்பையும்

மறவா நினைவில்
மனதில் நினைப்பர்


இறவா அறிஞர்
இருந்தே உறவாய்

உதவிய உள்ளத்தின்
உண்மையை மென்மையை

எழுவகைப்பிறப்பில்
எண்ணுதல் வேண்டுமே



**கலியுகன்கோபி** சென்னை



துடித்து தான் போனேன்
கொத்தி விடும்
உன் தேள் கண்களால்!
---------------------
மன அமைதிக்கு
நீ கடவுளை வேண்டுகிறாய்
நான் உன்னை
வேண்டுகிறேன்!
---------------------
என்கிறாய்
எனக்கு இப்போதைக்கு
ஒரு Kiss போதுமென்றேன்!
---------------------
உன் முத்தங்களை மட்டும்
நான் போதுமென்றே
சொல்லியதில்லை !
---------------------
உனக்கு தெரியாமலே
அந்த மழையை போல
உன்னை முத்தமிட்டு
செல்ல வேண்டும்!
---------------------
நீ அழகி தான் ஏனடி
கண்ணாடி பார்த்து வேறு
உறுதி செய்து கொள்கிறாய்?!
---------------------
திருந்துவதற்கு மனமில்லை
நீ திரும்பியே நில் இன்னும்
கொஞ்சம் காதலித்து
கொள்கிறேன் கனவில்!
---------------------
நீயிருக்கும் வரை என் காதல்
கவிதைகளுக்கு அழிவேது?!
---------------------
உன் கால் கொலுசொலிகளை
காது கொடுத்து மட்டுமல்ல
காதலோடு முத்தமிட்டும்
கேட்க வேண்டும்!
---------------------
நீயிருந்தால் இருள் இரவும்
இனிக்குமடி நீருக்குள்ளும்
இது இன்னும் வேண்டுமென
தோணுமடி நெருப்பாய்
அனத்தினாலும் நீள
வேண்டுமென ஏங்குமடி!
---------------------
அவனை எழுப்பாதீர்கள்
காதலை தொலைத்தவன்
கனவு காண்கிறான்!
---------------------
இப்படியே விட்டு விடுங்கள்
அந்தகனவாவது
கலைந்து
போகாமல்
காதலோடு
இருக்கட்டும்!



**லி.நௌஷாத் கான்**

## என்னவைத்தோம்

முன்னோர்கள் தூய்மையாக வைத்திருந்த
மூச்சிழுக்கும் காற்றினிலே நஞ்சை சேர்த்தோம்
முன்நின்று காற்றிலுள்ள அசுத்தம் நீக்கும்
முதலுதவி மரங்களினை வெட்டிச்சாய்த்தோம்
பொன்கதிரை வடிகட்டி ஒளியனுப்பும்
பொற்கவச ஓசோனை ஓட்டை செய்தோம்
என்னவைத்தோம் எச்சத்தார்க்குத் தன்ன லத்தால்
எல்லாமும் கலப்படத்தால் கெடுத்து வைத்தோம் !

ஆயிரமாம் ஆண்டுகளாய் சேர்த்து வைத்த
அடிநீரைக் குழாய்வழியே காலி செய்தோம்
பாய்மரம்போய் கடல்நீரில் எண்ணெய் குண்டால்
பரிதவிக்க மீன்களினைச் சாகடித்தோம்
தாய்மண்ணில் உரங்களினைப் போட்டுப்போட்டுத்
தரும்விளைச்சல் எனஉறிஞ்சி சக்கை செய்தோம்
சேய்களுக்கே என்னவைத்தோம் தன்னலத்தால்
செழித்திருந்த இயற்கையினைக் கெடுத்து வைத்தோம் !

அரணாக நமைக்காத்த காட்டைவெற்பை
அழித்துடைத்தே மழைவளத்தை மலடு செய்தோம்
வரமாகப் பெற்றவயல் தோப்பை வீடாய்
வடிவமைத்து விளைச்சலுக்கு முடிவு செய்தோம்
கரமாக உதவிவந்த ஆற்று நீரில்
கழிவுசேர்த்து மணலெடுத்து
முடமாய்ச்செய்தோம் சிரமிழந்த உடலாக
எச்சத்தார்க்கே சீர்இயற்கை தனைமாய்த்தே
இருளை வைத்தோம் !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## நெல்லிக்கனி.!

காயும் கனியாகும்..
உன் பெயரை சொல்லும்..!
நெல்லிக்கனி என்றால்
நெஞ்சில் தமிழ் துள்ளும்..

மாங்கனிகள்..
தேன்கனிகள்.. மாதுளம்
கனிகள்.. மக்கள்
மனம் விளைந்து வந்த
வாழைக்கனிகள்..
வேரிலேப் பழுத்து நிற்கும்
பலாக்கனிகள்
விரும்பி உண்பார் நம்
நாட்டில்.. அதிலே உயிர்
வளர்க்கும் கனி இதுவே
நெல்லிக்கனி.!


அதியன் அவ்வைக்கு
அன்போடு அளித்தக்கனி..
புதிய தலைமுறைகள்
அறிந்திடுமோ.. புகழ்
மருந்து நெல்லிக்கனி.!

சித்த மருத்துவத்தில்.. சீர்
மிகுந்த இலக்கியத்தில்..
இத்தரையில் தமிழர்
வாழ்வின் இதயக்கனி..
இந்தக்கனி.. அந்தக்கனி..
அரும் நெல்லிக்கனி.!
ஆகும்.

செரிமானம் ஆவதற்கும்
சீராக வளர்வதற்கும்.. நரம்பு
தளர்ச்சியின்றி நன்றாக
வாழ்வதற்கும் மூச்சுக்
காற்றாக.. முத்தமிழர்
வாழ்வாக.. பேச்சுத் தமிழ்ச்
சொல்லும் உள்ளங்கை
நெல்லிக்கனி.! இதுவாகும்
புளிப்புச் சுவையோடு..
புன்சிரிப்பு இனிப்போடு
கனிச்சுவையில் மனம் கவர்ந்த
காலத்தாய்த்
தந்தக்கனி..
கனிகளிலே
சிறந்தகனி..
மருத்துவக்
கனி இதுவே..
மகத்தான
நெல்லிக்கனி.!




**வே.கல்யாண் குமார்.**



நகர்ந்து நகர்ந்து
செல்கிறது கனவு
துரத்திச் செல்கிறது ஆசை.
விடை தெரியா
விடுகதையென
திகைத்து நிற்கிறது
வாழ்க்கை.
மௌனச்
சிரிப்புடன்
கடக்கிறது
காலம்.



**ஜி ஏ பிரபா**
கோவை



## தமிழைக் கல்

நல் கவிதை எழுதத் தான்
எழும்பினேன்!
சொல் ஏதும் சிக்கவில்லை;
என்னகத்தில்.
சொல் சிக்கினால், பொருள்
பொருந்தவில்லை.
அருக்கனில் சோதியையும்,
அகத்தில் சுவையையும்,
விண்ணிலவில்
தண்மையையும்,
எரிதீயில் வெம்மையையும்,
வைத்த இறை,
என் மதியில்
சொல் அடுக்குகளை செருகிட
மறந்தானோ!
மனம் வெதும்பி அமர;
மன்றீசன் சொல்லிட்டான்;
'தமிழைக் கற்பாயாக!
தானால் கவிதை
எழும்ப
காண்பாய்!
கற்றுத்
தெளிவாய்
வருத்தம் விடு.'



**சசிகலா விஸ்வநாதன்**



## மகாகவி பாரதி கண்ட விடுதலை !

அடையும் முன்பே அடைந்து விட்டோம் என்று !
அன்றே ஆனந்த கூத்தாடியவன் பாரதி !

இன்று இங்கு இருந்திருந்தால் பாரதி !
ஏன் ? பெற்றோம் என்று நொந்து இருப்பான் !

வெள்ளையனே வெளியேறு என்றான் அவன் !
வெள்ளையனே கொளையடிக்க வருக ! என்றானது !

பன்னாட்டு நிறுவனங்கள் வேண்டாம் என்றான் அன்று !
பன்னாட்டு நிறுவனங்களின் பகல் கொள்ளைகள் இன்று !

குடிக்கும் தண்ணீர் பொதுவாக இருந்தது அன்று !
குடிக்கும் தண்ணீர் விலைக்கு விற்கின்றனர் இன்று !

மலைகளை ரசித்துப் பாடல் பாடினான் அன்று !
மலைகளை வெட்டி பல நாடுகள் கடத்தினர் இன்று !

சிட்டுக் குருவிகளுக்கு அரிசியிட்டு மகிழ்ந்தான் அன்று !
சிட்டுக் குருவிகளைக் கூண்டோடு ஒழித்தனர் இன்று !

ஆறுகளையும் மணல்களையும் பாடினான் அன்று !
ஆறுகளையும் மணல்களையும் காணவில்லை இன்று !

பெண் விடுதலை வேண்டும் உரக்கப் பாடினாய் அன்று !
பெண் உயிர் எடுத்து விடுதலை தருகின்றனர் இன்று !

அடிமை விலங்கை அடித்து நொறுக்கினான் அன்று !
அடிமை விலங்கை வாங்கிப் பூட்டினர் இன்று !

காக்கை குருவி எங்கள் சாதி என்றான் அன்று !
காக்கை போல தமிழரைச் சுடுகிறான் இன்று !

சேதுவை மேடாக்கி பாலம் கட்டப் பாடினான் அன்று !
சேது கடல் திட்டத்தையே கை கழுவினர் இன்று !

தமிழ்மொழி இனிய மொழி என்றான் அன்று !
தமிழ்க்கொலை நடக்கிறது ஊடகத்தில் இன்று

காணி நிலம் வேண்டும் என்று பாடினான் அன்று !
காணி நிலம் எங்கும் கெயில் குழாய் பதிக்கின்றனர் இன்று !
.
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை என்றான் அன்று !
உழவும் தொழிலும் சிதைந்து வழக்கொழிந்தது இன்று !

பஞ்சம் பட்டினி ஒழிய வேண்டும் என்றான் அன்று !
பஞ்சம் பட்டினி தலை விரித்து ஆடுகின்றது இன்று !

அச்சமில்லை அச்சமில்லை என்று பாடினான் அன்று !
அச்சமின்றி யாருமில்லை என்றானது இன்று !

புதிய ஆத்திச்சூடி பாடி புத்துணர்வு தந்தான் அன்று !
புதிய தலைமுறை ஆத்திச்சூடி அறியவில்லை இன்று !

திருவள்ளுவரை உலகிற்கு தந்த தமிழ்நாடு என்றான் அன்று !
திருக்குறளை தேசிய நூலாக்க மறுக்கின்றனர் இன்று !

கவிதை எழுதியபடி கவிதையாகவே வாழ்ந்தான் அன்று !
கவிதை எழுதுவோர் எழுதியபடி வாழவில்லை இன்று !

அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டினாய் அன்று !
அன்பு என்றால் என்னவென்றுதெரியவில்லை இன்று !

மகாகவி பாரதி கண்ட விடுதலை இது இல்லை !
மகாகவி பாரதி இருந்தால் நொந்து இருப்பான் உண்மை !


**கவிஞர் இரா .இரவி !**

## வார்த்தையில் அடங்காக் காதல்

என்மீது அன்பும் அந்தத்
தூய நேசமும் இருக்கிறது
என்கிறாய், இருந்தும்,
உன் இதழ்கள் பேசும்
வார்த்தைகளில் ஏன் வசந்தம்
இல்லை?

உன் கண்ணில் ஈரமில்லை;
ஒரு துளி கருணையும்
இல்லையேல்,
எப்படிக் கைக்கொள்வது
இந்தக் காதலை?

நீ நடந்து போகும்
பாதையெல்லாம்,என் மெல்லிய
நினைவுகள் உன்னைப்
பின்தொடரவில்லையா?
என் பெயரை உன் காதுக்குள்
காற்று இரகசியமாய்ச்
சொல்லவில்லையா?
வழியில் நிற்கும் காற்றினைக்
கலைத்துவிட முடியும்,
ஆனால், நீ மூடிக்கொண்ட
மனித மனத்தை எதனைக்
கொண்டு கலைப்பது?
ஏன் இப்படி மாறிப்போனாய்,
பேசும்போதெல்லாம்
ஒரு புன்னகையால் என்
உறவுக்கு முற்றுப்புள்ளி



வைக்கிறாய்?
என் கேள்விகளுக்கு
விடைகளே இல்லை;
விடை இல்லாத கேள்விகளை
நெஞ்சில் வைத்துக்கொண்டு,
நான் விடியலைத் தேடி என்ன
செய்வது?
இதோ, என் ஆத்மாவின்
தவிப்பை மீண்டும் மீண்டும்,
உன் இதயத்தை நோக்கியே
அனுப்பி வைக்கிறேன்...
பதில் அளிப்பாயானாலும்
அளிக்காவிடினும்
என் கேள்விகள், என்னைப்
போலவே உன் மறுமொழி
தேடி, உன்னைத் தேடிக்
கொண்டே இருக்கும்
முடிந்தால் ஒரு பதில்
சொல்லிவிடு, அன்பே!
இல்லையேல், உன் மௌனமே
என் வார்த்தையில் அடங்கா
காதலின் அர்த்தமிகு சொல்.

**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

## ஆயுள்

உடல் கூட்டில்
உயிர்க்குருவி தங்கியிருக்க
இயற்கை விதித்த
காலக்கெடு!

எளிய வினாக்களும்
கடின வினாக்களும்
கலந்திருக்கும் வாழ்க்கை
பரீட்சைக்கு
வழங்கப்பட்டுள்ள
வித்தியாசமான நேரங்கள்!

கடந்து செல்லும்
ஒவ்வொரு அகவையும்
மைல்கற்களாய் நிற்கின்றன!
எவ்வளவு தூரம்
பயணிக்கப்போகிறோம்
என்பது மர்மங்கள் சூழ்ந்த
இரகசியங்கள்!

இயந்திரங்களின்
ஆயுளுக்கும் கூட
உத்திரவாதம் உண்டு
மனித ஆயுளோ
சிலருக்கு நீர்க்குமிழியாய்ச்
சிலருக்கு வானவில்லாய்ச்
சிலருக்கு அனுமன் வாலாய்ச்
சிலருக்கு பாஞ்சாலியின்
துகிலாய் நிலைமாறுகின்றது!

இங்கே மூப்பாலும்
பிணியாலும் விபத்தாலும்
மறுபரிசீலனை செய்யப்படும்
தலைவிதிகளை
மதியால் வெல்லும் முயற்சி
சமயத்தில்
தோல்வியைத்தழுவுகின்றன!

பஞ்ச
பூதங்களின்
மாசுகளை
நீக்கினால்
ஆரோக்கியம்



அமிழ்தாய்ச்சுரக்கும்
ஆயுளும் நிலத்தடி நீராய்
ஊற்றெடுக்கும்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்



## பரிமளிப்பு

உன் நினைவு மனதில்
வரும்போது மனதுக்குள் ஒரு
மகிழ்ச்சி அதனால் எனக்கு
கிடைத்த ஒரு பரிமளிப்பு
மௌனத்தை உடைத்து
அன்புடன் பேசும் போது
கிடைப்பது பரிமளிப்பு
உள்ளம் திறந்து கள்ளம்
இல்லாமல் உன் வார்த்தைகள்
வந்தால் அதுவும் பரிமளிப்பே
காற்றில் கலக்கும் வாசனைப்
போல் நீ எனக்குள் கலந்தால்
அதுவும் பரிமளிப்பேன்
உன் பெயரை சொன்னால்
அதரங்களை இனிப்பதால்
எனக்கு
கிடைத்த
பரிமளிப்பு
அதுவே...




**உஷா முத்துராமன்**

# வாசகர் கடிதம்

நெல்லை தி.வள்ளி எழுதிய " மரகத மாற்றம்" ஜெய்சங்கர் - ஜமுனா நடித்த பழைய குழந்தையும் தெய்வமும் படத்தை நினைவூட்டியது. ஒரே ஒரு வித்தியாசம் அங்கே குட்டி பத்மினி இரட்டை வேடம். இங்கே ஒரே பையன் கிருஷ்ணா.



-ஸ்ரீகாந்த்
திருச்சி










மதுரையை தொழில்
நகரமாக ஆக்குவதே
ஆசை#முதலீட்டாளர்கள்
மாநாட்டில் முதல்வர்
ஸ்டாலின்
அடுத்த இலக்கு சுங்க வரி
சீர் திருத்தம்#அமைச்சர்
நிர்மலா சீதாராமன்
டிசம்பர் 10 தேதிக்குள்
விமான சேவைகள்
சீராகும்#இண்டிகோ
நிறுவனம்
திமுக ஆட்சிக்கு
வந்ததிலிருந்து
161 கோவில்களை
இடித்திருக்கிறது
#அண்ணாமலை
மாதத்திற்கு ஒரு
முறையாவது விரதமிருந்து
பழச்சாறு பருகினால்
நச்சுக்கள் நீங்கும்
அச்சுறுத்தும்
மோசடிகள்#எச்சரிக்கையாக
இல்லையெனில் உங்கள்
பணம்
பறிபோகும்
காலி மது பாட்டில்களை
டாஸ்மாக் பணியாளர்கள்
கண்டிப்பாக திரும்பிப் பெற
வேண்டும்#அமைச்சர் முத்து
சாமி
சென்னை: ஏர் பியூர்பையர்
விற்பனை 30 சதவீதம்
அதிகரிப்பு
புதுக் கவிதைகள்
அணிவகுப்பு அட்டகாசம்
நூல் விமர்சனம் சிறப்பு
வாசகர் கடிதங்கள் முழு
பேப்பரையும் வாசித்த
மனநிறைவு ஏற்படுகிறது
கருப்பையைக் காக்கும்
கருப்பட்டி# போலிகள்
பெருத்து விட்டன
என்பதுதான் வேதனை
இலங்கை சிறையிலிருந்து
விடுதலையாகி தாயகம்
திரும்ப முடியாமல் தவிக்கும்
நாகை மீனவர்கள்
தூத்துக்குடி அனல்மின்
நிலையத்தில் 5 மின்
அலகுகள் நிறுத்தம்#1050
மெகாவாட் மின் உற்பத்தி
பாதிப்பு
தமிழ்நாடு முழுவதும் வாக்கு
எந்திரங்கள் சரிபார்க்கும்
பணி 11ம் தேதி தொடக்கம்
புதுவையில் நாளை தவெக
பொதுக்கூட்டம்#தமிழத்தைச்
சேர்ந்தவர்களுக்கு அனுமதி
இல்லை
தானே: போலி பாஸில்
உள்ளூர் ரயிலில் பயணம்
செய்த இளைஞர் கைது
மக்களிடையே
பிரிவினை ஏற்படுத்தும்
சநாதனம்#அமைச்சர்
சேகர் பாபு
நாகப்பட்டினம்#பெண்ணிடம்
நகை பறித்த சிறுவன்
உட்பட மூவர் கைது
ஆசை வார்த்தைகள் கூறி
சிறுமியை திருமணம் செய்த
விவசாயி #போக்சோவில்
கைது
தூத்துக்குடியில் போலி
500 ரூபாய் நோட்டை
புழக்கத்தில் விட்ட இரண்டு
பேர் கைது
இண்டிகோ விமான சேவை
ரத்து காரணமாக 116
பெட்டிகளைக் கூடுதலாக
இணைத்தது ரயில்வே
கேரம் போட்டியில் இந்தியா
சாம்பியன்
சுழற்சிப் பொருளாதாரத்தால்
பால் பண்ணை விவசாயிகள்
வருமானம் 20%
பெருகும்#அமித்ஷா
கோவா தீ விபத்தில் 23 பேர்
பலி#நிவாரணம் அறிவிப்பு
இண்டிகோ சீஇஓக்கு டிஜிசிஏ
நோட்டீஸ்
சூடானில் டிரோன்
தாக்குதல்#பள்ளிக்
குழந்தைகள் உட்பட 116
பேர் பலி



-பி.சுரேகா
சென்னை

வணக்கம். 8. 12. 25 அன்று தமிழ்நாடு இ பேப்பர். காம் பக்கத்தில் மதுரையை தொழில் நகரமாக்குவதே ஆசை என்ற தமிழக முதல்வர் அவர்களின் ஆசை நியாயமானது.. அது நிறைவேற வேண்டும் என்று இறைவனை பிரார்த்தனை செய்தேன் இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக எனக்கு நல்ல செய்திகளை மிக அழகாக சொன்னது.

திருக்குறளை அதன் பொருளுடன் படிக்கும் போது உண்மையிலேயே மகிழ்ச்சியாகத்தான் உள்ளது.. வலங்கைமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மேலாண்மை கூட்டம் நடந்தது மிகவும் அற்புதம் இவற்றையெல்லாம் பார்க்கும் போது நேரில் பல சில நிகழ்ச்சிகளை பார்ப்பது போல ஒரு அருமையான உணர்வு வருகிறது..

நலம் தரும் மருத்துவம் பகுதியில் வந்த மாதத்திற்கு ஒரு முறையாவது விரதம் இருந்து பழச்சாறு அருந்தினால் நம் உடலில் உள்ள நச்சுக்கள் நீங்கும் என்ற அருமையான தகவலை தெரிந்து கொண்டு இனி எப்போதும் விரதம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

மீண்டும் மழை ஆரம்பம் சென்னைக்கு அடுத்த சுற்று மழை எப்போது டிசம்பர் எப்படி இருக்கும் என்ற நல்ல தகவல்களையும் அருமையான வானிலையை பற்றியும் தெரிந்து கொள்ள முடிந்தது.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் பரலி சு. நெல்லையப்பர் வரலாறு பற்றி படிக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது பாராட்டுக்கள் .

பல்சுவை களஞ்சியம் பகுதி மிகவும் அற்புதம். மீம்ஸ் மிகவும் அருமையாக இருப்பதால் அதை பார்க்கும் போது கவலை எல்லாம் மறந்து சிரிக்க வைக்கிறது.. பன்முகம் பக்கமும் மிகவும் அருமை.. எப்போது நடக்கலாம் என்று நல்ல அருமையான தகவலை தெரிந்து கொண்டவுடன் அது ஆரோக்கியமாக வாழ உதவும் என்று எண்ண வைத்தது. முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களின் திருவுருவ சிலையை திறந்து வைத்தது மிகவும் அருமை.. பிசியோதெரபி மாநாடு பற்றிய தகவலும் அருமையாக இருந்தது பாராட்டுக்கள். சுற்றுலா பக்கத்தில் வந்த பயணம் செய்யத் தூண்டும் ஸ்கைவாக் பாலங்கள் என்ற செய்தி மிகவும் அருமை. இதுபோன்ற பாலங்களில் நடந்ததில்லையே என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டாலும் இனி எப்போது இந்த பாலத்தை பார்த்தாலும் அதில் நடந்து அனுபவிக்க வேண்டும் என்று தோன்றியது.

மது சீரமைப்பால் புதுப்பொலிவு பெறும் மதுரை ரயில் நிலையம் என்று பயணிகளுக்கு கூடுதல் வசதிகளை செய்து கொடுத்த மதுரை பற்றிய தகவல் மிகவும் அருமை. மக்களிடையே பிரிவினை ஏற்படுத்தும் சனாதனம் என்று சேகர்பாபு அவர்கள் சொன்னது படித்தபோது பல தெரியாத நிகழ்ச்சிகளை தெரிந்து கொள்ள முடிந்தது. இண்டிகோ விமான சேவை ரத்து காரணமாக 31 ரயில்களில் 116 பெட்டிகளை கூடுதலாக ரயில்வே இணைத்தது பயணம் செய்பவர்களுக்கு மிகவும் அருமையாக நல்ல செய்தியாக இருக்கும். நியூயார்க் நகரில் ஏழு மாடி உயர பிரம்மாண்ட கிறிஸ்மஸ் மரம் களைக்கட்டும் விழாக்கால கொண்டாட்டம் என்று அமெரிக்காவில் நடப்பதை நேரில் பார்ப்பது போல அருமையான படத்துடன் விளக்கியது மனம் அயல் நாட்டுக்கே சென்று விட்டது. அருமையான செய்திகளை மிக அற்புதமாகவும் தெளிவாகவும் விரிவாகவும் படங்களுடன் கொடுப்பதால் ஆர்வமுடன் தமிழ்நாடு இ பேப்பர் நாளிதழை படிக்க தோன்றுகிறது. இதற்காக அரும்பாடு படும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்

ruby
Building Future
தேவை
செக்யூரிட்டி கார்ட்
தொடர்புக்கு:
7299019079
9884194154

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards

CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

திருவள்ளூர் மாவட்டம் தொழுவூரில் அமைந்துள்ள ஸ்ட்சுரல் ஸ்டீல் நிறுவனத்தில் பணிபுரிய நன்கு அனுபவமுள்ள கீழ்கண்ட ஆட்கள் தேவை.
- SAFETY OFFICER
- ARC / CO2 வெல்டர்
- கேஸ் கட்டர்
- கனரக வாகன டிரைவர் (Heavy License)
- ஸ்ப்ரே பெயிண்டர்
- Industrial எலக்ட்ரீசியன் (B-License)

தகுதியுடையோர்க்கு நல்ல சம்பளம் வழங்கப்படும். ESI, EPF மற்றும் தங்கும் வசதி உண்டு.
Ct: 98416 46097

இடம் விற்பனைக்கு
இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
8300134494

Make Money Without Investment Through Mobile

Just 20 min/per day
Any Time
Earn upto Rs. 1000/per mobile
Call : 9337501889

Darling MASALA
SPICES & FOODS
A Mega Food Processing Company
AREA SALES MANAGER
HORECA SALES MANAGER
MARKETING HEAD
SALES OFFICER
To Promote Pickles / Masala / Appalam / Asofedita
admin@darlingmasala.com
+91 98410 08875

இடம் விற்பனைக்கு
காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
Contact: 08220426606

WANTED
OFFICE EXECUTIVE (MALE)
for Catering Office at Kanchipuram.
Proficient in MS Office, maintain office supplies & equipments.
mail resume:
subhamganesan24@gmail.com

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்

3 காலண்டர் 100 ரூபாய்
அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889

ADVERTISE WITH US

CONTACT US
9438610756


WANTED EXPERIENCED SOCIAL MEDIA CONTENT CREATORS

94386 10756

புதிய தனி பங்களா வீடு வாடகைக்கு தேவை

தி.நகர், பனகல் பூங்கா, போயஸ் கார்டன், BOAT CLUB, RA புரம், ஆழ்வார்பேட்டை, MRC நகர், அடையாறு, பெசன்ட் நகர், கோட்டூர்புரம் ஆகிய இடங்களில் புதிய தனி பங்களா வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு: 75500 00680

Just 499

Visite Our Website JUST499.COM

All type Of your Website/App need at one place



Small Business website

E - commerce Website

Corporate Website

Enterprise website

Mobile App Development

contact us at 9337501889

"CREST UBERTA" @ ANAKAPUTHUR



Grand Launching Offers

1 BHK ₹.19.99 L*

2 BHK ₹.29.99 L*

FREE SITE VISIT

CREST HOMES PVT LTD Elegant Affordable...

89399 65050

www.crest.homes

சென்னையில் CBSE பள்ளி

நடத்த நிலம் அல்லது கட்டிடம் வாடகைக்கு தேவை

CBSE பள்ளி நடத்துவதற்கு குறைந்த பட்சம் 2ஏக்கர் முதல் 3 ஏக்கர் நிலத்தில் 40,000 முதல் 1,05,000 சதுரடியில் கட்டிடம் கட்டி வாடகைக்கு விடுவதற்கு ஆர்வமுள்ள நில உரிமையாளர்கள் கீழ்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்

98426 99991

கோவை பீளமேட்டில் உள்ள

லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய

★ சமையல் மாஸ்டர்

★ CARE TAKER/ LADY SECURITY

வீட்டில் பணிபுரிய

★ சமையல்காரர்

★ தோட்ட பராமரிப்பு மற்றும் செக்யூரிட்டி தேவை

தங்குமிடம், உணவு இலவசம்

98947 73431

Telecaller Job

Apply Today

Mobile Calling !!!!



Rs 250-Rs500 per day

Work From Home Jobs

Rs 8000 - Rs 15000 per month

Ananda Bhaskar

9337501889

7789941009

PRIME LAND FOR SALE

on main road between Perambalur to Trichy NH-45

• Approx. frontage 200 feet, 2 Acres
• Nearby Dhanalakshmi Srinivasan Medical College
• Ideal for Built & Suit
• Loan can be organised for Buyer

BHAARATH REAL ESTATE

To Buy or Sell We are the Leaders

ECR, Neelankarai, Chennai -115

Ph: 98412 99099 / 72994 86699

Email: bhaarathre21@gmail.com / www.bhaarathrealestate.com

காஞ்சிபுரம்

செங்கழனீரோடை வீதி

3150 சதுரடி மனை

வடக்குப் பார்த்த கமர்ஷியல் மனை விற்பனை

9884851142 / 9884851146

ST COURIER

The People's Choice

ISO 9001:2008 Certifed

DOMESTRIC- INTERNATIONAL

Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.

Cell: 9176130601

பூந்தமல்லி

பஸ் நிலையம், Metro Station Outer Ring Road அருகில் CMDA RERA Appd.

PLOT FOR SALE

9710500077

கடம்பத்தூர்

ரயில் நிலையம் அருகில் DTCP Approved 600/- Sq.ft.

Rs.3,30,000/-

Offer Rate

99520 53440

இடம் விற்பனைக்கு

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை to இளையான்குடி மெயின் ரோட்டில் 250 ஏக்கர் மொத்த இடம் விற்பனைக்கு தயாராக உள்ளது.

தொடர்புக்கு : 98434 88428 / 94420 78428

Manjal Mart

YOUR DESIRE WE DELIVER

SOMETHING FOR EVERY FAMILY



எந்தவித கலப்படமும் இல்லாத தரமான மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம், ஜவ்வாது, விற்பனைக்கு உள்ளது

www.manjalmart.com

COMMERCIAL COMPLEX FOR RENT



3 FLOORS with Lift

EACH Floor AREA, 3000 sqft,

1st, 2nd, 3rd Floor Available

Corner Site 2 way Entrance

KKR GARDEN 3rd Main Road, Madhavaram, Chennai - 60

Nr. Metro Rly Stn & Anthony Hospital.

Cell: 98846 25240 / 98843 38911

COMMERCIAL SPACE FOR RENT

WAREHOUSE @ PORUR - GERUGAMBAKKAM

12500 Sq.ft.

40 Feet Road, 12 Mtr Ht, 3 Phase EB, ACC Flooring

Call : 98408 93117 / 82202 20444

DTCP APPROVAL

அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை அங்கீகாரம் பெற

&


பில்டிங் பிளான் APPROVAL

லே அவுட் APPROVAL

84381 83848



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்

# ஜில்... ஜில்...தொட்டபெட்டா!!



கோடைக்காலம் தொடங்கி விட்டது. ஆண்டு முழுவதும் உழைத்து களைத்த மக்கள் 'ஜில்" என்று இருக்க மலை பிரதேசங்களுக்கும், குளிர் பிரதேசங்களுக்கும் செல்ல ஆயத்தமாகி வருகின்றனர். சுற்றுலா என்றாலே நம்ம ஊர் மக்கள் வண்டியை கிளப்பி உதகைக்கு புறப்பட்டு விடுவார்கள். சரி..! அப்படி, உதகைக்கு செல்பவர்கள் எந்தெந்த பகுதிகளுக்கு செல்லலாம். அந்தப் பகுதியின் சிறப்புகள் என்ன..?

**சிறப்புகள் :**

தொட்டபெட்டா தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலை ஆகும். மேலும் இதுவே தென்னிந்தியாவின் உயரமான சிகரம் ஆகும். இந்த சிகரம் கடல் மட்டத்திலிருந்து 8,640 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

அதன் உச்சியில் உள்ள தட்டையான வளைவே தொட்டபெட்டாவின் சிறப்பு. இந்தச் சிகரம் ஊட்டியின் மற்றொரு பிரபலமான சுற்றுலா மையம். இங்கு, வனத்துறை அதிகாரிகள் மலை மேல் ஒரு ஆய்வு மையத்தை அமைத்துள்ளனர். அங்குள்ள இரண்டு தொலைநோக்கிகள் மூலம், சுற்றுலா பயணிகள் கண்ணுக்கினிய பள்ளத்தாக்கைக் காண முடியும்.


தென்னிந்தியாவின் உயரமான சிகரம் தொட்டபெட்டா. இந்த சிகரம் கடல் மட்டத்திலிருந்து 8,640 அடி உயரத்தில் அமைந்துள்ளது. தொட்டபெட்டா என்றால் பெரிய மலை என்று பொருள். தொட்டபெட்டா மலை சிகரத்திலிருந்து பார்த்தால் உதகை நகரம், குன்னூர், மைசூர் மற்றும் முதுமலை வனப்பகுதி உட்பட பல்வேறு இடங்களைக் காணலாம். இவற்றை பார்ப்பதற்கு தொட்டபெட்டா மலை பகுதியில் தொலைநோக்கு கருவி அமைக்கப்பட்டுள்ளது.







# எழுபது அடி ஆழத்தில் மூழ்கியுள்ள சங்கு சிவராத்திரி நாளில் மட்டும் தென்படும் அதிசயக் கோயில்!



எழுபது அடி ஆழத்தில் மூழ்கியுள்ள சங்கு சிவராத்திரி நாளில் மட்டும் தென்படும் அதிசயக் கோயில்!

சிவபெருமானை ஜோதி வடிவில் தரிசிக்கும் நாளை சிவராத்திரியாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம். பீகார் மாநிலம், மந்தர் மலைப்பகுதியில் எழுபது அடி ஆழத்தில் நீரில் மூழ்கியுள்ள சங்கு ஒன்று சிவராத்திரி நாளில் மட்டும் தென்படும் அதிசயம் வருடா வருடம் நடைபெறுகிறது. பீகார் மாநிலம், பாங்கா மாவட்டத்தின் கடற்கரையை ஒட்டி மந்தர் மலைப்பகுதியில் சங்கு குளம் ஒன்று அமைந்துள்ளது. இந்த சங்கு குளத்தில் பாஞ்சஜன்ய சங்கு என்று அழைக்கப்படும் சங்கு உள்ளது. இந்த சங்கானது வருடம் முழுவதும் சுமார் 70 அடி முதல் 80 அடி ஆழத்தில் தண்ணீரில் மூழ்கிய நிலையில் இருக்கிறது. சிவராத்திரிக்கு முந்தைய தினம் மட்டும் தண்ணீர் வற்றி சங்கு பொதுமக்களின் கண்களுக்கு தென்படும். ஒரே நாளில் தண்ணீர் வற்றி சங்கு தென்படுவதும் மறுநாளே தண்ணீர் பெருக்கெடுத்து சங்கு மூழ்கிப்போவதும் ஆச்சரியமாக உள்ளதாக அங்கு வசிக்கும் மக்கள் கூறி வருகின்றனர். புராணக் கதையின்படி பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்க தேவர்களும் அசுரர்களும் மந்தார மலையை மத்தாகப் பயன்படுத்தினர் எனக் கூறப்படுகிறது . பீகார் கடல் பகுதியில் உடைந்த மத்து போன்ற மந்தாரமலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மலைப்பகுதி பாகல்பூர் என்ற இடத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்த மலைக்கு பௌர்ணமி, அமாவாசை, பிரதோஷம் ஆகிய நாட்களில் திரளான பக்தர்கள் வருகை தருகின்றனர். இப்பகுதி வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது என்பதால் மலைக்குச் செல்ல வனத்துறையிடம் பக்தர்கள் அனுமதி பெற வேண்டியது அவசியம்.



## விடுகதை

| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |



# ஜோக்ஸ்

காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே! ஏன்?

காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஓடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.

நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே! ஏன்?

அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே!



ஜோக்ஸ் பகுதிக்கு

இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.

டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?

இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.



# சமையல் அறை ஸ்பெஷல்



## பயனுள்ள சமையல் டிப்ஸ் உங்களுக்காக...



* கிழங்குகளை உப்புப்போட்டு வேக வைக்கக் கூடாது. அப்படி செய்தால் சீக்கிரம் வேகாது.

* சாதம் கொதிக்கும் போது இரண்டு துளி எலுமிச்சம்பழச் சாறு பிழிந்தால் சாதம் வெண்மையாக இருக்கும்.

* உருளைக்கிழங்கை சீவியதும் சிறிது பயத்தம் பருப்பு மாவைத் தூவி சிப்ஸ் செய்தால் மொறுமொறுப்பாக இருக்கும்.

* பால் பாயசம் செய்யும் போது பாதாம் பருப்பை அரைத்து சேர்த்தால் பாயசம் சுவையாக இருக்கும்.

* ரவாதோசை செய்யும்போது 2 ஸ்பூன் கடலை மாவு சேர்த்தால் தோசை நன்கு சிவந்தும், மொறுமொறுப்பாகவும் இருக்கும்.

* சேமியாவை வாணலியில் வறுத்து விட்டு உப்புமா செய்தால் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் இருக்கும்.

* கோதுமை அல்வா செய்யும்போது வெந்நீர் தெளித்து நெய் கலந்து கிளறினால் சுவையும் மணமும் கூடும்.

* பச்சை மிளகாயைக் காம்பு எடுக்காமல் பெருங்காய டப்பாவில் போட்டால் பெருங்காயம் கட்டியாகாமல் மிருதுவாக இருக்கும்.

* வத்தல் குழம்பு தயார் செய்யும் போது அவரை, கத்திரி, கொத்தவரங்காய் வத்தல்களை 15 நிமிடம் வெந்நீரில் ஊறவைத்து குழம்பில் சேர்த்தால் சீக்கிரம் வெந்து விடும்.

* எலுமிச்சை, தக்காளி, புளி, தேங்காய் சாத வகைகள் செய்யும் முன்பு சாதத்தை ஒரு பெரிய தாம்பாளத்தில் போட்டு நல்லெண்ணெய் விட்டுக் கிளறி ஆற வைத்து பின்னர் செய்தால் உதிரி உதிரியாகவும், சுவையாகவும் இருக்கும்.

* வடை மாவில் அரை கப் சாதத்தை பிசைந்து வடை தயாரித்தால் மிருதுவாக இருக்கும். எண்ணெய்யும் அதிகம் குடிக்காது.

## கொத்தமல்லி கார உருண்டை



தேவையான பொருட்கள்:

அரிசி ரவை–2 கப்
கொத்தமல்லித்தழை – சின்ன கட்டு
பச்சை மிளகாய் –3
தேங்காய்த் துருவல் – 4 கப்
நெய் – 2 டீஸ்பூன்
புளி – சிறிதளவு
கடுகு – 1½ டீஸ்பூன்
உளுந்தம்பருப்பு, கடலைப்பருப்பு தலா – 2 டீஸ்பூன்
பெருங்காயத்தூள் ½ டீஸ்பூன்
எண்ணெய், உப்பு – தேவையான அளவு

செய்முறை:

வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு, கொத்தமல்லித்தழை, பச்சை மிளகாய், தேங்காய்த் துருவல், புளி ஆகியவற்றை வதக்கி, பின்னர் மிக்சியில் விழுதாக அரைக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, உளுந்தம்பருப்பு, கடலைப்பருப்பு தாளித்து, 5 கப் நீர் ஊற்றவும். அதில் அரைத்த விழுது, பெருங்காயத்தூள், உப்பு, நெய் சேர்த்துக் கொதிக்கவிடவும். நன்கு கொதிக்கும்போது, அடுப்பை 'சிம்'மில் வைத்து, அரிசி ரவையை சேர்த்து கைவிடாமல் கிளறி, மூடிபோட்டு 10 நிமிடம் வேகவிட்டு இறக்கவும். ஆறியதும் சிறு உருண்டைகளாகப் பிடித்து, இட்லித் தட்டில் வைத்து ஆவியில் வேகவிட்டு எடுத்தால் சுவையான கொத்தமல்லி கார உருண்டை தயார்.

## ஜூஸியான கலாகண்ட் செய்வது எப்படி?



சுவையான கலாகண்ட் செய்வது எப்படி என பார்ப்போம். கலாகண்ட் செய்வதற்கு பால், பன்னீர், நெய், சர்க்கரை, ஏலக்காய் உள்ளிட்டவை அவசியம். இதில் பன்னீரை கடையில் வாங்கமல், வீட்டில் இருக்கும் பாலை வைத்து நாமே செய்தால் கலாகண்ட் நன்றாக வரும்.

தேவையான பொருட்கள்...

பால் – 1 லிட்டர்
நெய் – 1/2 கப்
சர்க்கரை – 1 கப்
குங்குமப்பூ – (வேண்டுமென்றால்)
ஏலக்காய்த்தூள் – 1 டீஸ்பூன்
பிஸ்தா – (வேண்டுமென்றால்)
பாதாம் – (வேண்டுமென்றால்)
எலுமிச்சை பழச்சாறு – 1 பழம்
ருசிக்க தயாராக கலாகண்ட் இனிப்பு

செய்முறை

முதலில் பன்னீர் செய்வது எப்படி என பார்ப்போம். பன்னீர் செய்வதற்கு 500மிலி பால் எடுத்துக்கொள்வோம். பாலை நன்கு காய்ச்சவேண்டும். பால் நன்கு கொதித்தபின்பு, அதில் ஒரு எலுமிச்சைப்பழத்தை பிழிந்து விடவேண்டும். பால் முழுவதுமாக திரிந்து வரும்வரையில் அடுப்பை நிறுத்தவேண்டாம். பின்னர் தண்ணீர் தனியாக பிரிந்த உடன், அதனை எடுத்து வடிகட்டி கொள்ளலாம். பின்னர் பன்னீர் மீது தண்ணீர் ஊற்றவேண்டும். அப்போதுதான் பன்னீரில் எலுமிச்சைப் பழத்தின் புளிப்பு தெரியாது.

பின்னர் ஒரு லிட்டர் பால் எடுத்துக்கொண்டு, அதனை நன்கு கொதிக்கவிடவேண்டும். கொதிக்கும்போது கிண்டிவிட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் பாத்திரத்தில் அடிபிடிக்காது. பால் நன்கு வற்றி, க்ரீம் பதத்திற்கு வரும்வரை கிண்டவேண்டும். இந்தப்பதம் வரும்போதே பாலில், செய்துவைத்த பன்னீரை எடுத்துக்கொட்டி கிண்டுங்கள். தொடர்ந்து கிண்டியபிறகு பாலில் உள்ள ஈரம் வற்றியபிறகு, அதில் அரை கப் நெய் ஊற்றவேண்டும். நெய் ஊற்றி 5 நிமிடம் நன்றாக கிண்டியபின், 1 கப் வெள்ளை சர்க்கரையை சேர்க்கவேண்டும். இனிப்பு கூடுதலாக வேண்டுமென்றால், கூடுதல் சர்க்கரை சேர்த்துக்கொள்ளலாம்.

கடைசியில் ஏலக்காய்தூள் போட்டு கிண்டவேண்டும். பின்னர் கலாகண்ட் நன்கு கெட்டி பதத்திற்கு வந்தபின் இறக்கிக்கொள்ளலாம். நன்கு நிறம்வேண்டும் என்பவர்கள் கூடுதல் நேரம்வைத்து கிண்டலாம். பின்னர் ஒரு பாத்திரத்தில் நெய்தடவி, கலாகண்ட் கலவை சூடாக இருக்கும்போதே அதனை கொட்டி அழுத்திவிடவேண்டும். வேண்டுமானால் அதன்மேல் முந்திரி, பாதாம், என உங்களுக்கு பிடித்த பருப்பு வகைகளை சேர்த்துக்கொள்ளலாம். ஒரு இரண்டுமணிநேரம் கழித்து கலாகண்ட் கலவையை எடுத்துப்பார்த்தால் நன்கு ஆறி, கெட்டியாக இருக்கும். அருமையான கலாகண்ட் இனிப்பு தயார்.

## உடல் எடையை குறைக்கணுமா?... கொள்ளு துவையல் இருக்க கவலை எதற்கு?

தேவையான பொருட்கள்:

கொள்ளு – 1 கப்
கடலை பருப்பு – 1 தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் – 3
பெருங்காயத்தூள் – 1 தேக்கரண்டி
உளுந்து – 1 தேக்கரண்டி
தேங்காய்த் துண்டுகள் – 1 கப்
புளி – 10 கிராம்
கடுகு – 2 தேக்கரண்டி
எண்ணெய் – தேவையான அளவு
உப்பு – தேவையான அளவு

செய்முறை:

வாணலியில் கொள்ளை சேர்த்து வாசம் வரும் வரை வறுத்துக் கொள்ளவும். அதே வாணலியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி கடலைப் பருப்பு, சிறிதளவு உளுந்து, காய்ந்த மிளகாயை போட்டு வறுக்கவும். வறுத்து வைத்திருக்கும் கலவையை மிக்ஸியில் போட்டு அத்துடன் தேங்காய்த் துண்டுகள், புளி, உப்பு, பெருங்காயத்தூள் சேர்த்து அரைக்கவும். கடைசியாக கடுகு, கறிவேப்பிலையை தாளித்துக் கொட்டி சூடான சாதத்தில் நல்லெண்ணெய் சேர்த்து சாப்பிட சுவை அமோகமாக இருக்கும். நீங்கள் உண்ணும் உணவில் அடிக்கடி கொள்ளு சேர்த்துக்கொள்வதால் உடலில் உள்ள கெட்ட கொழுப்புகள் குறையும். உடலில் உள்ள கெட்ட கொழுப்புகள் குறைவதால் எடை இழப்பு ஏற்படும். கொள்ளில் உள்ள நார்ச்சத்து மற்றும் புரதம் நீண்ட நேரம் பசி எடுக்காமல் நிறைவாக உணர வைக்கும். இதனால் நீங்கள் உட்கொள்ளும் உணவின் அளவும் குறையும். கொள்ளு துவையலாக மட்டுமில்லாமல், கொள்ளை வேகவைத்து சுண்டலாகவும், கொள்ளு தோசை, கொள்ளு சூப், கொள்ளு ரசம் முதலானவற்றை செய்து சாப்பிடலாம்.



## இறால் வறுவல்! வீட்டிலேயே செய்யலாம்!



செய்முறை

* முதலில் அடுப்பில் ஒரு வாணலியை வைத்து சூடாக்கவும்.

* வாணலி சூடானதும், வெண்ணெயைச் சேர்த்து உருக விடவும். வெண்ணெய் அதிகம் சேர்த்தால் சுவை இன்னும் சிறப்பாக இருக்கும்.

* வெண்ணெய் உருகியதும், பொடியாக நறுக்கிய பூண்டுத் துண்டுகளைச் சேர்க்கவும். வெண்ணெய் மற்றும் பூண்டின் கலவை சேர்ந்து சமைக்கும்போது, சுவை பல மடங்கு அதிகரிக்கும்.

* பூண்டு பொன்னிறமாக வந்தவுடன், முழு சின்ன வெங்காயம் மற்றும் நறுக்கிய குடைமிளகாயைச் சேர்த்து வதக்க வேண்டும். வெண்ணெயில் சமைக்கும்போது அடுப்பின் தீயைக் குறைத்துக்கொள்வது முக்கியம், இல்லையென்றால் வெண்ணெய் கருகிவிடும்.

* இப்போது சுத்தம் செய்து வைத்திருக்கும் இறால்களைச் சேர்க்கவும். இறால்களைச் சேர்த்த உடனேயே, தேவையான அளவு உப்பையும் சேர்த்து நன்கு கிளறவும். உப்பு சேர்த்த பின்னர்தான் இறால், சுவையை நன்கு உறிஞ்சும்.

* காரத்துக்கு மிளகாய் தூளைச் சேர்க்கவும். இந்த உணவு தயாராக 5 முதல் 10 நிமிடங்களே ஆகும். இறாலை நீண்ட நேரம் சமைத்தால் ரப்பர் போன்று இறுகிவிடும் என்பதால் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

* இப்போது சிறிதளவு தண்ணீர் சேர்த்து, அதனுடன் சோயா சாஸ் மற்றும் கூடுதல் காரத்துக்குத் தேவையான மிளகாய் தூளையும் சேர்க்கவும். வெண்ணெய் மற்றும் பூண்டுடன் சேர்ந்து சோயா சாஸ் ஒரு அற்புதமான குழம்புப் பக்குவத்தைக் கொடுக்கும்.

* இறுதியாக, பொடியாக நறுக்கிய வெங்காயத் தாளைத் தூவி அடுப்பை அணைக்கவும். இது உணவின் சுவையை மேலும் அதிகரிக்கும்.

இந்த உணவில் உள்ள நன்மைகள்


* இறாலில் புரதம் அதிக அளவில் உள்ளது. இது உடலின் திசுக்கள் மற்றும் தசைகளின் வளர்ச்சிக்கு அவசியமானது. மேலும், இதில் உள்ள ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் மூளை மற்றும் கண் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. இது இதய நோய்கள் வராமல் தடுக்கவும் உதவுகிறது.

* பூண்டு ஒரு இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட உணவு. இதில் உள்ள அல்லிசின் என்ற கலவை இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், கொழுப்பின் அளவைக் குறைக்கவும் உதவுகிறது. இது செரிமானத்திற்கும் துணைபுரிகிறது.

* வெங்காயத்தில் பல ஊட்டச்சத்துக்கள் உள்ளன. அதில் உள்ள குவெர்செடின் என்ற ஆன்டிஆக்ஸிடன்ட், உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கும் ஆற்றல் கொண்டது. இது எலும்புகளின் ஆரோக்கியத்திற்கும் நல்லது.

இப்படி ஆரோக்கியமான பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் 'பட்டர் கார்லிக் பிரான்', சுவையுடன் சேர்த்து உங்கள் உடலுக்கும் பல நன்மைகளை வழங்குகிறது. அதோடு இன்றைய வேகமான உலகில், வெளியில் கிடைக்கும் ஆரோக்கியமற்ற உணவுகளை தேடிச் செல்வதற்குப் பதிலாக, உணவகங்களில் சாப்பிடும் அதே சுவையை வீட்டிலேயே அனுபவிக்க இந்த ரெசிபி சிறந்த தேர்வாக இருக்கும். இது குடும்பத்தினருக்கும், குறிப்பாக குழந்தைகளுக்கும் பிடித்தமான ஒரு உணவாக நிச்சயம் அமையும். இதை நீங்களும் உங்கள் வீட்டில் முயற்சி செய்து சுவைத்து மகிழுங்கள்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699

## நாராயண சுவாமி கோவில் கார்த்திகை திருவிழாவில் அன்னதானம்



கன்னியாகுமரி நாச்சியார் குடியிருப்பு தெட்சணத்து மூலபதி ஸ்ரீமன் நாராயண சுவாமி கோவில் கார்த்திகை திருவிழாவில் அன்னதானத்தை பாஜக கவுன்சிலர் ஜவான் ஐயப்பன் துவக்கி வைத்தார்.

## இழப்பீட்டுத் தொகை




மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், சவுதி அரேபியா நாட்டில் மரணித்தவரின் குடும்பத்தினருக்கு இறப்பு இழப்பீட்டுத் தொகையாக ரூ.3.41 லட்சம் வழங்கப்பட்டது.

## ஊராட்சி கிராம சபை கூட்டம்




திருத்தணி தொகுதி, அம்மையார்குப்பம் ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளை மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேட்டார்.

## கும்மிடிப்பூண்டியில் நடந்த யாத்திரை



கும்மிடிப்பூண்டியில் நடந்த யாத்திரையில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பேசினார்.




## நயினார்நாகேந்தின் பூவை ஜகன் மூர்த்தி எம்எல்ஏ மரியாதை நிமித்தமாக சந்திப்பு



திருத்தணியில் நயினார் நாகேந்திரனை புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் பூவை ஜகன் மூர்த்தி எம்எல்ஏ மரியாதை நிமித்தமாக சந்தித்து பூங்கொத்து வழங்கி பேசினார்.

## மத்திய அரசின் சிறந்த மாவட்டத்திற்கான விருது



சக்தி அபியான் திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் மேம்பாடு பணிகளை சிறப்பாக செய்ததற்காக கோவைக்கு மத்திய அரசின் சிறந்த மாவட்டத்திற்கான விருது வழங்கப்பட்டது. இதை முதல்வர் ஸ்டாலினிடம் கலெக்டர் பவன்குமார் காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்ளார்.

## தங்க ரதம்



காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் இறைப்பணி அறக்கட்டளையின் மூலம் உருவாக்கப்பட்ட தங்க ரதத்தினை அதன் நிர்வாகிகள் ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் நிர்வாகத்திடம் அமைச்சர்கள் சேகர்பாபு, காந்தி முன்னிலையில் ஒப்படைத்தனர்.

## தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி




துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் விழாவில் நடுகுத்தகை ஊராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் நாசர் வழங்கினார்.

## முருகன் மாநாடு




டெல்லி கர்நாடக சங்கத்தில் முருகன் மாநாட்டை வானதி சீனிவாசன் எம்எல்ஏ துவக்கி வைத்தார்.

## ஸ்ரீஜயப்ப சுவாமி படி பூஜை




கோவை மக்கள் சேவை மையம் மற்றும் சபரிமலை ஐயப்பா சேவா சமாஜம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஸ்ரீஜயப்ப சுவாமி படி பூஜையில் வானதி சீனிவாசன் பங்கேற்றார்.

## தி.மு.க. சார்பில் கண் சிகிச்சை முகாம்




துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் வே.கருணாநிதி தலைமையில் மாபெரும் கண் சிகிச்சை முகாமை அமைச்சர் தா.மோ. அன்பசரன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு மூக்கு கண்ணாடிகளை வழங்கினார்.

## மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்ற பேரணி




தென்காசியில் பொதுமக்களிடையே ”தூய்மையே சேவை 2025” விழிப்புணர்வினை வலியுறுத்தி பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்ற பேரணியினை கலெக்டர் கமல்கிஷோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## பாஜக சார்பில் நலத்திட்ட உதவி



சென்னை தியாகராய நகர் கிழக்கு மண்டல் பகுதியில், அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாளை முன்னிட்டு பாஜக சார்பில் நலத்திட்ட உதவிகளை மாநில செயலாளர் வினோஜ் செல்வம் வழங்கினார்.

## பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருவுருவ வெண்கலச் சிலைக்கு அடிக்கல்




அருப்புக்கோட்டை தொகுதி பாலையம்பட்டி ஊராட்சியில் புதிதாக நிறுவப்பட உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருவுருவ வெண்கலச் சிலைக்கும் மற்றும் கட்டிடத்திற்கு அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி பணிகளைத் துவக்கி வைத்தார்.

## 72-வது தமிழ்நாடு மாநில சீனியர் பெண்கள் கபடி சாம்பியன்ஷிப் போட்டி



தமிழ்நாடு அமெச்சூர் கபடி கழகம் கன்னியாகுமரி மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் மற்றும் திருநைனார் குறிச்சி கபடி கிளப் இணைந்து நடத்தும் 72-வது தமிழ்நாடு மாநில சீனியர் பெண்கள் கபடி சாம்பியன்ஷிப் போட்டியை பாஜக மாநில செயலாளர் மீனாதேவ் துவக்கி வைத்தார்.

## கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவில் சிவக்குமார்



கோவை கேபிஆர் பொறியியல் கல்லூரியில் கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவில் நடிகர் சிவகுமார் பங்கேற்றார்.

## முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ்சை பாஜக நிர்வாகி அண்ணாமலை சந்தித்தார்



கோவையில் நேற்று நடந்த திருமண விழாவில் முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ்சை பாஜக நிர்வாகி அண்ணாமலை சந்தித்தார்.

## அன்னதான கூடத்துக்கு அடிக்கல்



கோவை கோனியம்மன் கோவிலில் ரூ.81லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் அன்னதான கூடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது, முன்னாள் எம்எல்ஏ கார்த்திக், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் மெட்டல்ராஜாமணி, தனபால், கோனியம்மன் கோவில் அறங்காவலர் குழு தலைவர் லட்சுமணன் பங்கேற்றனர்.

## சிறந்த பெண் பால் பண்ணையாளர் விருது




சிறந்த பெண் பால் பண்ணையாளர் விருது, ஸ்ரீமகாலட்சுமி பால்பண்ணை நிறுவனத்துக்கு (அரோமா) இந்திய பால்பண்ணை சங்கம், தென்மண்டலம் சார்பில் வழங்கப்பட்டது.

## முதுமை குறித்த இருநாள் தேசிய கருத்தரங்கு



கோவை பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் முதுமை குறித்த இருநாள் தேசிய கருத்தரங்கு நேற்று துவங்கியது.

## அரசியல் கட்சி பிரதிநிதி களுடன் கோவை கலெக்டர் பவன்குமார் ஆலோசனை




வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதி களுடன் கோவை கலெக்டர் பவன்குமார் ஆலோசனை நடத்தினார்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## இந்தியன் ஆயில் நிறுவனத்தில் 2757 பணியிடங்கள்

இந்தியன் ஆயில் நிறுவனத்தில் (ஐ.ஓ.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'டிரேடு', 'டெக்னீசியன்' அப்ரெண்டிஸ் பதவியில் மெக்கானிக்கல், கெமிக்கல், எலக்ட்ரிக்கல், இன்ஸ்ட்ருமென்டேசன், அக்கவுன்ட்ஸ் உள்ளிட்ட பிரிவுகளில் மொத்தம் 2757 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., / டிப்ளமோ / பி.எஸ்சி., / பி.காம்., வயது: 18-24 (30.11.2025ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கடைசிநாள்: 18.12.2025 விவரங்களுக்கு: iocl.com

## ரயில் நிறுவனத்தில் மேலாளர் பணியிடங்கள்




ரயில் இந்தியா டெக்னிக்கல், எகனாமிக் சர்வீஸ் நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'அசிஸ்டென்ட் மேனேஜர்' பதவியில் சிவில், எலக்ட்ரிக்கல், மெக்கானிக்கல், கெமிக்கல், ஐ.டி., உணவு தொழில்நுட்பம் உள்ளிட்ட பிரிவுகளில் மொத்தம் 400 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,/ பி.எஸ்சி.,

வயது: 18-40 (25.12.2025ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

தேர்வு தேதி: 11.1.2026 விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 600. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 300 கடைசிநாள்: 25.12.2025 விவரங்களுக்கு: rites.com

# சுற்றுலா: இயற்கை எழில் கொஞ்சும் மாஞ்சோலை!



கோடைக்காலத்தில் நாம் ஊட்டி, கொடைக்கானல், இந்த இரண்டு ஊர்களை மட்டும்தான் மையப்படுத்தி பெரும்பாலானோர் சுற்றுலா செல்வோம். ஆனால் அங்கு சென்ற பிறகுதான் தெரியும் தங்கும் இடத்திலிருந்து எல்லா இடங்களிலும் மையங்களிலும் சுற்றுலாப் பயணிகள் நிரம்பி வழிவார்கள்.

ஆஹா வேறு எங்காவது சென்றிருக்கலாமே அமைதியாக அழகாக கோடைக் காலத்தில் பயணத்தை அனுபவித்து விட்டு வரலாமே என்று நீங்கள் வருத்தப்படுவீர்கள். ஆனால் திருநெல்வேலி மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் அழகான மலையாக மாஞ்சோலை உள்ளது. மாஞ்சோலையில் இயற்கை அழகின் அருமைகளை இப்பதிவில் தெரிந்து கொள்வோம்.

இது மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அற்புதமான களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் பகுதியில் அமைந்துள்ளது. இங்குள்ள மலைகள் கடல் மட்டத்திலிருந்து 1000-1500 மீட்டர் உயரத்திற்கு உயர்ந்து நிற்கின்றன.

தேயிலைதோட்டங்கள்நிறைந்து காணப்படும் இந்தப் பகுதி மிகவும் அமைதியாகக் காட்சியளிக்கிறது. திருநெல்வேலியிலிருந்து சுமார் 70 கி.மீ தூரத்தில் உள்ள இந்த மாஞ்சோலை மணிமுத்தாறு நீர்வீழ்ச்சிக்கு மேலே மலைப்பகுதியில் அமையப்பெற்றுள்ளது.

மாஞ்சோலை அதன் அழகான வானிலைக்கு புகழ் பெற்றது. இங்கு இயற்கை எழில் சூழ்ந்த தேயிலை தோட்டங்கள், நீரோடைகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள் நிறைந்து காணப்படுகின்றன. மாஞ்சோலை மலை உங்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கும் ஒரு குளிர் பிரதேசமாக விளங்கும்.

### மாஞ்சோலை

பச்சை வண்ணம் தேயிலை தோட்டங்களைப் பார்த்தால் உங்களுக்கு மனதில் ஒருவித மகிழ்ச்சி பொங்கி வழியும். சுற்றியுள்ள மலைகள் மற்றும் காடுகளின் சில அற்புதமான காட்சிகளை நீங்கள் ரசிக்கக்கூடிய பல வாய்ப்புகள் இங்கு உள்ளன.

நீர்வீழ்ச்சிகள், பச்சை பசேல் புல்வெளிகள் மற்றும் அடர்ந்த காடு ஆகியவை உள்ளன. இந்த மாஞ்சோலை பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்கள் வழியாக நாம் நடந்து சென்றாலே ஒட்டுமொத்த இயற்கை அழகையும் ரசிக்க முடியும்.

அமைதியான சூழ்நிலையில் தங்க விரும்பும் அனைவரும் நிச்சயம் காண வேண்டிய இடமாக இந்த மாஞ்சோலை விளங்குகிறது. மாஞ்சோலை சுமார் 1162 மீட்டர் உயரத்தில் உள்ள மலை ஆகும். இந்த இடம் தேயிலைத் தோட்டங்களுக்குப் பிரபலமானது, அவற்றில் பம்பாய் பர்மா தேயிலைத் தோட்டம் மிக முக்கியமானது.

அதன் அழகிய அழகு காரணமாக, இந்த இடம் ஊட்டிக்கு இணையான அந்தஸ்தை பெறுகிறது. இங்கு வரும் சுற்றுலா பயணிகள் மணிமுத்தாறு அணை, மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி ஆகியவற்றை வரும் வழியில் கண்டு மகிழலாம்.

### மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி

இவற்றுடன் மலைக்கு மேலே கண்டு ரசிக்கக் கோதையாறு, குதிரைவெட்டி, நாலுமுக்கு மற்றும் ஊத்து போன்ற இடங்களும் உள்ளன. இங்கு செல்ல வனத்துறையிடம் அனுமதி வாங்க வேண்டும். அவர்கள் கூறும் கட்டுப்பாட்டின் பெயரிலேயே சுற்றுலா பயணிகள் சென்று வர முடியும்.

இந்த ஆண்டு டூர் பிளான் இன்னும் முடியவில்லை என்றால் கண்டிப்பாக மாஞ்சோலை செல்லுங்கள். ஒரு வித்தியாசமான அனுபவமும் இயற்கையான சூழ்நிலையில் மன நிம்மதியும் நிச்சயம் கிடைக்கும்.

# முன்னாள் படைவீரர் கொடிநாள்: குமரியில் ரூ.1.50 கோடி வசூல்

நாகர்கோவில், டிச.9:

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டிசம்பர் 7 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா , முன்னாள் படைவீரர் கொடிநாள் வசூலை துவக்கி வைத்தார்.

இதுகுறித்து ஆட்சியர் தெரிவிக்கையில், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7 ஆம் நாள் இந்தியா முழுவதும் கொடிநாள் அனுசரிக்கப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நாளில் முன்னாள் படைவீரர்கள் ஆற்றிய தொண்டுகளை நினைவு கூர்ந்து அரசு நன்றி பாராட்டி வருகிறது.

கொடிநாளில் திரட்டப்படும் நிதியானது போர்க்களத்தில் உயிர்நீத்த படை வீரர்களின் கைம்பெண்கள், ஊனமுற்ற படைவீரர்கள், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரது விதவைகளின் மறுவாழ்விற்காகவும், நலத்திட்ட ங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. 2024-ம் ஆண்டுக்கு கொடிநாள் வசூல் செய்திட அரசால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ.1,47,95,000 நிர்ணயம் செய்யப்பட்டு ரூ.1,50,76,040 வசூல் செய்யப்பட்டு அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் சீரிய முயற்சியால் தொடர்ச்சியாக 3 ஆண்டுகள் ஒரு கோடிக்கு மேல் வசூல் புரிந்து சாதனை புரிந்துள்ளது. தொடர்ந்து பொது மக்கள் அனைவரும் கொடிநாள் நிதியுதவி வாரி வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மாநகராட்சியின் நவீன மாடுகள் காப்பகம் பராமரிப்பு: தொண்டு நிறுவனங்கள் விருப்ப கடிதம் கொடுக்கலாம்

சென்னை, டிச.9:

சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை மாநகராட்சி பகுதிகளில் 22,875 மாடுகள், அவற்றின் உரிமையாளர்களால் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் பெரும்பாலான மாடுகள் உரிய இடவசதி இன்றி, தொழுவங்களுக்குள் வைத்து பராமரிக்கப்படாமல் சாலைகள் மற்றும் பொது இடங்களில் சுற்றித்திரிந்து போக்குவரத்துக்கு இடையூறு மற்றும் பொது சுகாதார சீர்கேடு ஏற்படுகின்றன. சில நேரங்களில் பொதுமக்கள் மாடுகளால் தாக்கப்படும் சம்பவங்களும் நடக்கின்றன.

ரூ.10 ஆயிரம் அபராதம்: இப்படி சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு, மாநகராட்சியின் 15 மண்டலங்களுக்கும் தலா ஒரு மாடு பிடிக்கும் வாகனம் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்துக்கும் தலா 5 மாடு பிடிக்கும் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிடிக்கப்படும் மாடுகள் புதுப்பேட்டையில் உள்ள மாநகராட்சி மாட்டுத் தொழுவத்தில் அடைக்கப்பட்டு, மாடு ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் வீதம் அதன் உரிமையாளர்களிடம் இருந்து அபராதமாக வசூலிக்கப்படுகிறது.

மீண்டும் சாலைகளில் விடக்கூடாது என்ற நிபந்தனையுடன் அந்த மாடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. கடந்த 2021 முதல் 2025 வரை மொத்தம் 16,692 சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடமிருந்து ரூ.4.43 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மாட்டின் உரிமையாளர்கள், மாடு வளர்ப்போர் சங்க நிர்வாகிகள் கோரிக்கைப்படி, சென்னையில் 17 இடங்களில் நவீன மாடுகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் திருவொற்றியூர், மாதவரம், ராயபுரம், தேனாம்பேட்டை ஆகிய மண்டலங்களில் நவீன மாடுகள் காப்பகங்களில் 710 மாடுகள் அவற்றின் உரிமையாளர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், 13 இடங்களில் சுமார் 1,100 மாடுகளை பரமாரிக்கும் வகையில் காப்பகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. புரிந்துணர்வு ஒப்பந்தம்: இத்திட்டத்தில் பேசின் பாலம் சாலையில் உள்ள 550 மாடுகளை பரமரிக்கும் திறன் கொண்ட காப்பகத்தில் உள்ள மாடுகளுக்கு தீவனம் வழங்கி பராமரிப்பதற்கு சேவை மனப்பான்மை உள்ள தன்னார்வலர் குழுவிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவுள்ளது.

இந்த சேவை மற்ற காப்பகங்களுக்கும் விரிவாக்கப்பட உள்ளது. விருப்பம் உள்ள தொண்டு நிறுவனங்கள், விருப்ப கடிதத்தை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பலாம்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# போரூர் - பூந்தமல்லி இடையேயான வழித்தடத்தில் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் சேவையில் தாமதம்

சென்னை, டிச.9:

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், 4-வது வழித்தடத்தில் ஒரு பகுதியான போரூர் - பூந்தமல்லி வரையிலான பாதையில்ரயில் மற்றும் வழித்தடத்துக்கான பாதுகாப்பு சான்றிதழுக்காக, இந்திய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பின் (ஆர்.டி.எஸ்.ஒ.) சோதனை நிறைவடைந்து, இது வரையில் ரயில்வே வாரியத்திடம் இருந்து ஒப்புதல் கிடைக்கவில்லை.

இதனால், இப்பாதையில் முதல் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் சேவை தொடங்குவதில் தாமதமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் ரூ.63,246 கோடி மதிப்பில் 116.1 கி.மீ. தொலைவில் 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில் கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி பைபாஸ் வரையிலான 4-வது வழித்தடம் ஒன்றாகும்.

இத்தடத்தில் ஒரு பகுதியான, பூந்தமல்லி - போரூர் சந்திப்பு மெட்ரோ ரயில் நிலையம் வரை 10 கி.மீ. தொலைவுக்கு பாதை அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வந்தது. ஏனெனில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் சேவை இப்பாதையில் இந்த மாதத்தில் தொடங்க ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்தது.

அதன்படி, ரயில் தண்டவாளம் அமைத்து, ஓட்டுநர் இல்லாத ரயில்களின் சோதனை ஓட்டமும் நடைபெற்று வந்தது. இதற்கிடையில், இத்தடத்தில் மெட்ரோ ரயில் மற்றும் வழித்தடத்துக்கு பாதுகாப்பு சான்றிதழ் பெறுவதற்கான சோதனையை இந்திய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பு (ஆர்.டி.எஸ்.ஒ.) ஆக.16-ம் தேதிமுதல் ஒரு வாரத்துக்கு மேல் நடத்தியது.

அப்போது, மணிக்கு 90 கி.மீ. வேகத்தில் மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு பயணிகளின் பயண வசதி மதிப்பீடு செய்யப்பட்டது. அத்துடன், வழித்தடத்தில் ரயில்களின் இழுவை மற்றும் பிரேக்கிங் செயல்திறன் பற்றிய விரிவான சரிபார்ப்பும் செய்யப்பட்டது. சான்றிதழ் விரைவில் கிடைத்து விடும் என்றும், அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தற்போதுவரை மெட்ரோ ரயில்கள் மற்றும் வழித்தடங்களுக்கான பாதுகாப்பு சான்றிதழை ரயில்வே வாரியம் வழங்கவில்லை. இதன் காரணமாக, ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் சேவை தொடங்குவதில் தாமதமாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: இப்பாதையில் கடந்த ஆகஸ்டில் இந்திய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பினர் சோதனை நடத்தினர். இக்குழுவினர், ரயில்வே வாரியத்துக்கு அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்துள்ளனர். இதற்கு ஒப்புதல் அளித்து, பாதுகாப்பு சான்றிதழை ரயில்வே வாரியம் தர வேண்டும். ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்த பிறகே, பெங்களூருவில் உள்ள மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் வந்து, இப்பாதையில் சோதனை ஓட்டம் உட்பட பல்வேறு சோதனைகளை நடத்தி ஆய்வு செய்வார். ஏதாவது திருத்தம் இருந்தால், ரயில்வே பாதுகாப்பு ஆணையர் தெரிவிப்பார். இல்லைஎனில், இப்பாதையில் ரயில் இயக்கலாம் என்று அறிக்கை சமர்ப்பிப்பார். இச்செயல்முறைகள் முடிந்து, விரைவில் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என்று எதிர்பார்க்கிறோம். தற்போது, இப்பாதையில் 95 சதவீதம் பணிகள் முடிந்துவிட்டன. ஓரிரு இடங்களில் இறுதிகட்ட பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன. இப்பாதையில் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் சேவையை இயக்க தயாராக இருக்கிறோம். இதற்காக நாங்கள் ரயில்வே வாரியத்துடனும் மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையரகத்துடனும் பேசி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# நாடாளுமன்ற தொகுதிகளின் அடிப்படையில் விசிகவில் 39 மண்டல செயலாளர்கள் நியமனம்

சென்னை, டிச.9:

தமிழகத்தில் உள்ள நாடாளுமன்ற தொகுதிகளின் அடிப்படையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் 39 மண்டல செயலாளர்களை கட்சியின் தலைவர் திருமாவளவன் நியமித்துள்ளார். அத்துடன், 2 சட்டப் பேரவை தொகுதிக்கு ஒரு துணை செயலாளர் வீதம் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்கும் 3 துணை மண்டல செயலாளர்களையும் நியமித்துள்ளார். அதன்படி, திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி மண்டல செயலாளராக தளபதி சுந்தர் நியமிக்கப்பட்டுள்ளார். மண்டல துணை செயலாளர்களாக மு.ஏகாம்பரம் (கும்மிடிப்பூண்டி, பொன்னேரி), ஆவடி ராமதாஸ் (மாதவரம், ஆவடி), செஞ்சி செல்வம் (பூந்தமல்லி, திருவள்ளூர்) ஆகியோரும் வட சென்னை தொகுதி மண்டல செயலாளராக ச.அம்பேத்வளவனும், துணை செயலாளர்களாக நீலமேகவளவன் (திருவொற்றியூர், ராயபுரம்), புரசை அன்பழகன் (திருவிக நகர், கொளத்தூர்), எஸ்.எம்.முனீர் (ஆர்.கே.நகர், பெரம்பூர்) ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். தென்சென்னை தொகுதி மண்டல செயலாளராக ரூதர் கார்த்திக், துணை செயலாளர்களாக கதிர் ராவணன் (விருகம்பாக்கம், தி.நகர்), மந்தைவெளி அசோக் (மயிலாப்பூர், சைதாப்பேட்டை), பள்ளிக்கரணை வீரவேல் (வேளச்சேரி சோழிங்க நல்லூர்) ஆகியோரும். மேலும் மத்திய சென்னை தொகுதிக்கு பலரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# ராஜராஜ சோழன் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் மணிமண்டபம் கட்ட அனுமதி கோரிய மனு முடித்துவைப்பு

மதுரை, டிச.9:

தஞ்சை அரண்பணி அறக்கட்டளை செயலர் தியாகராஜன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், தஞ்சை மாவட்டம் கும்பகோணம் உடையாளூரில் ராஜராஜ சோழன் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவருக்கு மணிமண்டபம் கட்ட உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு, "மனுதாரர் தரப்பில் தாங்களே தங்களது சொந்தப் பணத்தில் மணிமண்டபம் கட்டிக்கொள்ளவதாகவும், அதற்கான அனுமதி வழங்கக் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள இடம் கும்பகோணம் அருள்மிகு கைலாசநாதர் கோயிலுக்கு சொந்தமானது என அதன் செயல் அலுவலர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதோடு அங்கு ராஜ ராஜ சோழன் அடக்கம் செய்யப்பட்டதற்கு எவ்விதமான ஆவணங்களும் இல்லை என்றும், அவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர், ராஜ ராஜ சோழன் அங்கு தான் புதைக்கப்பட்டார் என நம்பிக்கை தெரிவித்தார். ஆனால் அதற்கான அறிவியல் பூர்வமான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரர் கோரும் நிவாரணத்தை வழங்கு இயலாது. அதே சமயம் மறைந்த அரசர் ராஜராஜ சோழன் அங்கு தான் அடக்கம் செய்யப்பட்டார் என்பதற்கான ஆவணங்களை மனுதாரர் சமர்ப்பித்தாலும், அது தொடர்பாக கொள்கை முடிவெடுக்க வேண்டியது அரசே. நீதிமன்றம் அதில் தலையிட இயலாது." எனக் குறிப்பிட்டு வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

# கொடிநாள் நிதிக்கு ஆளுநர், முதல்வர் நன்கொடை





**சென்னை, டிச.9:**

கொடிநாளை ஒட்டி கொடிநாள் நிதிக்கு ஆளுநர், முதல்வர், துணை முதல்வர் ஆகியோர் நன்கொடை வழங்கினர். இந்தியாவின் முப்படை வீரர்களின் அரும் பணிகளையும், தியாகத்தையும் போற்றும் நாளாக ஆண்டுதோறும் டிச.7-ம் தேதி கொடிநாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஆளுநர் ஆர்.என். ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஆகியோர் கொடிநாள் நிதிக்காக சென்னை ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடேவிடம் நன்கொடை வழங்கி வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியிட்ட வாழ்த்துச் செய்தி: நம் தேசத்தின் எல்லைகளைப் பாதுகாத்து நாட்டின் இறையாண்மையை உயர்த்திப் பிடித்துவரும் நம் ராணுவ வீரர்களுக்கு, கொடிநாள் வணக்கங்களை நாம் சிரம் தாழ்த்தி நன்றியுடன் தெரிவித்துக் கொள்வோம். நமது தேசத்தையும், மக்களையும் பாதுகாப்புடன் வைத்திருக்கும் தன்னலமற்ற சேவை, துணிவு, தியாகம் ஆகியவற்றை நினைவூட்டும் நாளே கொடி நாள் ஆகும்.

நிபுணத்துவம், வீரம், கடமையில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கு இந்திய ராணுவம் புகழ் பெற்றது. ராணுவத்தினரின் கொடிநாள் நிதிக்கு நிதி அளிப்பதன் மூலம் படைவீரர்களின் கண்ணியத்துக்கும் நலனுக்கும் நாம் துணை நிற்பதுடன், அனுபவம் மிக்க நம் முன்னாள் படை வீரர்களுக்கும் போரினால் கணவரை இழந்திருப்பவர்களுக்கும் நம்மால் உதவ முடியும். கொடிநாள் நிதியை முழுமனதுடன் தாராளமாக வழங்குமாறு தமிழ்நாட்டு மக்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: தாயகம் காக்க தன்னலம் மறந்து பணியாற்றும் முப்படை வீரர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆயுதப்படை கொடிநாளில் நாட்டு மக்களின் சார்பில் எனது வணக்கங்கள்.


மக்கள் அச்சமின்றிப் பாதுகாப்பாக வாழ, உயிரைத்துச்சமாக எண்ணி, கடுமையான சூழல்களில் கண்ணுறங்காமல் காவல் காக்கும் படைவீரர்களின் பணி ஈடு இணையற்றது. தியாகத் தீரர்களின் மறுவாழ்வுக்கும் அவர்களின் குடும்ப நலனுக்காகவும் கொடிநாள் நிதியளிப்பது குடிமக்களான நம் அனைவரின் கடமை.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்: முப்படை வீரர்களின் வீரத்தைப் போற்றும் வகையிலும், போரில் தியாகம் புரிந்த வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்துக்கும் உதவும் வகையிலும், கொடி நாள் நிதிக்கான நன்கொடை அளித்தோம்.

நாட்டுக்குள் நாம் நல்வாழ்வு வாழ, தங்கள் உயிரையும் துச்சமெனக் கருதி எல்லையைப் பாதுகாக்கும் படை வீரர்கள் நன்றிக்குரியவர்கள். பரந்த மனப்பான்மையுடன் கொடி நாள் நிதி அளிப்போம். படை வீரர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் என்றும் துணை நிற்போம்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### மாரடைப்பால் சேதம்அடைந்த இதயத் திசுக்களை சீர்செய்ய, 'நுண் ஊசிப் பட்டை'



1. மாரடைப்பால் சேதம்அடைந்த இதயத் திசுக்களை சீர்செய்ய, 'நுண் ஊசிப் பட்டை' ஒன்றை டெக்சாஸ் பல்கலை உருவாக்கியுள்ளது. பட்டையை இதயத்தின் மேல் ஒட்டியதும், 'ஐ.எல்., -4' எனும் புரதத்தை திசுக்களில் பாய்ச்சிவிட்டு நுண் ஊசிகள் கரைந்துவிடும். விலங்கு சோதனைகளில், சேதமடைந்த இதயத் திசுக்கள் குணமடைந்தன.

2. செர்னோபில் அணு உலையின் இடிபாடுகளில் வளரும் ஒரு கருப்பு பூஞ்சை, கதிர்வீச்சையே உணவாகக் கொண்டு வளர்கிறது. அதிகளவு 'மெலனின்' கொண்ட இந்தப் பூஞ்சைகள், கதிர்வீச்சை உயிரியல் ஆற்றலாக மாற்றுகின்றன.

3. பாக்டீரியாக்களை ஆன்டிபயாடிக் மருந்து மூலம் கொல்லாமல், முட்களால் கிழித்துக் கொல்லும் பொருளை ஸ்வீடனின் சால்மெர்ஸ் பல்கலை உருவாக்கியுள்ளது. அப்பொருள், உலோகம், கரிமம் என ஈரடுக்கால் ஆனது. அதன் மேற்பரப்பில் உள்ள முட்கள், அதன் மீது அமரும் கிருமிகளைத் துளைத்து அழிக்கின்றன. இதனால், மருந்து இல்லாமலேயே பாக்டீரியாக்கள் அழிக்கப்படுகின்றன.

4. மூளைக் கட்டியை அழிக்க, மூக்கு வழியாக செலுத்தப்படும் தங்கத் துகள் நானோ மருந்தை, வாஷிங்டன் பல்கலை உருவாக்கியுள்ளது. இது கட்டிகளை அழிப்பதோடு நீண்டகால எதிர்ப்பு சக்தியையும் தருகிறது என்பது எலிகளிடம் நடந்த சோதனையில் உறுதியாகியுள்ளது.

5. லேசர்கள் மற்றும் சூரிய மின்பலகைகளின் செயல்திறனைப் பன்மடங்கு அதிகரிக்க, 'பெரோவ்ஸ்கைட்' படிகங்களை நானோ அளவில் அடுக்குகளாக அமைக்கும் முறையை ஆய்வாளர்கள் முன்னெடுத்துள்ளனர். மிக மெல்லிய இந்த அடுக்குகளை துல்லியமாகவடிவமைப்பதன் மூலம், அடுத்ததலைமுறை ஒளியியல் கருவிகளை உருவாக்கலாம்.

## மின் விபத்தில் சிக்கி உயிரிழப்போர் குடும்பத்துக்கு ஒரே நாளில் இழப்பீடு: பொறியாளர்களுக்கு மின்வாரியம் அறிவுறுத்தல்




**சென்னை, டிச.9:**

தமிழகத்தில் மின்விபத்துகளில் சிக்கி உயிரிழப்போரின் குடும்பத்துக்கு ஒரே நாளில் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மின்வாரிய தலைமைப் பொறியாளர்களுக்கு மின்வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு மின்வாரியம் நுகர்வோர்க்கு மின்சாரத்தை விநியோகம் செய்து வருகிறது. அனைத்து நுகர்வோருக்கும் முறையாக மின்சாரம் கொண்டு சேர்க்கும் வகையில், சென்னையில் நிலத்துக்கு அடியில் புதைவடங்களாகவும், மற்ற இடங்களில் மின் கம்பங்கள் வாயிலாகவும் மின் விநியோகம் செய்யப்படுகிறது. இதனிடையே, மழைக் காலங்களில் மின் கம்பிகள் அறுந்து விழுந்தும், நிலத்துக்கு அடியில் உள்ள கேபிள்களில் இருந்து மின்கசிவு ஏற்பட்டும் சில நேரங்களில் பாதிப்புகள் நேரிடுகின்றன. இதன் மூலம் சில நேரங்களில் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. இந்நிலையில், மின் விபத்து காரணமாக உயிரிழப்போரின் குடும்பத்துக்கு, ரூ.10 லட்சம், இரு கைகள், கால்கள், கண்களை இழந்தால் ரூ.3 லட்சம், ஒரு கை, கால், கண்ணை இழந்தால் ரூ.1.50 என லட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இந்த இழப்பீடுகளை, மண்டல தலைமைப் பொறியாளரே வழங்கலாம். இருப்பினும், இழப்பீடு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாகப் பாதிக்கப்பட்டோர் தரப்பில் இருந்து தொடர்ந்து புகார்கள் வந்தன. இந்த விவகாரம் தொடர்பாக, அண்மையில் மின் வாரிய உயரதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். அப்போது, மின் விபத்து காரணமாக உயிரிழந்தார் என்பதை உறுதி செய்ததும், விதிமுறைகளைப் பின்பற்றி, பாதிக்கப்பட்டவரின் குடும்பத்துக்கு ஒரே நாளில் இழப்பீடு வழங்குமாறும், அதிகபட்சம் 48 மணி நேரத்துக்குள் இழப்பீட்டு வழங்குமாறும் தலைமைப் பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் 6 நாட்கள் மிதமான மழை பெய்யும்

**சென்னை, டிச.9:**

தமிழகத்தில் நேற்று (டிச. 8) முதல் 6 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசைக் காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக இன்றும், நாளையும் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 10 முதல் 13-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமானமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (டிச.8) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். வட தமிழக கடலோரப் பகுதிகளில் வரும் 9-ம் தேதியும், தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் 10-ம் தேதியும் மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் சூறாவளிக் காற்று வீசக் கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டம் மீமிசலில் 4 செ.மீ. மழை பெய்துள்ளது.

# அமலாக்கத் துறையின் ரகசிய கடிதம் வெளியான விவகாரம்: சிபிசிஐடி விசாரணைக்கு டிஜிபி உத்தரவு



**சென்னை, டிச.9:**

தமிழக டிஜிபிக்கு அமலாக்கத்துறை எழுதிய ரகசிய கடிதம் வெளியான விவகாரம் சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது.

திருச்சியை சேர்ந்த வழக்கறிஞர் பரஞ்சோதி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் அண்மையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு விசாரணைக்காக கடந்த மாதம் 26-ம் தேதி ஆஜரானபோது, மருது சேனையின் தலைவர் ஆதிநாராயணன் தாக்கல் செய்த பொதுநல மனு விசாரணைக்கு வந்தது.

அவர் தனது மனுவில் தமிழக டிஜிபிக்கு அமலாக்கத்துறை அனுப்பிய ரகசிய கடிதத்தின் நகலை இணைத்து, அந்த கடிதத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யக் கோரியிருந்தார். ஆதி நாராயணன் என்பவர் மீது தமிழகத்தில் பல்வேறு காவல் நிலையங்களில் குற்ற வழக்குகள் உள்ளது.

டிஜிபிக்கு அனுப்பிய ரகசிய கடிதம் அவருக்கு எப்படி கிடைத்தது என்பது புதிராக உள்ளது. அந்த வழக்கு விசாரணையின் போது நீதிபதிகளே மனுதாரருக்கு அமலாக்கத் துறையின் கடிதம் எப்படி கிடைத்தது என கேள்வி எழுப்பினர்.

நடவடிக்கை எடுக்கவில்லை: எனவே, டிஜிபிக்கு அமலாக்கத் துறை அனுப்பிய ரகசிய கடிதம் மனுதாரருக்கு எவ்வாறு கிடைத்தது என்பது விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

இந்த ரகசிய கடிதத்தை மனுதாரருக்கு வழங்கிய அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சியினர், உதவிய வழக்கறிஞர்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும். இது தொடர்பாக டிஜிபிக்கு மனு அனுப்பினேன் நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய நபருக்கு அமலாக்க துறையின் ரகசிய கடிதம் எப்படி கிடைத்தது என்பது குறித்து விசாரிக்கவும், அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி எஸ்.ஸ்ரீமதி முன்பு விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், அமலாக்கத் துறையின் ரகசிய கடிதம் வெளியான விவகாரத்தில் மத்திய, மாநில அரசு அதிகாரிகள், வழக்கறிஞர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு முதல்கட்ட விசாரணை தொடங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.




# க்ரைம் கார்னர்

## நாகர்கோவிலில் பெண் குழந்தையை கடத்திய நபர் கைது - 3 மணி நேரத்தில் மீட்ட போலீஸ்!

**நாகர்கோவில், டிச.9:**

மத்திய பிரதேச மாநிலம் போபால் பகுதியை சேர்ந்தவர் ரஞ்சன் (22). இவரது மனைவி முஸ்கான் (19). இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் தங்கி பலூன் வியாபாரம் செய்து வருகின்றனர். தற்போது கோட்டாறு சவேரியார் ஆலய திருவிழாவுக்காக குமரி மாவட்டம் வந்திருந்தனர். விழா முடிந்து நேற்று முன்தினம் மீண்டும் ஊருக்கு செல்வதற்காக மாலையில் நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலைய பிளாட்பாரத்தில் ரஞ்சன், அவரது மனைவி மற்றும் குழந்தைகள் அமர்ந்து இருந்தனர்.

அப்போது ஆட்டோ ஓட்டுநர் ஒருவர் அந்த பகுதிக்கு வந்து ரஞ்சனுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது குழந்தை சாரா (3) திடீரென அழுததால் ஆட்டோ ஓட்டுநர் குழந்தைக்கு உணவு வாங்கி கொடுப்பதாக கூறி விட்டு குழந்தையை தூக்கி சென்று விட்டார். சுமார் ஒரு மணி நேரமாகியும் குழந்தையை காணாததால் சந்தேகம் அடைந்த ரஞ்சன் கோட்டாறு காவல் நிலையத்தில் புகார் செய்தார்.

குமரி மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் உத்தரவின் பேரில் உடனடியாக 5 தனிப் படைகள் அமைக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் போலீஸார் உஷார் படுத்தப்பட்டனர். கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்த போது, ரயில் நிலையத்திலிருந்து குழந்தையை தூக்கிக் கொண்டு சென்ற ஆட்டோ ஓட்டுநர் குழந்தையுடன் தனது ஆட்டோவில் செல்வது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அந்த ஆட்டோவின் பதிவெண்ணை வைத்து விசாரித்ததில் குழந்தையை தூக்கி சென்றது நாகர்கோவில் கோட்டாறு பகுதியை சேர்ந்த யோகேஷ் குமார் (32) என்பது தெரிய வந்தது. உடனடியாக சைபர் கிரைம் மூலம் போலீஸார் யோகேஷ்குமாரின் செல்போன் மூலம் அவர் இருக்கும் இடத்தை கண்டறிந்தனர்.

பார்வதிபுரம் பகுதியில் உள்ள ஆலம்பாறை என்ற காட்டுப்பகுதியில் அவர் இருப்பது தெரிய வரவே சுமார் 50 போலீஸார் அந்த காட்டுப்பகுதி முழுவதும் தேடியதில் குழந்தையுடன் புதருக்குள் யோகேஷ் குமார் பதுங்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரை சுற்றி வளைத்து பிடித்து குழந்தையை மீட்டனர்.

உடனடியாக மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு சென்று பரிசோதித்தனர். யோகேஷ்குமாரை கோட்டாறு போலீஸார் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

## இணை தயாரிப்பாளரை அடுத்து போதைப் பொருள் வழக்கில் சினிமா தயாரிப்பாளர் கைது

**சென்னை, டிச.9:**

போதைப் பொருட்கள் விற்பனை, கடத்தல் மற்றும் பதுக்கலுக்கு எதிரான நடவடிக்கையை சென்னை போலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். இதன் தொடர்ச்சியாக திருமங்கலம் போலீஸாருடன் சென்னை போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு போலீஸார் கடந்த 19-ம் தேதி திருமங்கலம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கண்காணித்தனர்.

குறிப்பாக திருமங்கலத்தில் உள்ள பார்க் ரோடு பகுதியில் கண்காணித்தபோது அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நின்றிருந்த பாடியைச் சேர்ந்த தியானேஷ்வரன் (26) என்பவரைப் பிடித்து விசாரித்தனர். அவரிடம் எல்எஸ்டி எனும் ஸ்டாம்பு வடிவிலான போதைப் பொருட்கள் இருந்தது.

இதனையடுத்து அந்த போதை ஸ்டாம்ப்களையும் 2 செல்போன்களையும் போலீஸார் பறிமுதல் செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் கிடைத்த தகவலின் அடிப்படையில் தேனாம்பேட்டையை சேர்ந்த சினிமா இணை தயாரிப்பாளர் முகமது மஸ்தான் சர்புதீன் (44), முகப்பேரைச் சேர்ந்த சீனிவாசன் (25), வளசரவாக்கத்தைச் சேர்ந்த சரத் (30) ஆகிய 3 பேரைக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து ரூ.27.91 லட்சம், ஓஜி எனப்படும் உயர் ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டன.

சர்புதீன் சினிமா பிரபலங்கள், மாடலிங் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவதற்காக போதைப் பொருட்களை வைத்திருந்தாரா? இவரது பின்னணியில் வேறு யாரேனும் உள்ளனரா? என போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருமண மண்டபத்தில் நகை, பணம் திருடியவர் கைது

**தஞ்சாவூர், டிச.9:**

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி சாத்தனூர் முக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் வ.பாஸ்கரன்(49). இவரது சகோதரியின் மகள் திருமணம், தஞ்சையில் உள்ள ஒரு மண்டபத்தில் கடந்த நவ.30 ஆம் தேதி நடைபெற்றது. இதற்காக பாஸ்கரன் தனது குடும்பத்தினருடன் வந்திருந்தார்.

மண்டபத்தின் ஒரு அறையில் நகை மற்றும் பணத்தை பையில் வைத்திருந்தார். பின்னர் அந்த பையை அங்கேயே வைத்துவிட்டுச் சென்றார். திருமணம் முடிந்து வந்து பார்த்தபோது, அந்த பையில் இருந்த பொருட்களை காணவில்லை. அதிர்ச்சியடைந்து பல இடங்களில் தேடி பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதுகுறித்து பாஸ்கரன் தஞ்சை கிழக்கு காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன் பேரில் காவல்துறையினர் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தினர். இதில், திருவாரூர் மாவட்டம் கோவில்வெண்ணியைச் சேர்ந்த புருஷோத்தமன் (56) என்பவர் பையிலிருந்த அரை பவுன் நகை மற்றும் ரூ.80 ஆயிரம் ரொக்கத்தை திருடியது தெரியவந்தது. இதையடுத்து, காவல்துறையினர் புருஷோத்தமனை கைது செய்தனர்.

# டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிவை ரிசர்வ் வங்கி கண்காணிக்கிறது: மத்திய அரசு

**புதுடெல்லி, டிச.9:**

டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு குறைந்து வரும் விவகாரம் குறித்து ரிசர்வ் வங்கி கண்காணித்து வருகிறது என்று மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்ற மக்களவையில் இன்று காலை கேள்வி நேரம் தொடங்கியதும், திமுக உறுப்பினர் அருண் நேரு இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப்பினார். அவர், "டாலருக்கு நிகரான ரூபாயின் விலை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. ரூபாயின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருகிறது. இதைத் தடுக்க, சரியாக நிர்வகிக்க மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?" என்று கேள்வி எழுப்பினார்.

அருண் நேருவின் கேள்விக்குப் பதில் அளித்த பங்கஜ் சவுத்ரி, "டாலரோடு ஒப்பிடும்போது சந்தை மதிப்பில் ரூபாய் வீழ்ச்சி அடைந்திருக்கலாம். இவ்விஷயத்தில் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசு இதில் தலையிட முடியாது. சிறப்பு நேரங்களில் இந்திய ரிசர்வ் வங்கி இதை கண்காணித்து வருகிறது." எனத் தெரிவித்தார்.

இந்திய இளைஞர் சக்தியை நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த அரசு எத்தகைய திட்டங்களை கொண்டிருக்கிறது என்ற மலப்புரம் எம்.பி.யின் கேள்விக்கு பதில் அளித்த மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியா, "நமது நாட்டின் மக்கள் தொகையில் 65% பேர் 30 வயதுக்கு குறைவானவர்களாக இருக்கிறார்கள். மக்கள் தொகை நாட்டின் வளர்ச்சிக்கு சாதகமாக இருக்கிறது. அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்தைச் சாராத ஒரு லட்சம் தலைவர்களை உருவாக்க வேண்டும் என்று பிரதமர் மோடி கூறி இருக்கிறார். அவர்கள் அரசியலிலும் ஈடுபடலாம் என பிரதமர் சொல்லி இருக்கிறார்.

என்எஸ்எஸ், என்சிசி உள்ளிட்டவற்றில் 2 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் நாட்டை புரிந்து கொள்வதற்காக பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கே தங்கி அவர்கள் அந்தந்த பகுதிகளின் கலை, கலாச்சாரம், மக்களின் வாழ்க்கை முறை குறித்து அறிந்து கொள்கிறார்கள். இளைஞர்களுக்காக பல இடங்களில் வினாடி வினா போட்டிகளும் நடத்தப்படுகின்றன." என தெரிவித்தார்.

ஜம்மு பிராந்தியத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் டோக்ரி மொழியை வளர்க்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த மத்திய கல்வித்துறை இணை அமைச்சர் சுகந்த மஜூம்தார், "தாய்மொழி வளர்ச்சிக்காக புதிய கல்விக் கொள்கையின் கீழ் பல்வேறு புதிய அம்சங்களை நாங்கள் கொண்டு வந்துள்ளோம். ஆரம்பக்கல்விக்கான புத்தகங்கள் என்சிஇஆர்டி மூலம் பதிப்பிக்கப்பட்டுள்ளன. 22 பட்டியல் மொழிகளிலும் இந்த பாடத்திட்டங்கள் உள்ளன. அதோடு, பிரத்யேகமாக தொலைக்காட்சி சேனலும் நடத்தப்படுகிறது. ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இந்த வசதிகள் உள்ளன. இதை எட்டாம் வகுப்பு வரை நீட்டிக்க இருக்கிறோம். பயிற்சி மொழி என்பது நிச்சயமாக உள்ளூர் மொழியாக, தாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும். இதில் அக்கறை காட்டப்பட்டுள்ளது." என தெரிவித்தார்.

## பாலியல் வழக்கில் நடிகர் திலீப் விடுவிப்பை எதிர்த்து மேல்முறையீடு: கேரள அரசு முடிவு

**எர்ணாகுளம், டிச.9:**

பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய கேரள நடிகை பாலியல் துன்புறுத்தல் வழக்கில் இருந்து நடிகர் திலீப் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய இருப்பதாக கேரள அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கேரள சட்ட அமைச்சர் பி.ராஜீவ், "நடிகை பாலியல் வன்கொடுமை மற்றும் கடத்தல் வழக்கில் எர்ணாகுளம் முதன்மை அமர்வு நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை எதிர்த்து கேரள அரசு மேல்முறையீடு செய்யும். இது தொடர்பாக முதல்வர் பினராயி விஜயனிடம் ஏற்கெனவே பேசி உள்ளேன். தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் அதன் பின்னணியில் உள்ள சதித் திட்டத்தை ஏன் நிறுவ முடியவில்லை என்பது குறித்து தீர்ப்பை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

இந்த வழக்கில் அரசு முன்வைத்த வாதங்கள் ஐந்து புத்தக தொகுப்புகளாக தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த பக்கங்கள் 1,512. ஆனால், தீர்ப்பு இந்த ஆவணங்களுடனோ அல்லது விசாரணையுடனோ ஒத்துப்போகவில்லை.

மாநில அரசு எப்போதும் பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக நின்றுள்ளது. பினராயி விஜயன் முதல்வராக இல்லாதிருந்தால், இடது ஜனநாயக முன்னணி ஆட்சியில் இல்லாதிருந்தால் விசாரணை இத்தனை தீவிரமாக நடந்திருக்காது. காவல் துறையினர் இந்த வழக்கை விடா முயற்சியுடன் மேற்கொண்டனர். அரசு தரப்பும், தனது வாதத்தை நீதிமன்றத்தில் வலுவாக வைத்தது" எனத்தெரிவித்துள்ளார்.

## உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி டெல்லி வருகிறார்



**புதுடெல்லி, டிச.9:**

கடந்த 2022-ம் ஆண்டு பிப்ரவரி முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்த போருக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். ரஷ்ய அதிபர் புதின் இந்தியா வந்தபோது உக்ரைன் போர் நிறுத்தம் குறித்தும் பிரதமர் மோடி பேசியுள்ளார். இந்நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வரும் ஜனவரியில் டெல்லி வருகிறார். அவரது பயண தேதியை உறுதி செய்ய இந்திய, உக்ரைன் வெளியுறவுத் துறை அதிகாரிகள் கடந்த சில வாரங்களாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

## "ஒரு முன்மாதிரி நடவடிக்கையாக இருக்கும்" இண்டிகோ விவகாரத்தில் மத்திய அரசு உறுதி!

**புதுடெல்லி, டிச.9:**

"அரசின் விதிகளை பின்பற்றாத எந்தவொரு விமான நிறுவனம் மீதும் நாங்கள் மிகவும் கடுமையான நடவடிக்கை எடுப்போம். நாங்கள் எடுக்கும் நடவடிக்கை ஒவ்வொரு விமான நிறுவனத்திற்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும். பயணிகளின் பாதுகாப்பில் எந்த சமரசமும் இருக்காது" என்று மாநிலங்களவையில் பேசிய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம்மோகன் நாயுடு கூறினார்.

விமானிகள் பற்றாக்குறை மற்றும் பல்வேறு காரணங்களால் நாட்டின் மிகப்பெரிய இண்டிகோ விமான நிறுவன சேவை கடந்த ஒரு வாரமாக கடுமையாக பாதித்தது. இதனால் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. இதனால் பயணிகள் கடும் சிரமத்துக்கு ஆளாகினர். பாதிக்கப்பட்ட விமான செயல்பாடுகளை மீட்டெடுக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் இன்று மாநிலங்களவையில் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் ராம்மோகன் நாயுடு பேசுகையில், "நூற்றுக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டதற்கும், ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கித் தவிப்பதற்கும் வழிவகுத்த குழப்பம், புதிய பயணிகள் பாதுகாப்பு விதிமுறைகள் அமலுக்கு வந்த பிறகு இண்டிகோ நிறுவனத்தில் ஏற்பட்ட உள் நெருக்கடியின் விளைவாகும்.

விமானிகள் மற்றும் பயணிகள் மீது நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். இதனை அனைத்து விமான நிறுவனங்களுக்கும் நாங்கள் தெளிவுபடுத்தினோம். இண்டிகோ நிறுவனம் விமானக் குழுவினர் மற்றும் பணியாளர் பட்டியலை நிர்வகிக்க வேண்டும். பயணிகள் நிறைய சிரமங்களை எதிர்கொண்டனர். நாங்கள் இதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. நாங்கள் இதுகுறித்து கடுமையான நடவடிக்கை எடுப்போம்.

நாங்கள் எடுக்கும் நடவடிக்கை ஒவ்வொரு விமான நிறுவனத்திற்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும். இந்த விஷயத்தில் ஏதேனும் மீறல்கள் இருந்தால், நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இந்த விஷயத்தில் அரசாங்கம் முழுமையான விசாரணையைத் தொடங்கியுள்ளது.

மென்பொருள் பிரச்சினை குறித்தும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இந்தத் துறையில் தொடர்ச்சியான தொழில்நுட்ப மேம்பாடு நடைபெறுகிறது. நாட்டில் விமானப் போக்குவரத்துத் துறைக்கு உலகளாவிய தரநிலைகளை வழங்குவதே அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையாகும்.

இண்டிகோவில் உள்ள சிக்கல்கள் பணியாளர் பட்டியல் மற்றும் உள் செயல்பாட்டுத் திட்டமிடலுடன் தொடர்புடையவை. இதை விமான நிறுவனம் தினசரி அடிப்படையில் நிர்வகிக்க வேண்டும். FTTL வழிகாட்டுதல்கள் தொடர்பாக அனைத்து நிறுவனங்களுடனும் முழுமையான ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளது. பயணிகளின் பாதுகாப்பில் எந்த சமரசமும் இருக்காது. அரசின் விதிகளை பின்பற்றாத எந்தவொரு நிறுவனம் மீதும் நாங்கள் மிகவும் கடுமையான நடவடிக்கை எடுப்போம்." என்று அவர் கூறினார்.

## "வந்தே மாதரம்... எந்த கட்சிக்கும் சொந்தமானது அல்ல!" - மக்களவையில் அகிலேஷ் யாதவ் ஆவேசம்

**புதுடெல்லி, டிச.9:**

வந்தே மாதரத்தின் 150-வது ஆண்டு விழா குறித்த மக்களவை சிறப்பு விவாதத்தில் பேசிய சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், "ஆளும் பாஜக அனைத்தையும் அரசியல் ஆதாயத்திற்காக சொந்தமாக்கிக் கொள்ள முயற்சிக்கிறது.



'வந்தே மாதரம்' சுதந்திரப் போராட்டத்திற்கும், இந்திய மக்களுக்கும் சொந்தமானது, எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமானது அல்ல. நாட்டின் மில்லியன் கணக்கான மக்களை விழித்தெழச் செய்யும் பாடலை வழங்கியவர் பங்கிம் சந்திர சாட்டர்ஜி. 'வந்தே மாதரம்' பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான ஒரு பேரணியாக மாறியது, லட்சக்கணக்கான மக்களை உத்வேகப்படுத்தியது. இந்தப் பாடல் விடுதலைப் போராட்டம் சாதாரண மக்களைச் சென்றடைய உதவியது. 1905 மற்றும் 1908-க்கு இடையில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தப் பாடலைத் தடை செய்தது. வகுப்பறைகளில் இப்பாடலை பாடியதற்காக வங்காளத்தில் பள்ளி மாணவர்களை சிறையில் அடைத்தது. ஆனால் புரட்சியாளர்கள் தடையை ஏற்கவில்லை; அவர்கள் அந்தப் பாடலை தங்கள் இதயங்களிலும் மனங்களிலும் உயிர்ப்புடன் வைத்திருந்தனர், மேலும் மக்கள் மத்தியில் இயக்கத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றனர்" என்றார்.

# "இந்துக்கள் முதலில் மதத்தைப் பாதுகாக்க கற்றுக்கொள்ள வேண்டும்" – பவன் கல்யாண்

**உடுப்பி, டிச.9:**

"இந்துக்கள் முதலில் மதத்தைப் பாதுகாக்க கற்றுக்கொள்ள வேண்டும். யாரும் நம் மதத்தை தாக்கத்துணியாதபடி குரல் எழுப்ப வேண்டும்." என்று ஆந்திரப் பிரதேச துணை முதல்வர் பவன் கல்யாண் வலியுறுத்தினார்.



கர்நாடக மாநிலம் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணர் கோயிலில் நேற்று மாலை பவன் கல்யாண் தரிசனம் செய்தார். இதனைத் தொடர்ந்து அக்கோயிலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர், "சனாதன தர்மம் ஒருபோதும் குருட்டு நம்பிக்கையின் சின்னம் அல்ல; அது மனிதகுலத்திற்கு ஒரு அறிவியல் ஞானப் பாதையை வழங்கிய ஆன்மிக அறிவியல். மற்றவர்கள் நம் தர்மத்தைத் தாக்குகிறார்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, முதலில் அதைப் பாதுகாக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், யாரும் நம்மைத் தாக்கத் துணியக்கூடாது என்பதற்காக நம் குரலை உயர்த்த வேண்டும்.

தமிழ்நாட்டில், இந்துக்கள் தங்கள் தர்மத்தைப் பின்பற்றுவதற்காக சட்டப் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. மேலும், இதுபோன்ற சூழ்நிலைகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க ஒவ்வொரு இந்துவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

இந்திய அரசியலமைப்பின் முகவுரையில், வழிகாட்டுதல் கோட்பாடுகள் அடங்கிய பக்கம், கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு கீதையை உபதேசிப்பதை சித்தரிக்கிறது.

அந்த விளக்கம் வெறும் அலங்கார வார்த்தைகள் அல்ல. அரசியலமைப்பின் மதிப்புகள், சமூக நீதி, பொறுப்பு, சமத்துவம், நலன் மற்றும் தர்மத்தை நிலைநிறுத்துதல் ஆகியவை கீதையின் சாரத்தில் வேரூன்றியுள்ளன என்ற செய்தியை இது வெளிப்படுத்துகிறது.

சனாதன தர்மம் நல்லொழுக்கத்துக்கான திசைகாட்டி; அரசியலமைப்பு நீதிக்கான திசைகாட்டி. இரண்டும் ஒரே இலக்கை நோக்கியே செல்கின்றன." என்றார்

## விளையாட்டு செய்திகள்

### ஆடவர் இளையோர் உலகக்கோப்பை ஹாக்கி: நெதர்லாந்து அபார வெற்றி

**சென்னை, டிச.9:**

21 வயதிற்குட்பட்டோருக் கான ஆடவர் இளையோர் உலகக்கோப்பை ஹாக்கி தொடரின், 14ஆவது சீசன் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னை மற்றும் மதுரையில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், விடுமுறை நாளான ஞாயிறன்று கிராஸ் ஓவர் ஆட்டம் நடைபெற்றது. இதில் 4ஆவது இடத்திற்கு தகுதி பெற வேண்டிய முதல் சுற்று ஆட்டத்தில் பெல்ஜியம் - பிரான்ஸ் அணிகள் (சென்னை ராதாகிருஷ்ணன் மைதானத்தில்) மோதின.

இந்த ஆட்டத்தில் பெல்ஜியம் அணி 3-2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று 4ஆவது இடத்திற்கு தகுதி பெற வேண்டிய இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது. தோல்வி கண்ட பிரான்ஸ் அணி 7ஆவது இடத்திற்கு தகுதி பெற வேண்டிய இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது. சென்னை ராதாகிருஷ்ணன் மைதானத்தில் நடைபெற்ற மற்றொரு கிராஸ் ஓவர் ஆட்டத்தில் (4ஆவது இடத்திற்கு) நெதர்லாந்து - நியூஸிலாந்து அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் 6-2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அபார வெற்றி பெற்று 4ஆவது இடத்திற்கு தகுதி பெற வேண்டிய இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது. தோல்வி கண்ட நியூஸிலாந்து அணி 7ஆவது இடத்திற்கு தகுதி பெற வேண்டிய இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது. 4ஆவது இடத்திற்கான ஆட்டத் திற்கு நெதர்லாந்து, பெல்ஜியம் பலபரிட்சை நடத்துகிறது.

### மகளிர் இளையோர் உலகக்கோப்பை ஹாக்கி: பெல்ஜியம் மகளிர் அணி

**சிலி, டிச.9:**

மகளிர் இளையோர் உலகக் கோப்பை ஹாக்கி தொடரின், 11ஆவது சீசன் தென் அமெரிக்க நாடான சிலியின் தலைநகர் சாண்டி யாகோவில் நடைபெற்று வருகிறது. டிசம்பர் 1 முதல் 13ஆம் தேதி வரை நடைபெறும் இந்த தொடரில் இந்தியா மற்றும் போட்டியை நடத்தும் சிலி உட்பட 24 நாடுகள் பங்கேற்றுள்ளன.

இந்நிலையில், இந்த தொடரின் 7ஆவது நாளான ஞாயிறன்று நடை பெற்ற 34ஆவது லீக் ஆட்டத்தில் பெல்ஜியம் - ஜிம்பாப்வே அணிகள் (குரூப் பி) மோதின. தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பெல்ஜியம் அணி முதல் கால்பகுதியில் 7 கோல்கள், 2ஆவது கால் பகுதியில் 5 கோல்கள், 3ஆம் கால் பகுதியில் 6 கோல்கள் மற்றும் கடைசி கால் பகுதியில் 3 கோல்கள் என மொத்தம் 21 கோல்கள் அடித்து, 21-0 என்ற கணக்கில் மாபெரும் வெற்றியை ருசித்தது பெல்ஜியம் மகளிர் அணி. மேலும் மகளிர் இளையோர் உலகக்கோப்பை ஹாக்கி வரலாற்றில் அதிக கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அணி பெருமையையும் பெற்று பெல்ஜியம் புதிய வரலாறு படைத்தது. 35ஆவது லீக் ஆட்டத்தில் கனடா அணியை 9-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, ஸ்பெயின் அணி சூப்பர் (குரூப் இ) வெற்றியை ருசித்தது.

தொடர்ந்து நடைபெற்ற 36ஆவது லீக் ஆட்டத்தில் அர்ஜெண்டினா அணி 8-0 என்ற கோல் கணக்கில் (குரூப் பி) வேல்ஸ் அணியை வீழ்த்தியது.

### இந்திய வீராங்கனை பிரதிகாவுக்கு டெல்லி அரசு ரூ.1.5 கோடி பரிசு




**புதுடெல்லி, டிச.9:**

மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் சிறப்பாக விளையாடிய டெல்லி கிரிக்கெட் வீராங்கனை பிரதிகா ராவலுக்கு ரூ.1.5 கோடி பரிசு வழங்கப்படும் என்று டெல்லி முதல்வர் ரேகா குப்தா அறிவித்து உள்ளார்.

இந்தியா, இலங்கையில் கடந்த மாதம் நிறைவடைந்த ஐசிசி மகளிர் உலகக் கோப்பைத் தொடரில் இந்திய அணி கோப்பையைக் கைப்பற்றியது. இந்தப் போட்டித் தொடரில் 308 ரன்களைக் குவித்தார் பிரதிகா ராவல். மேலும் இந்தத் தொடரில் அதிக ரன்கள் எடுத்தவர்கள் பட்டியலில் நான்காவது இடத்தையும் அவர் பிடித்தார்.

வங்க தேசத்துக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்தில் விளையாடும்போது காயமடைந்த அவர், அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டியில் விளையாடவில்லை.

இந்நிலையில் மகளிர் உலகக் கோப்பை தொடரில் அபாரமாக விளையாடிய பிரதிகாவுக்கு முதல்வர் ரேகா குப்தா ரூ.1.5 கோடி பரிசு வழங்கப்படும் என நேற்று அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ரேகா குப்தா தனது எக்ஸ் தளப்பதிவில் கூறும்போது, "இன்று, முதல்வரின் 'ஜன் சேவா சதனில்' இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் திறமையான இளம் வீராங்கனை பிரதிகா ராவலை வரவேற்றோம்.

எங்கள் மகள் பிரதிகா, டெல்லிக்குப் பெருமை சேர்த்துள்ளார். விளையாட்டுக்கான அவரது அர்ப்பணிப்பு மற்றும் அவரது சிறப்பான ஆட்டத்தை அங்கீகரிக்கும் வகையில், டெல்லி அரசு அவருக்கு ரூ.1.5 கோடி பரிசு வழங்க உள்ளது" என்று பதிவிட்டுள்ளார்.

# கம்போடியா மீது தாய்லாந்து தாக்குதல்; மீண்டும் போர் பதற்றம்

**பாங்காக், டிச.9:**

தென்கிழக்கு ஆசிய பகுதியில் அமைந்த தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் இடையே நீண்டகால மோதல் போக்கு நிலவி வருகிறது. இரு நாடுகளின் எல்லையில் தா முயென் தாம் என்ற கோவில் அமைந்துள்ளது. இந்த கோவில் அமைந்துள்ள பகுதிக்கு இரு நாடுகளும் உரிமை கோருகின்றன. இதுதொடர்பாக கடந்த மே மாதம் இரு நாட்டு ராணுவ வீரர்களும் மோதி கொண்டனர். இதில் கம்போடியா ராணுவ வீரர் உயிரிழந்தார்.

இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையே போர் வெடித்தது. கடந்த ஜூலை மாதம் 24ம் தேதி முதல் 28ம் தேதி வரை நடந்த போரில் 48 பேர் உயிரிழந்தனர். இரு நாட்டு எல்லையில் இருந்தும் சுமார் 3 லட்சம்



மக்கள் வெளியேற்றப்பட்டனர். இந்த போரின்போது எல்லையில் கண்ணிவெடிகள் நிலத்தில் பதித்து வைக்கப்பட்டன. 5 நாட்கள் நடந்த போர் பேச்சுவார்த்தைக்குப்பின் முடிவுக்கு வந்தது. ஆனாலும், இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், கம்போடியா மீது தாய்லாந்து வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. எல்லையில் கம்போடியா முதலில் அத்துமீறி துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தியதாகவும் இதற்கு பதிலடியாகவே வான்வழி தாக்குதல் நடத்தியதாகவும் தாய்லாந்து தெரிவித்துள்ளது. கம்போடியா நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் உயிரிழந்ததாகவும், இதற்கு பதிலடி கொடுக்கப்பட்டதாகவும் தாய்லாந்து தெரிவித்துள்ளது. அதேவேளை, தாய்லாந்து நடத்திய தாக்குதலில் கம்போடியாவில் ஏற்பட்ட உயிரிழப்பு உள்ளிட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை. இந்த மோதலால் தாய்லாந்து, கம்போடியா இடையே மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## ஏஐ மூலம் போலீசாரை ஏமாற்ற நினைத்த இளம்பெண்

**வாஷிங்டன், டிச.9:**

அமெரிக்காவில் இளம்பெண் ஒருவர் தன்னை பாலியல் பலாத்காரம் செய்துவிட்டதாக போலீசாரிடம் புகார் அளித்துள்ளார்.

இன்று தொழில்நுட்பம் பெருகிவிட்டது. செயற்கை நுண்ணறிவு (ஏஐ) வருகைக்குப் பிறகு சமூக ஊடகங்களில் வெளியாகும் காணொளிகள் உண்மையா, பொய்யா என்று கண்டறிய முடியாத அளவுக்குச் சவாலாகி வருகின்றன. இன்று ஏஐ மூலம் நடக்காததை நடந்ததுமாறியாக நம்ப வைத்து ஒரு சிலர் ஏமாற்றி வருகின்றனர். இதை வைத்துக்கொண்டு குற்றங்களைப் புரியத் தொடங்கியிருக்கின்றனர். அந்தவகையில் அமெரிக்காவில் இளம்பெண் ஒருவர் போலீசில் புகார் அளித்தார். அதில் ஒருவர் தன்னை பாலியல் பலாத்காரம் செய்து விட்டதாக புகார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ப்ளோரிடாவில் தனது வீட்டு கதவை உடைத்துக் கொண்டு ஒருவர் உள்ளே வந்து, தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக போலீஸில் புகாரளித்தார் ஷினால்ட் (32) என்ற இளம்பெண்.

குற்றத்திற்கான ஆதாரங்கள் ஏதும் கிடைக்காத நிலையில், அவர் காட்டிய புகைப்படம் ஏஐஆல் உருவாக்கப்பட்டது என்பதை போலீசார் தீவிர விசாரணையில் கண்டறிந்துள்ளனர். மன உளைச்சலால் கவனத்தை ஈர்ப்பதற்காக இவ்வாறு செய்ததாக ஷினால்ட் போலீசாரிடம் ஒப்புக் கொண்டுள்ளார். அதனைதொடர்ந்து இதுபோன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என அந்த இளம்பெண்ணிடம் கண்டிப்புடன் தெரிவித்து அங்கிருந்து புறப்பட்டு சென்றனர்.

## ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 7.5 ஆக பதிவு

**டோக்கியோ, டிச.9:**

சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஜப்பான் நாட்டில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் கடல் பகுதியில் நேற்று இரவு 7.45 மணிக்கு (இந்திய நேரப்படி) நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.5 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்தன. இதனால், அதிர்ச்சியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்தனர்.

இந்த சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து அப்பகுதிக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. 60 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 41.05 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 142.37 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

## வங்காளதேச முன்னாள் பிரதமர் கலிதாஜியா சிகிச்சைக்காக லண்டனுக்கு அழைத்து செல்லப்படுகிறார்

**டாக்கா, டிச.9:**

வங்காளதேச முன்னாள் பிரதமர் கலிதா தச முன்னாள் ஜியா (வயது 80). இவரது உடல்நிலை பாதிக்கப்பட்டதையடுத்து தலைநகர் டாக்காவில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதற்கிடையே கலிதா ஜியாவை இங்கிலாந்தின் லண்டனுக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி அவர் நாளை ஏர்-ஆம்புலன்ஸ் மூலம் லண்டனுக்கு அழைத்து செல்லப்பட உள்ளார்.

இதுதொடர்பாக வங்காளதேச சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறும்போது ஏர்-ஆம்புலன்ஸ் விமானத்திற்கு நாளை காலை 8 மணிக்கு தரையிறங்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அன்று இரவு 9 மணிக்கு புறப்படும் நேரம் ஒதுக்கப் பட்டுள்ளது என்றார்.

இந்த விமானம், ஜெர்மனியை தளமாகக் கொண்ட எப்.ஏ.ஐ விமானக் குழுமத்திடமிருந்து வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

## உக்ரைன் போர் நிறுத்த திட்டத்தை ரஷியா ஏற்றுக்கொண்டுள்ளது; அமெரிக்க ஜனாதிபதி

**வாஷிங்டன், டிச.9:**

உக்ரைன், ரஷியா இடையே இன்று 1 ஆயிரத்து 383வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். போர் நிறுத்த திட்டம் தொடர்பாக 28 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை டிரம்ப் முன்மொழிந்துள்ளார். இந்த நிபந்தனைகளில் சிலவற்றை ஏற்க உக்ரைன் மறுத்து வருகிறது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம் உக்ரைன் - ரஷியா போர் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதகு பதில் அளித்த டொனால்டு டிரம்ப், போர் நிறுத்தம் தொடர்பாக ரஷிய அதிபர் புதின், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியிடம் பேசி வருகிறோம். போர் நிறுத்தம், அமைதி திட்டத்தை ரஷியா ஏற்றுக்கொண்டுள்ளது. அது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், இந்த திட்டத்தை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி புரிந்துகொள்ளவில்லை. அது எனக்கு ஏமாற்றம் தான்' என்றார்.

## ஜெர்மனியில் இளைஞர்களுக்கு கட்டாய ராணுவ சேவை - மசோதா நிறைவேற்றம்

**பெர்லின், டிச.9:**

உக்ரைன்-ரஷியா போருக்கு பிறகு ஐரோப்பிய நாடுகளில் ரஷிய டிரோன் நடமாட்டம் அதிகரித்துள்ளது. எனவே ரஷியாவின் அச்சுறுத்தலை சமாளிக்க ராணுவ பலத்தை பெருக்க அந்த நாடுகள் முடிவு செய்துள்ளன. அந்த வகையில் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களை ராணுவ சேவையில் இணைக்க ஜெர்மனி அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த சேவை ஆண்களுக்கு கட்டாயமாகவும், பெண்களுக்கு தன்னார்வ அடிப்படையிலும் இருக்கும். போர் ஏற்படும் காலங்களில் இவர்கள் ராணுவ சேவையில் ஈடுபடுத்தப்படுவர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் இதுதொடர்பான மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

இதன்மூலம் அடுத்த ஆண்டில் மேலும் 20 ஆயிரம் பேரை ராணுவத்தில் இணைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அங்கு ஏற்கனவே இருந்த கட்டாய ராணுவ சேவை முன்னாள் அதிபர் ஏஞ்சலா மெர்கல் ஆட்சியில் 2011-ம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சீன போர் விமானத்தை விரட்டியடித்த ஜப்பான் ராணுவம்

**டோக்கியோ, டிச.9:**

பசிபிக் கடற்பகுதியில் உள்ள ஒகினாவா தீவு அருகே ஜப்பானுக்கு சொந்தமான எப்-15 போர் விமானம் பயிற்சியில் ஈடுபட்டு கொண்டிருந்தது. அப்போது சீன கடற்படை கப்பலான லியோனிங்கில் இருந்து புறப்பட்ட ஜே-15 என்ற போர் விமானம் அதன் அருகே சென்றது. பின்னர் ரேடார் மூலம் ஜப்பான் விமானத்தை தாக்க முயன்றது.

இதனையடுத்து அங்கு விரைந்த ஜப்பானிய போர் விமானங்கள் அதனை விரட்டியடித்தன. சீனாவின் இந்த அத்துமீறலுக்கு ஜப்பான் ராணுவமந்திரி



ஷின்ஜிரோ கொய்சுமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆனால் சீனா தரப்பில் இதுவரை எந்தவொரு கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. தைவான் விவகாரத்தில் தலையிட்டதாக கூறி ஜப்பானுக்கு சீனா சமீபத்தில் எதிர்ப்பு தெரிவித்து இருந்தது. இதனால் இரு நாடுகளின் உறவில் விரிசலுக்கு பிறகு தற்போது மீண்டும் மோதல் ஏற்பட்டு உள்ளது.

## மத்திய தரைக்கடலில் அகதிகள் படகு கவிழ்ந்து 18 பேர் பலி

**கிரீஸ், டிச.9:**

பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை தேடி ஆப்ரிக்கா, எகிப்து. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உள்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக கடல் வழியாக சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர். இந்த பயணத்தின் போது விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவங்களும் அரங்கேறி வருகிறது.

இந்தநிலையில், மத்திய தரைக்கடல் பகுதியில் ஒரு படகில் அகதிகள் சிலர் கிரீஸ் நாட்டின் தீவான கிரீட்டுக்கு சென்றனர். அப்போது அவர்களது படகு கடலில் கவிழ்ந்து மூழ்கியது. இதில் 18 பேர் பலியானார்கள்.

படகு மூழ்கி கிடப்பதை அந்த வழியாக சென்ற துருக்கி கப்பலில் இருந்தவர்கள் பார்த்து மீட்புக்குழுவினருக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் அங்கு வந்து கடலில் தத்தளித்து கொண்டிருந்த 2 பேரை மீட்டனர். பலியானவர்களின் உடல்களை மீட்டனர். இந்த அகதிகள் படகு எங்கிருந்து வந்தது என்பது தெரியவில்லை.

## ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீ: 40 வீடுகள் எரிந்து நாசம், தீயணைப்பு வீரரும் பலி

**நியூசௌத்வேல்ஸ், டிச.9:**

ஆஸ்திரேலியாவின் நியூ சௌத் வேல்ஸ் மாகாணத்தில் பற்றி எரியும் காட்டுத் தீக்கு 40 வீடுகள் எரிந்து நாசமாகின.

ஆஸ்திரேலியாவின் நியூ சௌத் வேல்ஸ் மாகாணத்தில் மொத்தம் 52 இடங்களில் காட்டுத் தீ எரிந்துகொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்பது இன்னும் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன.

கடந்த வார இறுதியில் இந்த மாகாணத்தில் 20 வீடுகள் காட்டுத் தீயில் எரிந்து நாசமாகின.

மேலும் டால்பின் சாண்ட்ஸ் கடலோரப் பகுதியில் காட்டுத் தீயால் 19 வீடுகள் எரிந்தன. இங்கு காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்ட போதிலும் சாலை இன்னும் மூடப்பட்டிருப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு புலாடெலா நகருக்கு அருகே காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த தீயணைப்பு வீரர் மீது மரம் விழுந்தது.

இந்த சம்பவத்தில் அவர் பலியானார். கடந்த வாரம் மட்டும் இப்பகுதியில் காட்டுத் தீக்கு 3,500 ஹெக்டேர் வனப்பகுதியும் நான்கு வீடுகளும் அழிந்து விட்டன என்று கிராமப்புற தீயணைப்பு சேவை ஆணையர் ட்ரென்ட் கர்டின் தெரிவித்தார்.

இந்தத் தீயை அணைக்க இன்னும் பல நாள்களுக்குத் தீயணைப்பு வீரர்கள் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காசாவில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் தினமும் மீறுகிறது: துருக்கி, எகிப்து குற்றச்சாட்டு

**தோஹா,டிச.8:**

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே காசாவில் 2 ஆண்டுகளாக நடந்து வந்த போர், சர்வதேச சமூகத்துக்கு பெரும் மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தியது. இஸ்ரேல் ராணுவம் நடத்திய கொடூர தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான அப்பாவி பாஸ்தீனர்கள் பலியானதுடன், உயிருடன்இருப்பவர்களுக்கும் உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் பட்டினிச்சாவும் அதிகரித்தன. எனினும் நீண்ட இழுபறிக்குப்பிறகு அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் 20 அம்ச திட்டத்தை ஏற்று இரு தரப்பும் போர் நிறுத்தம் செய்ய ஒப்புக்கொண்டன. பின்னர் டிரம்ப் தலைமையில்



எகிப்தில் நடந்த அமைதி மாநாட்டில் முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தமும் கையெழுத்தானது. காசாவில் கடந்தஅக்டோபர்தொடக்கத்தில் இந்த போர் நிறுத்தம் அமலுக்கு வந்தபோதும், அங்கே போர் மேகங்கள் முழுமையாக விலகவில்லை. துப்பாக்கிச்சூடும், குண்டு வீச்சும் அன்றாட நிகழ்வாகவே தொடர்கின்றன. இந்த விவகாரத்தில் இஸ்ரேல் மீது துருக்கி மற்றும் எகிப்து நாடுகள் கடுமையாக குற்றம் சாட்டி உள்ளன. கத்தார் தலைநகர் தோஹாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட துருக்கி வெளியுறவு மந்திரி ஹக்கன் பிடன் செய்தியாளர்களிடம் பேசும்போது கூறியதாவது:-

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி காசாவில் தினந்தோறும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த விவகாரத்தில் இஸ்ரேல் பிரதமர் நேட்டன்யாகுவுடன், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மிகவும் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும். அமெரிக்கா தலையிடாவிட்டால், இஸ்ரேலின் தினசரி போர் நிறுத்த மீறல்களால், அங்கு அமைதி திட்டத்துக்கு பெரிய ஆபத்து ஏற்படும் என அஞ்சுகிறேன். எனவே இந்த ஆண்டு இறுதிக்குள் நேட்டன்யாகுவுடன் டிரம்ப் பேசுவார் என நினைக்கிறேன். முக்கியமாக, இந்த ஆண்டு இறுதியில் இஸ்ரேல் பிரதமர் அமெரிக்கா செல்லும்போது இந்த பேச்சுவார்த்தை நடக்கலாம். இவ்வாறு ஹக்கன் பிடன் கூறினார்.

முன்னதாக இஸ்ரேல் மீது எகிப்து வெளியுறவு மந்திரி பதர் அப்தெல்லட்டியும் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறியிருந்தார். இஸ்ரேலின் போர் நிறுத்த விதிமீறலை கண்காணிக்ககாசாஎல்லையில் அமைதிப்படையை நிறுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இந்த கருத்தை துருக்கி வெளியுறவு மந்திரியும் வற்புறுத்தி உள்ளார். இதற்கிடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பினர் தான் மீறுவதாகவும், இதற்கு பதிலடியாகத்தான் ராணுவம் தாக்குதல் தொடுப்பதாகவும் இஸ்ரேல் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.